# கல்கி

ஒலிம்பிக்ஸ்
ஸிட்னியிலிருந்து
EXCLUSIVE
முன்னோட்டம்!

KALKI
30.7.2000
ரூ. 5.00



"ஜாதி சங்கமெல்லாம் நூதன மோசடி!"

— விஜயகாந்த்

பாதுகாப்பான முதலீடு - நிலையான வருமானம்

# பவர் ஃபைனான்ஸ்

## தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

## முதலீடுகளுக்கு வழங்கப்படும் வட்டி விகிதங்கள்

| காலம் | முறையான வட்டி வழங்கும் திட்டம் (RIPS) | | | திரள் வட்டி வழங்கும் திட்டம் (CIPS - I) | | |
|---|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட உள்ள ஆண்டு வட்டி விகிதம் - | | அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல், 15H படிவம் இல்லாமல்) | முதிர்வுத் தொகை ரூ. 5,000/-த்திற்கு | ஒரு ஆண்டிற்கு பெறக்கூடிய வருவாய் விகிதம் | அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல், 15H படிவம் இல்லாமல்) |
| | மாதத்திற்கு | காலாண்டிற்கு | | | | |
| 12 மாதங்கள் | - | 10.59% | ரூ.47,000/- | ரூ. 5,551/- | 11.02% | ரூ. 45,000/- |
| 24 மாதங்கள் | - | 11.10% | ரூ.45,000/- | ரூ. 6,224/- | 12.24% | ரூ. 38,000/- |
| 36 மாதங்கள் | 12.00% | 12.12% | ரூ.41,000/- | ரூ. 7,155/- | 14.37% | ரூ. 31,000/- |
| 48 மாதங்கள் | 12.00% | 12.12% | ரூ.41,000/- | ரூ. 8,061/- | 15.31% | ரூ. 27,000/- |
| 60 மாதங்கள் | 12.00% | 12.12% | ரூ.41,000/- | ரூ. 9,085/- | 16.34% | ரூ. 24,000/- |

## திரள் வட்டி வழங்கும் திட்டம் (CIPS - II)

| காலம் | குறைந்த அளவு டெபாசிட் ரூ. | முதிர்வுத் தொகை ரூ. | ஒரு ஆண்டிற்கு பெறக்கூடிய வட்டி விகிதம் | அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல், 15H படிவம் இல்லாமல்) ரூ. |
|---|---|---|---|---|
| 60 மாதங்கள் | 550/- | 1,000/- | 16.34% | 23,650/- |

**தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)**


(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : என் 84, டிடிகே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894 மின் அஞ்சல் : powerfin@md3.vsnl.net.in
Visit us at : www.tnpowerfinance.com / www.tninfrafinance.com

28-9-99 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது

"Also available on the Internet" www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com



இன்டர்நெட் உலகுக்கொரு
இணையற்ற வழிகாட்டி-
தனிப்புத்தகமாகத் தயாராகிறது.

ஒரு புத்தகம், டாட்காம்;
இன்னொன்றில் என்ன
ஸ்பெஷல்?
பார்க்க – பக் : 92

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

பனகல் பூங்காவை அழித்து பார்க்கிங் வசதி செய்வதா, வேண்டாமா என்ற சர்ச்சை தொடர்ந்து கொண்டிருக்க... அதே பனகல் பூங்காவில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை ஐந்து மணிக்கு கூடும் சோப்புப் பெட்டி பேச்சாளர்கள், சர்ச்சைக்குரிய பல்வேறு நாட்டு நடப்புகளை காரசாரமாகப் பேசுகிறார்கள்.

லண்டன் ஹைடல் பூங்காவில் இன்றும் பிரபலமாக இருக்கும் இந்த சோப்பு பெட்டி மேடை, கருத்துச் சுதந்தரம் கட்டிக் காக்கப்படும் இங்கிலாந்து நாட்டில் அறிமுகமானதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் எதற்கும் பயம், எங்கும் பயம் என்றபடி விலகி ஓடும் குடிமக்களைக் கொண்ட இந்தியாவில் சோப்பு பெட்டி மேடையில் பேச துணிவுடன் பொது மக்கள் முன் வருகிறார்களா என்றால்...

"கடந்த நாற்பத்தி ஒன்பது வாரமாக நிரூபித்திருக்கிறார்கள். இந்தச் செய்தி உங்கள் பத்திரிகையில் வரும்போது பொன்விழா வாரம் கொண்டாடுவோம்" என்கிறார் எக்ஸோனரா அமைப்பு மூலம் இந்த மேடையை அமைத்திருக்கும் பொன். கலைமணி!

இதுவரை இரண்டாயிரத்து ஐந்நூறு பேர் இங்கே பேசி இருக்கிறார்கள். ஜாதி, மதம், இனம், மொழி, அரசியல் சாடாமல், தனிப்பட்ட மனிதரை விமர்சிக்காமல் இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு மனித நேயத்தை காக்கும் விதமாக புள்ளி விவரத்துடன் அதிக பட்சம் ஐந்து நிமிடம் பேசலாம் என்றவரிடம்... 'இன்னும் யாரும் வரவில்லையே என்றோம். இன்னும் அரை மணி நேரத்தில் பாருங்கள் என்றபடி' இரண்டு பேனர்களைக் கட்டினார். ஒருவர், இருவராக, பேச்சாளர்கள் வரத் தொடங்கினார்கள். மாலை மணி 5.30 ஆகியபோது கிட்டத்தட்ட நூறு பேர் கூடி விட்டார்கள். அமைப்பாளர் கலைமணி முதலில் ஏறிப் பேசினார். "தங்கள் உரிமைகளுக்காகவும், சமூகத்தில் நடக்கும் அநீதிகளுக்காகவும் குரல் கொடுக்க மனிதனுக்குத் தன்னம்பிக்கைதான் முக்கியம். அந்தத் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த சோப்பு பெட்டி மேடையைத்தொடங்கினோம். நமக்கு நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது. விரைவில் பனகல் பூங்காவிற்கு வெளியே பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் மைக் வைத்து ஒவ்வொரு வாரமும் பேசும் பொதுமேடையாக இதை மாற்றுவோம்" என்றவர் வெற்றிக்கோ என்பவரை முதலில் பேச, அழைத்தார். மேடையில் ஏறிய அவர், "இசை எங்கே இருக்கிறது? காற்றிலா, புல்லாங்குழலிலா? காட்டில் எத்தனையோ மூங்கில்கள் இருக்கின்றன. ஆனால் சில மூங்கில்கள்தான் புல்லாங்குழல் ஆகின்றன. எல்லா மூங்கில்களும் ஏன் புல்லாங்குழல் ஆவதில்லை? எந்த மூங்கில் அறுப்பதற்கும், துளைப்




பதற்கும் இணங்குகிறதோ அதுதான் புல்லாங்குழலாகப் புதுப் பிறவி எடுக்கும். இல்லையெனில் வீடு கட்ட பயன்படும். ஆனால் புல்லாங்குழல் ஆவதுதான் மூங்கிலின் பெரும்பயனாக இருக்க வேண்டும். எனவே காயம்பட கற்றுக் கொள்வோம். காயம் அவமானச் சின்னமல்ல. விழுப்புண். இங்கே கிட்டத்தட்ட நூற்றி ஐம்பது பேர் நிற்கிறீர்கள்... எனக்கு ஒரு கவிதைதான் ஞாபகத்திற்கு வருகிறது. "இந்தக் காட்டில் எந்த மூங்கில் புல்லாங்குழல்"

உங்களில் யாரெல்லாம் புல்லாங்குழல் ஆகப் போகிறீர்கள்... காலம் பதில் சொல்லும். தன்னம்பிக்கையோடு காயங்களை ஏற்றுக்கொள்ள நீங்கள் தயாராக இருந்தால்!" என்று வெற்றிக்கோ முடித்ததும் கரவொலி பனகல் பூங்காவை கிடுகிடுக்க வைத்தது!

அடுத்து தமிழும் தெலுங்கும் கலந்து பெண் சிசுவதைப் பற்றி வீராவேசமாகப் பேசியவர் பத்மாஜா. "பெண் சிசுக்கொலை என்றால் கள்ளிப் பட்டியை மட்டும் கை காட்டுகிறவர்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். நகரவாசிகளிடம்தான் பெண் சிசுக்கொலை அதிகம். எனது தோழி சென்னையின் பிரபலமான தனியார் மருத்துவமனை ஒன்றில் பணியாற்றுகிறார். அவள் சொன்ன தகவல்கள் என்னை அதிர்ச்சியுறச் செய்தன. காரணம், ஒரு நாளைக்குப் பத்திலிருந்து பதினைந்து பேர் கருக்கலைப்பு செய்து கொள்ள வருகிறார்களாம். அதில் திருமணமான பெண்கள் ஸ்கேன் செய்து பார்த்து பெண் சிசு என்று தெரிந்ததும் கருக்கலைப்பை துணிந்து செய்கிறார்கள். ஆணா? பெண்ணா எனக் கண்டுபிடிக்க ஸ்கேன் இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும்'' என்று முடித்தார்...

அடுத்து அருண்சர்மா மேடையேறினார். தமிழ், மலையாள மொழிப் படங்களை ஹிந்தி மொழிக்கு டப்

# சோப்பு பெட்டி மேடை!




• பத்மாஜா

செய்யும் இவர், பனகல் சோப்பு பெட்டி பேச்சாளர்களில் முக்கியமானவராம். சமீபத்தில் கலாபாணி படத்தை டப் செய்தது பற்றி நெகிழ்ச்சியுடன் பேசினார். "இந்திய சுதந்திரத்திற்காகப்போராடியவர்களை அந்தமானில் உள்ள கலாபாணி சிறையில் அடைத்து எப்படியெல்லாம் கொடுமைப் படுத்தினார்கள் என்பதை அறிந்து இதயம் கொதித்தது. ஆனால் சுதந்திர இந்தியாவில் கலாபாணி சிறையைவிட கொடுமையான இடங்கள் எத்தனை இருக்கின்றன. குடிக்க தண்ணீர் இல்லாமல் ராஜஸ்தான், ஒரிசா மக்கள், ஒவ்வொரு வருடமும் சாகிறார்கள். ஆனால் ஐம்பது ஆண்டுகள் ஆகியும் இன்னும் இந்த அரசுகள் ஏன் இதற்கு நிரந்தர தீர்வு காணவில்லை. லஞ்சம், ஊழல், ஏழ்மை, வறுமை இவற்றை ஒழிக்க உருப்படியாக இவர்கள் என்ன செய்தார்கள்?

"இதே நிலை நீடித்தால் இன்னொரு சுதந்தரப் போராட்டம் இங்கே வெடிக்கப் போவது உறுதி. அப்படிப் போராடுபவர்களைப் பிடித்துப் போய் கலாபாணி போல ராஜாஸ்தானில் அடைத்தாலும் அடைப்பார்கள் நம் அரசியல்வாதிகள்" என்று முடித்தார்...

அடுத்து பேச அழைக்கப்பட்டவர் வைத்தியநாதன்.

''ஜூன் 25ஆம் தேதியை மறக்கவே முடியாது. அன்றைக்குத்தான் எமர்ஜென்ஸியைக் கொண்டு வந்தார்கள். பத்தொன்பது மாதம் நீடித்த அந்தக் கொடுமையான காலத்தை நினைத்துப் பார்க்கிறேன்'' என்றபடி அடுக்கடுக்கான சம்பவங்களை நினைவு கூர்ந்து ''இனியொரு எமர்ஜென்சிக்கு நாம் இடம் தரக் கூடாது. மக்கள் தான் மன்னர்கள், மற்றவர்கள் மடையர்கள்'' என்று வெடித்துக் கிளம்பினார்!

கூட்டம் ஒன்பது மணி வரை நீடித்தது.

யார் வேண்டுமானாலும் என் மீது ஏறிப் பேசலாம் என்று அழைப்பு விடுக்கும் அந்த சோப்பு பெட்டி மேடையின் உயரம் ஒன்றரை அடி. அகலம் ஒன்றரை அடி. நீளம் இரண்டு அடி!

**- லியோ**

படங்கள்: **வெங்கடேஷ்**

**பாலசந்தர், விசு போன்ற இயக்குனர்கள் தொலைக்காட்சிப் பக்கம் போய் விட்டார்கள். குடும்பப் படமெடுக்க வேறு ஆள் இல்லை என்றுதான் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டீர்களா?**

இல்லவே இல்லை. ஆனால் அவர்கள் என்னை வெகுவாகப் பாதித்திருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறேன். கே. எஸ். கோபாலகிருஷ்ணன், பீம்சிங் போன்ற இயக்குனர்களுக்குப் பிறகு குடும்பப் பிரச்னைகளை சினிமாவுக்குக் கொண்டு வந்தவர் பாலசந்தர்தான். தினசரி வாழ்க்கையில் நாம் பார்க்கும் பல நிஜ கேரக்டர்களை, கொஞ்சம் 'புத்திசாலித்தனம் ஏற்றி'க் காட்டுவதில் அவருக்கு வெற்றி கிடைத்தது. ஆனால் விசு இது போன்ற பாத்திரங்களுக்குப் பதிலாக பிரச்னைகள் மீது கைவைத்தார். ஆனால் அவர் நடிக்கத் தொடங்கியதும், அவரைச் சுற்றிப் பின்னப்பட்ட கதையில் ஹீரோயிசம் அப்பட்டமாகத் தெரிய ஆரம்பித்தது. இதனால் விசுதான் பெரிதாகத் தெரிந்தார். பிரச்னைகள் பின்தங்கி விட்டன. ஆனாலும் நடுத்தரக் குடும்பத்தையும், அதன் பிரச்னைகளையும் களப்படுத்தியதில் இவர்கள் இருவருக்கும் பெரிய பங்கு உண்டு. அதற்குக் காரணம் இருவருமே நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆனால் நான் கீழ் மத்தியதர வர்க்கத்தில் பிறந்தேன். ஒரு மலேரியா இன்ஸ்பெக்டராக எல்லா தரப்பு மக்களோடும் பழகி இருக்கிறேன். அவர்களது பிரச்னைகளை அருகிருந்து கவனித்திருக்கிறேன். ஆலோசனை கூறியிருக்கிறேன். நான் பிறந்து வளர்ந்தது ஒரு கூட்டுக் குடும்பத்தில். எனது மனைவியும் அப்படித்தான். எனவேதான் கீழ்நடுத்தர வர்க்கத்தையும், வேலைக்குப் போகும் பிரிவினரையும் நான் தொடுகிறேன். அதுதான் எனது பலம். எனது படங்களில்

பிரச்னை
கள்தான் தெரியும். இயக்குன
தெரிய மாட்டார்.

**ஆனாலும் திரும்பத் திரும்ப, கூட்டுக் குடும்பம், அண்ணன் தம்பி, கணவன், மனைவி என்று ஒரே பிரச்னைகளையே எடுக்கிறோமே என்ற பயம் வரவில்லையா? தலைப்புகளைக் கூட ஒண்ணா இருக்கக் கத்துக்கணும், கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்று தைரியமாக வைக்கிறீர்களே?**

இன்றைக்குச்

''இந்த இயக்குநரின் படம் நூறு நாள் ஓடுமய்யா!'' — என்று கோலிவுட்காரர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும் ஒரே இயக்குனர், வி. சேகர். நடுத்தர மக்களின் குடும்பப் பிரச்னைகளை மட்டுமே கதைக்களமாக வைத்துக் கொண்டு, விரலுக்கேத்த வீக்கத்துடன் பட்ஜெட் படமெடுக்கும் இவர், குடிசைவாசி முதல் கோபுரத்துக்காரர்கள் வரை எல்லோர் வீட்டிலும் ஏறி இறங்கும் மலேரியா இன்ஸ்பெக்டராக வாழ்க்கையைத் தொடங்கியவர். அந்த வேலைதான் தன்னை சினிமாவுக்கு இழுத்து வந்தது என்கிறார்.

சினிமா பார்க்க தியேட்டர்களுக்கு வருகிறவர்கள் யார்? நடுத்தர மக்கள். அவர்கள் பிரச்னையைப் படமாகப் பார்க்கிறபோது, 'அட, இது நம் கதையாச்சே' என்று ஒன்றி விடுகிறார்கள்.

# ''சினிமாவில் சொல்வதை

பிரச்னைக்
கான தீர்வை,
சினிமாத்தனம் கொஞ்சமும் இல்லாமல் சொல்கிறபோது முடிவெடுக்கும் தன்னம்பிக்கையை நிரப்பிக் கொண்டு தியேட்டரை விட்டு வெளியே போகிறார்கள். மற்றவர்



களையும் படத்தைப் பார்க்கும்படி சிபாரிசு செய்கிறார்கள். இன்றைக்கிருக்கும் பிரச்னைகளைச் சொல்லி அதற்கான தீர்வையும் சொன்னால் படம் கட்டாயம் ஓடும். அதற்கு டைட்டிலில் கூடத் தேவையில்லை.

**இப்படிச் செய்யும்போது வறட்டு அறிவுரையாகவோ, பிரசார**

# வாழ்க்கையில் செய்கிறேன்!"

**மாகவோ மாறிவிடும் அபாயம் இருக்கிறதே?**

அப்படி நேர்ந்து விடாமல் இருக்கத்தான் திரைக் கதையில் கொஞ்சம் திருப்பங்களைச் சேர்க்க வேண்டியிருக்கிறது. பாடல்களும், உணர்ச்சிமயமாக்கலும் தேவைப்படுகின்றன. இதுமாதிரியான அபாயத்தை நான் ஸ்கிரிப்டிலேயே வெட்டித் தள்ளி விடுவேன். படச்சுருளுக்கு நான் பாதகம் செய்வதில்லை.

**இப்போது வெளியாகியிருக்கும் 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' படத்தில் கூட்டுக் குடும்பம் தான் சமூக மறுமலர்ச்சிக்கு ஒரே வழி என்று வலியுறுத்தி இருக்கிறீர்கள். அப்படியானால் தனிக் குடித்தனமே கூடாது என்பது தான் உங்கள் கொள்கையா?**

நிச்சயமாக இல்லை. பணம் படைத்த மேல்தட்டு மக்களுக்குத் தனிக்குடித்தனம் ஒரு பொருட்டே அல்ல. கீழ்தட்டு, நடுத்தர மக்கள் தனிக்குடித்தனத்தால் அனுபவிக்கும் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. இன்று சென்னையில் இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறைந்து வாடகை வீடு கிடையாது. அதுவே மூன்று அண்ணன், தம்பிகள் ரூபாய் மூவாயிரம் வாடகையில் ஒரே வீட்டில் வசிக்க முடியும். வாடகை மிச்சம், உணவுச் செலவும் மிச்சம். அதை விட குடும்பத்தில் ஏற்படும் பூசல்களை உடனுக்குடன் தீர்க்க முடியும்.

பெரியவர்களை விட்டுத் தனியே வாழும் இளஞ்ஜோடிகள் சின்னச் சண்டைக்கே விவாகரத்து வரை போய் விடுகிறார்கள். ஈகோவிற்குள் மாட்டிக் கொண்டு முழிக்கிறார்கள். அவர்களுக்கு அருகிருந்து ஆலோசனை கூற அங்கே ஆள் இல்லை. கூட்டுக் குடும்பத்தில் போட்டி போட்டுக் கொண்டு பரஸ்பரம் உதவிக் கொள்ள முடியும். அங்கே விரைவான முன்னேற்றமும் இருக்கும்! தனிக்குடித்தனத்தில் இது



**லா**ரல், ஹார்டி சகிதம் யானை, ஒட்டகச்சிவிங்கி என்று எல்லா மிருகங்களும், பாண்டிபஜாரில் ஊர்வலம் வந்தபோது, ஒரிசாவில், அநியாய மாக இறந்துபோன புலிகளுக்கு அனுதாபம் தெரிவித்து ஊர்வலம் போவதாகத்தான் முதலில் மக்கள் நினைத்தனர். அப்புறம் விசாரித்ததில் புதிதாகத் திறந்திருக்கும் குழந்தைகள் விளையாட்டு பொம்மைகள் மற்றும் உடை கடைத் துவக்க விழாவுக்கான விளம்பர ஊர்வலம் என்று தெரிந்தது! இதற் கென்றே பெங்களூரிலிருந்து பிரத்யேகமாக இந்த மிருக உடைகள் வரவழைக்கப்பட்டன வாம்.

தகவல் : மானஸா
படம் : யோகா

சாத்தியமில்லை.

**இதையெல்லாம் மீறி நீங்கள் குடும்பப் படம் எடுப்பதற்குத் தனிப்பட்ட காரணம் ஏதாவது உண்டா?**

சினிமாவில் சம்பாதிக்கும் பணம் 'ஒட்ட' வேண்டும் என்று நினைக்கிறேன். அந்த வகையில் மக்கள் பிரச்னைகளைச் சொல்வ தால் குற்றவுணர்ச்சி இல்லாமல் நிம்மதியாக சினிமா வாழ்க்கை நகர்கிறது.

**வருடத்திற்கு இரண்டு படம் எடுத்த நீங்கள் இப்போது ஒரு படமாகக் குறைத்துக் கொண்டு விட்டது ஏன்?**

சொல்வதைச் செயலிலும் கடைபிடிக்க வேண்டும் என்ற கொள்கைதான். குடும்பம், மனைவி, பிள்ளை என்று படமெடுத்து விட்டு, நான் அவர்களை கவனிக்காமல் விட்டு விட்டால் அது அபத்தம். முன்பு ஆறு மாதத்திற்கு ஒரு படம் எடுத்தபோது வீட்டிற்கே வர முடியாது. உதவி இயக்குனர் கள் தொடங்கி எனது யூனிட் ஆட்கள் யாரும் ஊருக்கே போக முடியாது. இதை முதலில் மாற்ற வேண்டும் என்று நினைத் தேன். இப்போது ஒரு படம் முடிந்ததும், சுற்றுலா, உறவினர்களைச் சென்று பார்ப் பது, குடும்பத்தோடு அதிக நேரம் செல விடுவது என்று ஒவ்வொரு நாளும் அர்த்த முள்ளதாக இருக்கிறது. உதவி இயக்குனர் களுக்கும் விடுமுறை கொடுத்து அனுப்ப முடிகிறது. ஓய்வு எடுத்துக் கொள்வதன் மூலம் ஒவ்வொரு படமும் தரமாக வரு கிறது.

**தமிழ் சினிமா படுத்துக் கிடப்பதற்கு திருட்டு வீடியோ மட்டுமே காரணம் என்று நினைக்கிறீர்களா?**

நிச்சயமாக இல்லை. குறைந்த பட்ஜெட் படங்கள் எடுக்காததுதான் இந்த வீழ்ச்சிக்கு முக்கியக் காரணம். பல கோடிகளைப் போட்டுப் படமெடுத்து, கை சுட்டுக் கொண்ட பல தயாரிப்பாளர்கள் சினி மாவை விட்டே ஒதுங்கி விட்டார்கள். இப் போது இருப்பவர்களையும் விரல் விட்டு எண்ணி விடலாம். இந்த நிலை மாற வேண்டும் என்றால் ஒரு கோடிக்குள் படமெடுக்க வேண்டும். சிறு தொழில் களைப் பாதுகாக்க வேண்டும் என்று, அதற் கென தொழிற்பேட்டையில் இடம் கொடுத்து, விற்பனை வரி நீக்கி மானியம் தரும் அரசாங்கம், சிறிய பட்ஜெட் சினிமா படங்களை மட்டும் ஏன் புறக்கணிக்க வேண்டும்? சிறிய பட்ஜெட் படங்களுக்குக் கேளிக்கை வரியை முழுதுமாக ரத்து செய்தால்தான் தியேட்டரில் டிக்கெட் விலை குறையும்; மக்கள் படம்பார்க்க வரு வார்கள். இல்லையெனில் பெரிய படங்கள், சின்னப் படங்களை மிதித்து விட்டுப் போய்விடும். அரசுதான் பட்ஜெட் படங் களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும். கதையை நம்பிப் படமெடுக்க முன்வரும் புதிய இயக்குனர்கள் பட்ஜெட் படமெடுப் பதை ஒரு கொள்கை முடிவாகவே வைத்துக் கொண்டால் எதிர்கால சினிமாவுக்கு நல்லது.

பேட்டி : விஷ்ணுவல்தாசன்
படங்கள் : வெங்கடேஷ்

---

"ஆபரேஷன்னதுமே அவர் விரக்தி யடைஞ்சுட்டார்"

"எப்படி சொல்றீங்க?"

"உடல் மருத்துவக் கல்லூரிக்கு... உயிர் டாக்டருக்குனு சொல்றாரே!"

- பா. விஸ்வநாதன்



BPL
ONIDA
SAMSUNG
LG
Godrej
IFB
THOMSON
Whirlpool
aiwa
COUNTERWISE

# BREAKING NEWS

புதிய


அதி நவீன குளுகுளு ஷோரூம்

# SHAH'S

இப்பொழுது

## புரசைவாக்கத்திலும்

144/2, புரசைவாக்கம் ஹைரோடு (அபிராமி தியேட்டர் அருகில்)



கலர் டிவி, ரெப்ரிஜிரேட்டர், வாஷிங் மிஷின்,
மைக்ரோவேவ் அவன், மியூசிக் சிஸ்டம்

- கிரெடிட் கார்டுகள் ஏற்றுக் கொள்ளப்படும்
- உங்கள் பழைய ரெப்ரிஜிரேட்டர் மற்றும் கலர் டீவிகளுக்கு எக்ஸலண்ட் எக்ஸ்சேஞ்ச் ஸ்கீமில் ரூ8000 வரை தள்ளுபடி *
- கிரெடிட் கார்டு மற்றும் HP கஸ்டமர்களுக்கும் ஷாவின் சிறப்பு விலை தள்ளுபடி உண்டு
- சென்னை நகர எல்லைக்குள் இலவச டெலிவரி

# SHAH'S

*The Name That Spells Confidence*

புரசைவாக்கம்: 144/2, புரசைவாக்கம் ஹை ரோடு, (அபிராமி தியேட்டர் அருகில்)
சென்னை-10 போன்: 641 11 20 / 641 71 80 PARKING FACILITY AVAILABLE

அண்ணா சாலை: 158, மவுண்ட் ரோடு (ஸ்பென்சர் எதிரில்) சென்னை-2
போன்: 852 26 59 / 852 38 71 CAR PARKING/CLUB HOUSE ROAD / PATTULLOS ROAD

தேனாம்பேட்டை: 518, மவுண்ட் ரோடு, தேனாம்பேட்டை (எல்டாம்ஸ் ரோடு சிக்னல்)
சென்னை-18 போன்: 434 92 68 / 431 04 62 PARKING FACILITY AVAILABLE

RAAJA ADVERTISING / S / 149

# வாசனை

முதலில் மௌனம் கலைத்தது; பிறகு வண்ணம் பூசிக்கொண்டது; அடுத்து அகண்ட திரை, டிடிஎஸ் ஒலியமைப்பு, என வரிசையாகப் புதுப்பரிமாணங்களைக் கண்ட சினிமாவுக்கு இப்போது 'வாசனை' வந்திருக்கிறது!

காட்சிக்குப் பொருத்தமான வாசனையை திரையரங்கினுள் பரவ விட்டு, பார்வையாளர்கள் அதை நுகர்ந்து ரசிக்கும்படி செய்வது சாத்தியமா என்ற பெருத்த சந்தேகத்துடன் பிலிம் சேம்பர் அரங்கிற்குள் நுழைந்தோம்.

நம்மோடு சுமார் முன்னூறு கண் தெரியாத, வாய் பேச முடியாத 'லிட்டில் பிளவர்' பள்ளிக் குழந்தைகளும் படம் பார்க்க வந்திருந்தனர்.

ஸாரி, நுகர்ந்து, கேட்டு, ரசிக்க வந்திருந்தார்கள். வாசனை எப்படி வரும்? எங்கிருந்து வரும்? என்று ஏகப்பட்ட கேள்விகளோடு, பத்திரிகையாளர்கள், தொலைக் காட்சியினர் எதிர்பார்த்துக் கொண்டிருக்க, இந்த 'நாகலிங்கம்' படத்தின் ஹீரோ, தயாரிப்பாளர், இயக்குனர் பாபு கணேஷ் பேசத் தொடங்கினார்.

"மக்கள் டீவியில் மயங்கி விட்டார்கள். போதாக்குறைக்கு, படம் வெளிவருவதற்கு முன்பே திருட்டு வீடியோ, சிடிகளில் பார்க்கிறார்கள். இந்தப் படத்தைத் திருட்டு வீடியோவில் பார்க்க முடியாது. தியேட்டரில் மட்டும்தான் வாசனை வரும். எனவே மக்களைத் தியேட்டருக்கு இழுக்கவும் திருட்டு வீடியோவை ஒழிக்கவும், வாசனைத் திரைப்படம்தான் ஒரே வழி'' என்று ஜோக் அடித்தார்.

படம் தொடங்குவதற்கு முன்பே தியேட்டரில் கலகல. உலகின் முதல் வாசனைத் திரைப்படம் என்று எந்த தைரியத்தில் விளம்பரம் செய்திருக்கிறீர்கள்? காட்சிக்கு ஏற்ற வாசனையைப் போடுவது கட்டுப்படியாகிற விஷயமா? என்று ஒரு நிருபர் கேட்க, பாபு கணேஷ் சளைக்கவில்லை.

"பாம்பு வரும் காட்சியில் மல்லிகைப் பூ வாசனையும், மந்திரவாதி வரும் காட்சியில் சந்தன வாசனையும், ரோஜாவே... ரோஜாவே பாட்டு வரும்போது ரோஜாப்பூ வாசனையும் வரும். சென்னையில் உள்ள ஒரு புகழ்பெற்ற நிறுவனம் தயாரிக்கும் "புஷ்பொக்கே' என்ற வாசனைத் திரவத்தை பயன்படுத்துகிறோம்... இதில் இருபது சதவீதம் எத்தில் ஆல்கஹாலும் எண்பது சதவீதம் தண்ணீரும் கலந்திருக்கிறது. விலை மிக மலிவு!''


அடுத்த நிருபர் மீண்டும் குரல் கொடுத்தார் : "பாம்பு வரும் காட்சியில் தாழம்பூ வாசனையும், மந்திரவாதி வரும் போது சாம்பிராணி வாசனையும் வரும் என்று முன்பு சொன்னீர்களே? இப்போ என்ன ஆச்சு?''


இதற்குப் பதில் சொல்லாத பாபு கணேஷ், பாம்பு மாதிரி நெளிந்தார்.

வில்லன் வந்து தண்ணியடிக்கும்போது



• 'நாகலிங்கம்'





• பாபுகணேஷ்

ஆர்கெஸ்ட்ரா மேடைகளில் 'புகை' எபெக்ட் போடும் ஸ்மோக்மெஷின் அல்லவா இது? என்ற நமது திறமையான கண்டுபிடிப்பை ஒப்புக் கொண்ட பாபுகணேஷ், "படத்திற்காகத் தயாரித்த 'வாசனை மெஷின்களை' மக்கள் பார்க்கும் தியேட்டரில்தான் வைப்பேன்" என்று புதிய திரைக்கதை அமைக்க ஆரம்பித்தார்.

சரி, படம் முடியட்டும்; பார்த்துக் கொள்ளலாம் என்று பத்திரிகையாளர்கள் அமைதியாகி விட, படம் தொடங்கியது...

சிவன் கோவில் சொத்துக்களைக் கொள்ளையடித்து, பாம்புத் தோல் வியாபாரம் செய்த ஒரு குடும்பத்தை, நாகலோகத்திலிருந்து வரும் பாம்புகள் கடித்துக் கொன்று விட, அந்தக் குடும்பத்திலிருந்து ஹீரோயின் மட்டும் தப்பி விடுகிறாள்.

# வருது பார்!

அமெரிக்காவில் படித்து விட்டு நாடு திரும்பும் அவளுக்காக ஒரு ஆண் நாகம் காத்திருக்கிறது - பலி வாங்குவதற்கு அல்ல; காதலித்துக் கைப்பிடிப்பதற்கு! (இராமநாராயணன் இனி நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொள்ளலாம்!) இவ்வாறாக 'அற்புதத் திருப்பங்களுடன்' கற்காலத்துக்குப் பொற்பாதை போடுகிறது கதை.

பிராந்தி வாசனையும், சிக்கன் சாப்பிடும் போது சிக்கன் வாசனையும் வருமா என்று ஒரு நிருபர் அப்பாவியாகக் கேட்டு வைக்க... அதுக்கெல்லாம் ஏதுப்பா வசதி என்று இன்னொரு நிருபர் பாபு கணேஷுக்கு பதிலாக பதில் சொல்ல, நம் பங்குக்கு ஏதாவது உருப்படியாகக் கேட்க வேண்டாமா?

"வாசனையை வெளியிடும் கருவியைக் கண்டுபிடித்தது யார்? தியேட்டரில் அது எங்கே இருக்கும்?'' என்றதும் உஷாராகி விட்டார்.

"அதை எல்லோரும் காப்பியடித்து விடுவார்கள். எனவே அதை போட்டோ எடுக்க வேண்டாம்" என்று வேண்டுகோள் விடுத்தவர், திரைக்கு முன்பு வெவ்வேறு திசைகளில் வைக்கப்பட்டிருந்த மூன்று ஸ்டெபிலைசர் சைஸ் பெட்டிகளைக் காட்டினார்.

அட!




சரி தியேட்டருக்குள் இந்த வாசனை விவகாரம் எப்படி இருந்தது?

படத்தில் காமெடி இல்லாத குறையைப் போக்கியது இது தான்!

முதல் காட்சியிலேயே பாம்பு வர, திரைக்கு முன் இருந்த ஸ்மோக்கர் மிஷினிலிருந்து குபுகுபுவென்று எழுந்த புகை படத்தையே ஒரு நிமிடம் மறைத்து விட்டது.

# அருள்வாக்கு

ஒருத்தன் தன் வேலை, வீட்டு வேலைகளை மற்றவர்களிடம் விட்டுவிட்டுப் பொதுப்பணிக்குப் போகிறான் என்னும்பொழுது, அந்த மற்ற



பேருக்கு இவனிடம் ஏற்படுகிற அதிருப்தியில் ஸமூஹத்தொண்டே பிடிக்காமல் போய்விடுகிறது. ''போதும். இவனொருத்தன் ஊர்க்கார்யம் என்று உழப்பறித்துக்கொண்டு அகத்துக் காரியத்தை விட்டிருப்பது. நமக்கு இந்த ஸேவையும் கீவையும் வேண்டவே வேண்டாம்'' என்று அவர்களுக்கு ஒதுங்கிப் போகத் தோன்றிவிடும். அதுவே அவன் அளவறிந்து அகத்துக் காரியத்தையும் கவனித்துக் கொண்டு பொதுக் காரியமும் பண்ணினானென்றால் அப்போது வீட்டின் மற்ற மநுஷ்யர்களும் இவனோடு கூட வெளித் தொண்டுக்கு வந்து தங்களாலானதைச் செய்வார்கள். வீட்டுக் காரியத்தைக் கவனிப்பதால் இவனொருத்தன் செய்யும் ஸோஷல் ஸர்வீஸ் குறைந்து போகிறதென்றால், இப்போது அதைவிட ஜாஸ்தியாக மற்றவர்களின் ஸர்வீஸ் ஸொஸைட்டிக்குக் கிடைத்துவிடும். இவன் அதிதியாகப் போய் வீட்டு மநுஷ்யர்களின் அதிருப்தியை ஸம்பாதித்துக் கொள்ளும்போதோ, தன் நோக்கத்துக்கே பாதகமாக, அவர்களால் ஏற்படக்கூடிய ஸோஷல் ஸர்வீஸைத் தடுத்து விடுகிறான்.

தொண்டுக்குப் போகிறவர்களுக்கு ஒரு 'ட்ரிக்' சொல்லித் தருகிறேன். அன்போடு, பதவிசாக நடப்பதுதான் 'ட்ரிக்'. வெளி மநுஷ்யர்களிடம் மட்டுமில்லை, அகத்துப் பேரிடமும் இப்படிப் பரிவாக, பணிவாக இருந்தானானால் அவர்களே, ''நாம்தான் வீட்டையே கட்டிக்கொண்டு அழுகிறோம். இவனாவது லோகத்துக்குப் பண்ணி, நமக்கும் சேர்த்துப் புண்யம் ஸம்பாதித்துத் தரட்டும்'' என்று நினைத்து அவனிடம் வீட்டு வேலைகளைக் கூடிய மட்டும் காட்டாமல் தாங்களே பண்ணுவார்கள்.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்**

கொஞ்ச நேரத்தில் தியேட்டர் முழுக்க மல்லிகைப் பூ வாசனை. ஆஹா ஒரு தமிழன் உலகிலேயே முதல் வாசனைப் படத்தைத் தயாரித்து விட்டான் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்க, படத்தில் மந்திரவாதி தோன்றினான்.

அடுத்து சந்தன வாசனை வரப் போகிறது என்று எதிர்பார்த்த எல்லோருக்கும் ஏமாற்றம். மற்றொரு மிஷினிலிருந்து புகைந்த சந்தன வாசனை, ஏற்கெனவே தியேட்டரை விட்டுப் போகாத நிலையில் சுற்றிக் கொண்டிருந்த மல்லிகை வாசத்துடன் கலந்து குடலைப் புரட்டியது.

ரோஜா பாடலுக்கும் இதே நிலைதான்!

ஐயோ பாவமாகப் படம் பார்த்துக் கொண்டிருந்த குழந்தைகள், எப்போது படம் முடியும் என்று பரிதவிக்கத் தொடங்கி விட்டார்கள்!

முதல் காட்சியையும், அதற்குப் போடப்பட்ட வாசனையையும் படம் பிடித்துக்கொண்டு அவசர அவசரமாகக் கிளம்பிப் போன தொலைக்காட்சியினர் சூட்டோடு சூடாக ஏழு மணிச் செய்தியில் காட்டினார்கள் என்பதுதான் இதில் பெரிய கூத்து.

படம் முடிந்து வெளியே வந்த குழந்தைகளிடம் வெவ்வேறு வாசனைகள் வந்ததா என்றதும் ''ஒரே வாசனைதான்'' என்றார்கள், கோரஸாக.

இயக்குனரை மடக்கினோம். ''படம் முழுக்க பாம்பு வருகிற மாதிரி செய்து விட்டீர்கள். ஆகவே, ஒரே வாசனைதான் வருகிறது என்பதும் பார்வையாளர்களுக்குத் தெரிகிறது. தியேட்டரை விட்டுப் போகாத வாசனை, ஒரு கட்டத்திற்கு மேல் எரிச்சலை உண்டாக்குகிறது; இத்தனை குறைபாடுகளோடு இதை எப்படி கின்னஸ் சாதனைக்கு எடுத்துச் செல்வீர்கள்?'' என்றால்,

''அதெல்லாம் தெரியாது. எனது சாதனைக்கு நிச்சயம் அங்கீகாரம் கிடைக்கும்'' என்கிறார்.

யார் கண்டது? கின்னஸ் கூடக் கலைமாமணிதானோ என்னவோ?


**— லியோ**

PH


வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

**Prasanna**

தென் திருப்பதியாம் குணசீலம் – இங்கு தயாராகும் எங்களது தரமான பிரசன்னா
Ceiling Fans, Stabilizers, Invertors ஆகியவற்றை வாங்கி பயன்பெறுங்கள்!



பிரசன்னா என்றால் தரம்!
அதுவே எங்களது தாரக
மந்திரம்!



புகழ்பெற்ற தரம்வாய்ந்த பிரசன்னா தயாரிப்புகள் கிடைக்குமிடங்கள்

**Prasanna Enterprises**
15, North Adayavalanjan
Street,
Srirangam - 620 006.
Tel : 0431/431622

**Prasanna Home**
**Appliances Pvt Ltd.,**
HIG 324 New Royakota Housing
Colony, Hosur - 635 109.
Tel : 04344/22396
Tel fax : 04344/23114

Works : **Prasanna Home Appliances Pvt. Ltd.,**
3/64 East Street, Gunaseelam - 621 203.

மதிப்பு மிக்க வீட்டுமனை
சென்னைக்கு அருகில்
உங்கள் பட்ஜெட்டுக்கு மிக அருகில்

# ஸ்ரீ ரங்கா நகர்

DTCP அப்ருவ்டு மனைகள் (904/90)

## திருவள்ளூர்

(ஹிந்துஸ்தான் மோட்டார் பேக்டரி அருகில்)

**சிறப்பு அம்சங்கள்**

• சென்னை சென்ட்ரலில் இருந்து 60 நிமிடம் • மாவட்ட தலைநகர் • தாராளமான பஸ் மற்றும் ரயில் வசதிகள் • நேர்த்தியான தார் ரோடு • உடனடியாக வீடு கட்டலாம், அருகிலேயே வீடுகள் • சுவையான மிகுதியான நிலத்தடிநீர் • வேகமாக வளர்ச்சியடையும் இடம் • புகழ்பெற்ற வைணவத் திருத்தலம் • சுத்தமான பத்திரம் • நம்பகமான நிறுவனம் • 5 வருட மனை பாதுகாப்பு சேவை.

**தவணை முறை உண்டு**

சிறந்த வீட்டு மனைகள்
சென்னையில்
MMDA அப்ருவ்டு மனைகள் நெ. 65/99

# சிந்து நகர்

## சென்னை-56.

(மதுரவாயில் அடுத்து, சவிதா டெண்டல் காலேஜ் அருகில்)

**சிறப்பு அம்சங்கள்**

• உடனே வீடு கட்டலாம் / அருகில் வீடுகள் • கோயம்பேட்டிலிருந்து 10 நிமிட பயணம் • சுலபமான மூன்று வழிப் பாதைகள், கிண்டி செயின்ட்தாமஸ் மவுண்ட் போரூர் 100 அடி சாலை, அரும்பாக்கம் கோயம்பேடு மதுரவாயில் 100 அடி சாலை / அம்பத்தூர் ஆவடி 60 அடி சாலை • சென்னை பெங்களூர் [NH4] தேசிய நெடுஞ்சாலை • கோயம்பேட்டில் அமைந்துவரும் பிரம்மாண்ட பஸ் நிலையம் • தாம்பரம்-வானகரம் புறவழிச் சாலை • மாநகரின் அனைத்து பகுதிகளுக்கும் தாராளமான பஸ் வசதி • மெடிக்கல், டெண்டல், இஞ்சினியரிங், கேட்டரிங், ஆர்ட்ஸ் கல்லூரிகள் மிக அருகில் • சுவையான / மிகுதியான நிலத்தடிநீர் • சுத்தமான பத்திரம் / நம்பகமான நிறுவனம் • 5 வருடங்களுக்கு மனை பாதுகாப்பு சேவை.

**தவணை முறை இல்லை**

இலவச வாகன வசதி : மனையை பார்வையிட தினமும் காலை 7.00 மணி, 11.00 மணி மற்றும் மாலை 3.00 மணி
போன் : 435 7721 / 31 / 61 / 81. ஃபேக்ஸ் : 4353183 செல்போன் : 98400 44018

BLB

# BLB Estates (P) Ltd.


S-3, "RAMANA FLATS", No.27, RATHNA NAGAR, Off : ANNA SALAI, TEYNAMPET, CHENNAI - 600 018.

வர்த்தகத்தில் நேர்மை; பணியில் பொறுப்பு

**தொ**லைக்காட்சி நிகழ்ச்சிகள் படுத்தும் பாட்டின் விபரீத விளைவுதான் இக்கற்பனை. இதே ரகமான தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் விரைவில் வராது என்றும் சொல்வதற்கில்லை.

<u>சந்தித்துத் தொலைப்போம்: தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவருடன் ஒரு சந்திப்பு.</u>

● வணக்கம், திரு இளங்கோவன் அவர்களே. காங்கிரசில் பல கோஷ்டிகள் இருக்கின்றன என்பது எல்லாருக்கும் தெரிந்த உண்மை. தற்சமயம் எத்தனை கோஷ்டிகள் இருக்



கின்றன என்று சொல்ல முடியுமா?

இதற்கு நான் பதில் சொல்லி முடிப்பதற்குள் இன்னொரு புது கோஷ்டி உருவாகியிருக்கும். அதுதான் காங்கிரஸ் கட்சியின் தனிச் சிறப்பு. கோஷ்டிகள் எத்தனை இருந்தாலும், ஒருவருக்கொருவர் அமைதியாகவே அடித்துக் கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். முக்கியமாக, தில்லியிலிருந்து தலைவர்கள் வந்து பங்கேற்கும் கூட்டங்களில், அவர்கள் முன்னாலேயே எல்லா கோஷ்டிகளும் அடித்துக் கொள்ளுவது அநாகரிகமானது. அவர்கள் போன பிறகோ, அவசர, ஆத்திரமாக இருந்தால் மேடைக்குப் பின்னாலோ, கோஷ்டிகள் மோதிக் கொள்ளலாம் என்பது என் கருத்து. தங்கபாலு, அன்பரசு, பிரபு எல்லோரும் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

● சத்தியமூர்த்தி பவனை நீங்களாவது மீட்பீர்களா?

அது தேவை இல்லை. மீட்டால் நிரந்தரமாக அதுவே காங்கிரஸ் கட்சி அலுவலகம் ஆகிவிடும். இப்போது பாருங்கள், வாடகைக்கு இடம் எடுத்துக் கட்சி அலுவலகத்தை நடத்துகிறோம். வாடகை பாக்கி சேருகிறபோது எல்லா பத்திரிகைகளும் அது பற்றிய செய்தி வெளியிடுகின்றன. அப்போது மக்கள், தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி இன்னும் இருக்கிறது என்று நினைவு வைத்துக் கொள்ளுகிறார்கள். இல்லையா?

● மூப்பனாருடன் இணைந்து செயல்படுவீர்களா? அடுத்த தேர்தலில் காங்கிரஸ் தனித்து ஆட்சி அமைக்குமா?

மூப்பனாருடன் சேர்ந்து போட்டியிடுவதோ, சேராமல் போட்டியிடுவதோ எல்லாம் தலைமைதான் முடிவு செய்யும். எப்படியும் தேர்தலுக்கு முந்திய நாளைக்குள் முடிவு செய்து விடுவோம். திராவிடக் கட்சிகள் இரண்டுக்குமே ஒரு ஸீட் கூடக் கிடைக்காவிட்டால், தமிழகத்தில் அடுத்தது காங்கிரஸ் ஆட்சிதான். இதில் சந்தேகமே இல்லை.



● அப்படி அவை இரண்டும் தோல்வி அடையவில்லை என்றால்?

நாங்கள் எங்கள் டெபாசிட்டுகளையாவது தக்க வைத்துக் கொள்ளப்பாடுபடுவோம்.

● நன்றி திரு இளங்கோவன் அவர்களே. நன்றி. வணக்கம்.

★

# நடப்புக்கு பொருந்துவதாக இல்லை!

**த**மிழ் சீரியல் 'பந்தம்'. தாய்க்குலம் தம்மை மறந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; கையில் பெரிய கைக்குட்டை.

மாமியார்: ஏழை வீட்டுப் பொண்ணுன்னு அனுதாபம் காட்டினது தப்பாப் போச்சு. வீட்டை விட்டு இறங்கு. இப்பவே!

மருமகள்: இப்பவேவா? (கண்களில் நீர் தளும்ப-க்ளோஸ் அப்)

மாமியார்: ஆமா, இப்பவே. என் மகன் வரதுக்கு முன்னால!

மாமனார்: ஜெயந்தி, என்ன இது! அவ எட்டு மாசப் பிள்ளத்தாச்சி. அவளை வீட்டை விட்டு விரட்டுறது தப்பு.

மாமியார்: நீங்க வாயை மூடிட்டு சும்மா இருங்க. இந்த வீட்டுல ஆம்பளைங்க குறுக்கே பேசக் கூடாது. பேசினா எனக்குப் பிடிக்காது!

மாமனார்: குமார் வந்து 'என் மனைவி எங்கே'ன்னு கேட்டா என்ன பதில் சொல்றது?

மாமியார்: அவளை அவ வீட்டுக்கே அனுப்பிச்சிட்டேன்னு சொல்லுவேன். (மருமகளைப் பார்த்து மகா கோபத்துடன்) ஏ, இன்னுமா நிக்கறே? போடி வெளியே!


(வெளியே மின்னல் வெட்டி அடிக்கிறது. மழை கொட்டத் தொடங்குகிறது. மாமியார் மருமகளைக் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளுகிறாள்)

மாமியார்: என்ன கொழுப்பு இருந்தா, பிடிச்சுத் தள்ளின உடனே கீழே விழுவே! தள்ளினா உடனே விழுந்துடணுமா? என்ன மாய்மாலம் பண்றே?

(விழுந்த மருமகள் ஸ்லோ மோஷனில் எழுந்திருக்க முழுசாக மூன்று நிமிஷங்கள் ஆகின்றன. அதே மாதிரி மூன்று முறை விழுந்து எழுவது ஸ்பெஷல் எஃப்பக்டாகக் காட்டப்படுகிறது. மாமனார் பரிதாபப் பார்வை பார்க்க, ரசிகைகள் கண்ணீருடன் த்ஸொ...த்ஸொ...)

★

**ஹி**ந்தி சீரியல்- வட இந்தியக் குடும்பங்களே பிஸினஸ், ஷேர்ஸ், ஒருவரை ஒருவர் விளாசிக் கொள்ளுவதுதான் என்று ரசிகர்கள் நினைத்தால் நாம் என்ன செய்வது?







"என்னது... ஸ்டேஷன்ல கம்ப்யூட்டரை ஆபரேட் பண்ணிட்டிருந்ததால உங்களை சஸ்பெண்ட் பண்ணிட்டாங்களா? ஏன்?"

"யாராரு எவ்வளவு மாமூல் கொடுக்கணும்னு தட்டிப் பார்த்துக்கிட்டிருந்தப்ப மேலதிகாரி திடீர் விசிட் வந்துட்டார்!"

- சீர்காழி வி.ரேவதி

அப்பா: பேட்டா, புருஷோத்தம் லால் கம்பெனியோட வீழ்ச்சியிலே தான் நம்ம கம்பெனியோட உயர்வே இருக்கு.

மகன்: ஐ நோ டாட். மார்க்கெட்ல அவங்க ஷேர்ஸ் அவ்வளவும் விலை சரியப் போவுது. தே ஆர் டூம்ட். ஐ ஹேவ் அரேஞ்ச்ட் எவ்ரிதிங். ஜஸ்ட் வெய்ட் அன்ட் ஸீ.

அப்பா: சபாஷ் பேட்டா, சபாஷ். அந்தப் புருஷோத்தம்லால் என் கால்ல விழுந்து கெஞ்சணும்!

மகன்: அவர் வருவார் டாட். அவர் பெண் தீபிகாவை நான் காதலிக்கறேன். ஐ லவ் ஹர் டீப்லி.

அப்பா: என்ன, உலகத்துல வேற பெண்ணே உனக்குக் கிடைக்கலியா?

மகன்: ஐ கான்ட் லிவ் விதவுட் ஹர், டாட்!

(ஓங்கி ஓர் அறை விடுகிறார் அப்பா. அம்மா வருகிறாள்.)

அம்மா: ஏ க்யா கியா ஆப்னே?

அப்பா: நீ குறுக்கே வராதே. (அவளுக்கும் ஓர் அறை)

வேலைக்காரன்: அய்யா, அம்மாவ இப்படி அடிச்சிட்டீங்களே? (அவன் மேல் பாய்ந்து அவனுக்கும் ஓர் ஆவேச அடி)

அப்பா: எல்லாரும் போங்கள். போய்த் தொலையுங்கள்!

(தலையில் தானும் படீர் படீர் என்று அடித்துக் கொள்ளுகிறார்!)

★

## பையாண்டி கபர்தார்

மாது: இன்றைக்கு தர்பாருக்கு வந்திருக்கிற விருந்தினர்-வயலின் இசை சக்ரவர்த்தி, இசைப் பேரறிஞர், வயலின் இசை கலாநிதி, நாதப் பிரம்மம் குன்னக்குடி வைத்திய நாதன்! வாங்க. எங்கே, உங்க வயலினைக் கொண்டு வரலியா?

குன்னக்குடி : அதனால என்ன! வாயாலயே வாசிச்சுக் காமிச்சுட்டாப் போச்சு! (புருவங்கள் மேலேயும் கீழேயும் பாய்ந்து, விபூதி சந்தன குங்குமக் கீற்றுக்கள் மோத, உதடுகளைக் குவித்து வயலின் மாதிரி மூக்காலேயே ஒலி எழுப்புகிறார்) எப்படி?

மாது: சபாஷ். வயலின்ல வாயால பேசற டயலாக் எல்லாம் தான் வாசிக்கறீங்க. ஆனா வயலின் இல்லாமலேயே மூக்கால வயலின் மாதிரியே பாடறீங்களே? இதைச் சின்ன வயசுலயே கத்துக்கிட்டீங்களா?

குன்னக்குடி: ஒரு வயசா இருக்கும்போதே வயலின் வாசிக்க ஆரம்பிச்சிட்டேன். ரெண்டு வயசுல வயலின் மாதிரி பாட ஆரம்பிச்சிட்டேன். மூணு வயசுலயே பெரிய பெரிய வித்துவான்களுக்குப் பக்கவாத்தியம் வாசிச்சிருக்கேன். நாலு வயசுல ஸோலோ வாசிச்சிருக்கேன். அஞ்சு வயசுல....

மாது: ஓகே, ஓகே. சரி. யார்ட்ட கத்துக்கிட்டீங்க?

குன்னக்குடி: பேச யார் கத்துக் கொடுப்பாங்க? நானேதான் பேசினேன். அதுபோல நானேதான் வாசிக்கக் கத்துக்கிட்டேன்!

மாது : மழை வராதபோது புழலேரில இறங்கி வாசிச்சீங்க. மழை வரலியே? (பின்னணியில் சிரிப்பு)

குன்னக்குடி: அடுத்த சீஸன்லே மழை கொட்டோ கொட்டுன்னு கொட்டிச்சே!

மாது : அப்போ இந்த வருஷம் வாசிங்க. அடுத்த வருஷமாவது மழை வருதான்னு பார்க்கலாம். (பின்னணியில் சிரிப்பு)

குன்னக்குடி: அடுத்த வருஷம் வரலேன்னா, அதற்கு அடுத்த வருஷம் நிச்சயம் வரும். நான் அன்னிக்கு வாசிச்சதாலதான் ஏதோ அப்பப்போ மழை பெய்யுது. இதுல சந்தேகமே இல்லே.

மாது : என்ன ராகம் வாசிச்சீங்க?

குன்னக்குடி: அமிர்தவர்ஷிணி. முத்துசாமி தீட்சிதர் பாடி மழை பெஞ்சிருக்கு.

மாது : அப்போ நீங்க வாசிச்சது அமிர்தவர்ஷிணி இல்லியோ? ஆனந்த பைரவியா இருக்குமோ?

குன்னக்குடி: ஆனந்தபைரவி வாசிச்சா ஹை பிளட் பிரஷர் நார்மல் ஆயிடும். இதை எங்களோட ராக ஆராய்ச்சி மையத்துல கண்டு பிடிச்சு ப்ரூவ் பண்ணியிருக்கோம்.

மாது : நீங்க வயலின் வாசிச்சா லோ பிளட் பிரஷர்காரங்களுக்கு ஹை பிளட் பிரஷர் வரதா சொல்றாங்களே?

குன்னக்குடி: அவங்களுக்கு என்ன பிரஷரோ, அப்படிச் சொல்றாங்க!

மாது : உங்களுக்கு மத்திய அரசு ஃபெலோஷிப் கிடைச்சிருக்கே? என்ன பண்ணப் போறீங்க?

குன்னக்குடி: மேலும் ராக ஆராய்ச்சிகள் பண்ணப் போறேன்.

மாது : எந்த ராகம் வாசிச்சா பழையபடி ஜெயலலிதா முதலமைச்சரா வருவாங்கன்னு ஆராய்ச்சி பண்ணுவீங்களா? (பின்னணியில் சிரிப்பு)

குன்னக்குடி: நான் ஆராய்ச்சி பண்ணாமலே அவங்க முதல்வரா வந்துருவாங்க. மக்கள் ஆதரவு என்னைப் போலவே அவங்களுக்கும் நிறைய இருக்கு.

மாது : நன்றி. வணக்கம்.

கற்பனை: **சித்தார்த்**



ஓம்

## LUCKY GANESHA
## அதிர்ஷ்ட பிள்ளையார்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் காப்டன் ஸ்ரீகாந்த் சமீபத்தில் நிருபர்களைச் சந்தித்தார். சென்னையில் நடந்த இந்த சந்திப்பின்போது கண்ணாடியிலான சின்ன சைஸில் ஒரு "அதிர்ஷ்ட விநாயகர் சிலையை நிருபர்கள் ஒவ்வொருவருக்கும் "பரிசாக" கொடுத்தார்...

"இந்த பிள்ளையார் உங்கள் கைக்கு வந்த பதினைந்து நாட்களில் பல நல்ல விஷயங்கள் நடக்கும். எனக்கும் நடந்திருக்கிறது. உங்களுக்கும் நடக்க வேண்டும் என்பது என் ஆசை... என்று சொல்லியபடி நிருபர்களுக்கு விநியோகித்தார். நன்றி – ஜூனியர் விகடன்.

கடம் வித்துவான் டி.எச். 'விக்கு' விநாயகம் கூறுகிறார் "என் மகன் உமா சங்கர் 'லக்கி பிள்ளையார்' ஒன்று கொடுத்தார். இந்த 'லக்கி பிள்ளையார்' வந்ததில் இருந்து எனக்கு ஒரு மாற்றம் கிடைத்தது சௌகரியங்களும் கிடைத்தது. மேலும் திரு. சந்தோஷ் சிவராமிடம் இருந்து ஒரு 'லக்கி பிள்ளையார்' வாங்கி செல்கிறேன். விசேஷமாக இந்த லக்கி பிள்ளையார்' காஞ்சி மடத்திலுள்ள மகா – மகா பெரியவாளின் பரிபூரண ஆசிப் பெற்றது.

THE MAIN REASON FOR THIS LUCK IS THAT THIS LUCKY. GANESHA IS BLESSED BY MAHASWAMI PERIYAVAL OF KANCHI MUTT. Every friday we do a Pooja before it is given.

Designed & Brought by Santosh Sivaram

**SANTACLAUS - 88**

ALSA MALL, # 10 1ST Floor, Montieth Road, Egmore,Chennai - 600 008, Tamilnadu, India ☏: 91-44-8554247 Fax: 91-44-8554930
Email: luckyganesha@hotmail.com: Web http://epages. webindia.com/india/luckyganesha

Our prices for Luckyganesha Rs. 30 to 90
Courier Charges for Rs 15 for South India, Rs. 25 for North India
Send the money order or Draft favour of Santaclaus - 88.



## ஓவியம் கற்றுக் கொள்ள ஓவியர் 'ஆழி' எழுதிய புத்தகங்கள்:

| | |
|---|---|
| ஒரே மாதத்தில் ஓவியராகலாம்! | 17.00 |
| சுலபமாக சித்திரம் கற்கலாம்! | 13.00 |
| உருவப் படங்கள் வரைவது எப்படி? | 25.00 |
| ஓவியம் வரைவது எப்படி? | 10.00 |
| சிரிப்புப் படங்கள் வரைவது எப்படி? | 20.00 |
| அழகிய டிசைன்கள் வரைவது எப்படி? | 19.00 |
| சித்திர எழுத்துக்கள் எழுதுவது எப்படி? | 10.00 |
| அழகிய ஆங்கில எழுத்துக்கள் | 25.00 |
| நீங்களும் அழகாக எழுதலாம்! | 4.50 |
| புகைப்படத்தைப் பெரிதாக்கி வரைவது எப்படி? | 16.00 |
| உருவத்தைப் பெரிதாக்கி வரைய எபிடியாஸ்கோப் | 9.00 |
| சினிமா சிலைடுகள் வரைவது எப்படி? | 13.00 |
| உலக ஓவியர்கள் – ஓவியங்கள் | 11.50 |
| விந்தை ஓவியர் வால்ட் டிஸ்னி | 13.00 |
| கிரில் டிசைன்கள் | 22.00 |

புத்தக விலையை மட்டும் அனுப்பவும். தபால் செலவு இலவசம்.

**சித்ரகலா பதிப்பகம்**
அகரக்கடம்பனூர், ஆழியூர் அஞ்சல்,
நாகப்பட்டினம் மாவட்டம் – 611 117



## மோகன் வெங்கடேஸ்வரா முதியோர் இல்லம்

சென்னை அசோக் நகரில் சகல வசதிகளுடன் இரண்டு வருடங்களுக்கு மேலாக சிறந்த முறையில் **மோகன் வெங்கடேஸ்வரா முதியோர் இல்லம்** இயங்கி வருகிறது.

- தங்கும் அறை எல்லா வசதிகளும் கொண்டது.
- பொழுதுபோக கலர் டீவி, தினசரி, வார, மாத பத்திரிகைகள்
- சுவையான சைவ உணவு மற்றும் காபி, டிபன் குறித்த நேரத்தில் வழங்கப்படுகிறது.
- துணி துவைக்க, கடைக்குச் சென்று வர உதவியாளர் உண்டு.
- இல்லத்தின் அருகே ஷாப்பிங் சென்டர், மருந்துக் கடை, வங்கி, கோயில் அனைத்தும் உள்ளன.
- ஆறு இடங்கள் மட்டுமே உள்ளன.

நேரில் ஒருமுறை விஜயம் செய்து எங்களின் சேவையைப் பார்த்துச் சேரவும்.

**தங்கும் இடம், சாப்பாடு, பொழுதுபோக்கு வசதி, உதவியாளர் சேவை இவை அனைத்தும் உள்பட நபர் ஒருவருக்கு மாதம் ரூ. 3000/- ஐந்து மாதம் அட்வான்ஸ்.**

மேலும் விவரங்களுக்கு :

**மோகன் வெங்கடேஸ்வரா முதியோர் இல்லம்,**
அலுவலகம்/இல்லம் : New No. 15 / Old No. 8 62வது தெரு,
அசோக் நகர், சென்னை – 83. போன் : 4747955 & 4891491

சமையல் வேலை தெரிந்த ஆதரவற்ற, பிராமணப் பெண்மணி வேலைக்கு அணுகவும்.




## ✤ MOTHER'S PETS

Petpals

## ✤ WHY DO WE BELCH?

- HELLO, DOCTOR!

## ✤ A SMALL LIE

SHORT STORY

## ✤ WHY DO RACCOONS WASH THEIR FOOD?

- In the wild

+ all regular features




# GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 97

AUGUST 2000 Rs.6/-






2000 ஜூலை 30
விக்ரம ஆடி 15
மலர் : 58
இதழ் : 53

# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




## பாட்னா பயங்கரம்!

**வி**பத்துகள் நடப்பதும் அவற்றுக்கான காரணங்களை ஆராய கமிஷன்கள் நிறுவுவதும் அவை தரும் அறிக்கைகள் தூக்கி கிடப்பில் போடப்படுவதும் நமது நாட்டில் வாடிக்கை. பாட்னாவில் தரையிறங்கவிருந்த அலயன்ஸ் விமானம் (இந்தியன் ஏர்லைன்ஸின் கிளை நிறுவனம் அலயன்ஸ்) திடீரென்று விழுந்து நொறுங்கியதற்கான காரணமும் இவ்வாறே கண்டறியப்பட்டு, தூசி படிய அனுமதிக்கப்பட்டால் ஆச்சர்யமில்லை. இந்த விபத்தில் உயிரிழந்த 55 நபர்களுடைய குடும்பத்தினரின் சோகமும் இழப்பும் அளவிட முடியாதவை. வேறெவருக்கும் ஏற்படக் கூடாதவை.

இத்தகைய கற்பனைக்கெட்டாத கோர விபத்துகள் மீண்டும் நடக்காதிருக்க வேண்டுமானால், விமான பராமரிப்பு ஒரு கலையாக மேம்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், இங்கே நிலைமை என்ன...? விபத்துக்குள்ளான விமானம் இருபது ஆண்டுகளாக உபயோகத்தில் இருப்பதால் பழசாகி, அதனால் இயக்கம் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் என்பது ஒரு சாராரின் கணிப்பு. 'இல்லை; இதைவிடப் பழைய விமானங்கள் உலகில் பல்வேறு நிறுவனங்களால் இயக்கப்பட்டு வருகின்றன' என்று கூறுவோரும் உண்டு.

நீண்ட காலமாகப் புது விமானம் வாங்க அரசு அனுமதி கேட்டு அலயன்ஸ் நிறுவனம்




காத்திருக்கிறது என்பது இன்னொரு செய்தி!

'விமான ஓட்டுனர்கள் தவறிழைத்திருக்கக் கூடுமோ?' என்று வினா எழுப்புவதற்குள்ளாகவே பைலட்கள் அசோசியேஷன் வன்மையாக ஆட்சேபிக்கிறது. ஆனால் இங்குள்ள பைலட்களின் தரம், அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியின் தரம் ஆகியவை பலமுறை விமர்சனத்துக்குள்ளாகியிருக்கின்றன. உலகில் பல்வேறு விமான நிறுவனங்களிலும் விபத்துகள் நேரத்தான் செய்கின்றன. ஆனால், ஆற்றல் மிக்க, அனுபவம் மிக்க பைலட்களால் விபத்துகளைத் தவிர்க்க முடியும். அப்படி எத்தனை ஆபத்தான நிலைகளில் பைலட்கள் விபத்து நேர்வதைத் தவிர்த்துள்ளார்கள் என்பதற்கு உலகளாவிய கணிப்பு நடத்தினால்தான் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த பைலட்களின் ஆற்றலை எடைபோட முடியும்.


பொதுவாக, அரசுத்துறையில் விமான சர்வீஸ் இருக்கும் வரை விமான பராமரிப்பு, பைலட்களின் தரம் ஆகிய இரு அம்சங்களிலும் குறைபாடுகள் மலிந்தே இருக்கும்.

எனவே விமானப் போக்குவரத்தை வெகுவிரைவில் தனியார்மயமாக்கிவிடுவதே உசிதம்.

## மும்பை பிளாக் மெயில்!

மஹாராஷ்டிரா முழுவதிலும் சிவ சேனையினர் நடத்திய அக்கிரமங்களை எதிர்த்து 1993ல் காங்கிரஸ் அரசால் ஏராளமான வழக்குகள் தொடரப்பட்டன. பி.ஜே.பி-சிவசேனை ஆட்சிக் காலத்தில் அவற்றுள் 11,000 வழக்குகளை வேலை மெனக்கெட்டு வாபஸ் பெறச் செய்திருக்கிறார் துணை முதல்வர் கோபிநாத் முண்டே! அத்தனை கோப்புகளையும் தேடிக் கண்டுபிடித்து வாபஸ் பெறும் சுறுசுறுப்பு அவருக்கு இருந்திருக்கிறது!

மறதியினாலோ அல்லது திட்டமிட்டபடியோ விடுபட்டுப்போன ஒரு வழக்கு பால்




தாக்கரே பேரிலானது. வன்முறையைத் தூண்டும் தலையங்கம் எழுதியதற்காக அவர் பேரில் போடப்பட்டது.

அந்த ஒரு வழக்கை இப்போது தூசி தட்டி எடுத்து, தாக்கரேவைக் கூண்டில் நிறுத்த முற்பட்டிருக்கிறது மஹாராஷ்டிராவின் காங்கிரஸ் அரசாங்கம்!

அரசியல் வெறித்தனத்தையும் மத விரோத உணர்வுகளையும் துளியும் லஜ்ஜையின்றித் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்து அரசியல் வியாபாரம் செய்து வருகிற தாக்கரே, தமது பேரில் சட்ட விசாரணை என்று முடிவானால், மஹாராஷ்டிரா என்ன- இந்தியாவே பற்றி எரியும் என்று சூளுரைத்திருக்கிறார்.

நியாயமாய்ப் பார்த்தால் இப்படிப் பேசியதற்காகவே அவரைக் கைது செய்து விடலாம். ஆனால், உடனடியாக மஹாராஷ்டிராவில் ரௌடித்தனம் ஆரம்பித்து ஆளுங்கட்சிக்கும் அரசுக்கும் அவப்பெயர் ஏற்படும்.

இதற்கு பயந்து கொண்டு மாநில அரசு தாற்காலிகமாகவேனும் அடங்கிப்போயிருக்கிறது.

தாக்கரே பேரில் உள்ள வழக்கை வேகமாக எடுத்து நடத்தினால் வன்முறை வெடிக்கும்; நடத்தாவிட்டாலோ கடமையில் தவறியதாக அவப்பெயர் உண்டாகும்.

நாடறிந்த குற்றவாளியாக ஒருவர் நடமாடிக் கொண்டிருக்க, ஏதும் செய்ய முடியாமல் மத்திய-மாநில அரசுகள் கையைப் பிசைந்து கொண்டு நிற்கிற அவலம் நிலவுகிறது!

மதவாத அரசியலையும் ஜாதி உணர்வுகளைத் தூண்டும் அரசியலையும் வளர அனுமதித்துவிட்டோம். அதன் விளைவுதான் தாக்கரே பாணி மிரட்டல் அராஜகம்.


வாக்களிக்கும் மக்கள் மனம் வைத்தாலன்றி மஹாராஷ்டிராவுக்கு விடிவு காலம் வராது. ஆனால் மக்கள் 'பிளாக் மெயிலை'ப் பராக்கிரமம் என்று எண்ணிப் பூரித்துப் போனால் அந்த முட்டாள்தனத்துக்கான விளைவை அந்த மாநிலம் அனுபவிக்கத்தான் வேண்டும்.

## விஜயகாந்த் காரசார பேட்டி

தமது ரசிகர் மன்றத்தினருக்கென்று பிரத்யேகக் கொடி உருவாக்கி, பரப்பூட்டிய கையோடு தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் விஜயகாந்த். அவரது வெற்றியை 'நேற்று ரசிகர்களின் தலைவன்: இன்று நடிகர்களின் தலைவன்: நாளை மக்களின் தலைவன்' என்று போஸ்டர் அடித்துக் கொண்டாடுகிறார்கள் அவரது ரசிகர்கள். விரைவில் வெளி வரவிருக்கும் அவரது படத்துக்குப் பெயர்: சிம்மாசனம். ஒரு பக்கம் அதிரடி ஹீரோ இமேஜ். இன்னொரு பக்கம் ஏழைகளுக்கு உதவுகிற இமேஜ். சாலிக்கிராமத்தில் உள்ள அவரது வீட்டின் வெளியே, எந்த நேரமும் ரசிகர்களும், உதவி வேண்டி வரும் பொது மக்களும் கூடியிருக்கிறார்கள். என்னதான் அவரது திட்டம்? விறுவிறுப்பாக நடந்த



# ஜாதி சங்கமெல்லாம் நூதன மோசடி!



பேட்டி இதோ:

**"உங்களது படங்களில் ஒன்று, ஆக்ரோஷமான இளைஞராக நடிக்கிறீர்கள்; இல்லை, அதிரடி போலீஸ் அதிகாரியாக நடிக்கிறீர்கள். சின்ன வயதில் நீங்கள் எப்படி? அடிதடி ஆசாமியா?"**

"இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்த போது நான் பள்ளி மாணவன். அதில் தீவிரமாகக் கலந்துகொண்டேன். மற்றபடி, மதுரையில் தெருச்சண்டைகளுக்குக் குறைவிருக்காது. அதை எட்ட நின்று வேடிக்கை பார்த்ததும் உண்டு; சமயங்களில் நேரடியாகக் களமிறங்கியதும் உண்டு. ஆனால் சினிமாவில் கிடைத்திருக்கும் அதிரடி இமேஜ் அதுவாக வந்ததுதான். முதல் படமான தூரத்து இடிமுழக்கத்தில் சோகமான பாத்திரம். அதற்கப்புறம்கூடக் கொஞ்ச நாளைக்கு அதுபோலத்தான் வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் என் கண்கள் தீர்க்கமானவை என்று ஒரு கருத்து உண்டு. அதனால்தான் எனக்கு அதிரடி ஆக்ஷன் கேரக்டர்களாகவே வந்தன என்று சொல்லலாம். வைதேகி காத்திருந்தாள் போன்று ஒரு சில படங்களில் சாஃப்டான கேரக்டர்களில் நடித்ததன் மூலம், என்னால் அப்படிப்பட்ட வேடங்களிலும் நடித்து, நல்ல பெயர் எடுக்க முடியும் என்று நிரூபித்தேன். அண்மையில் வெளி வந்து, மாபெரும் வெற்றி பெற்ற 'வானத்தைப் போல' கூட மென்மையான கேரக்டர்தான். அந்தப் படத்தில் ஒரு சண்டைக் காட்சி இடம் பெற்றதில் எனக்குப் பூரண சம்மதமில்லை. இயக்குநர் வற்புறுத்தவேதான் ஒப்புக் கொள்ளும்படியானது."

**"சினிமாவில் நுழைய நீங்கள் ரொம்பக் கஷ்டப்பட வேண்டியிருந்தது. ஆனால் இன்று தமிழின் முன்னணி ஹீரோக்களில் நீங்களும் ஒருவர். கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிற போது எப்படி உணருகிறீர்கள்?"**

"இன்றுள்ள ஹீரோக்களில் நானும், சத்தியராஜும்தான் சினிமாவில் நுழைவதற்காக ரொம்ப, ரொம்பக் கஷ்டப்பட்டவர்கள். ஆனால், இன்று வரும் அடுத்தத் தலைமுறை ஹீரோக்களுக்கு திரையுலகப் பிரவேசம் சுலபமான ஒன்றாகவே உள்ளது. அதேபோல சம்பள விஷயத்திலும், நாங்கள் சந்தித்த கசப்பான அனுபவங்கள் இவர்களுக்குக் கிடையாது."

**"ஆரம்பக் காலத்தில், உங்களை நிராகரித்தபோது சொல்லப்பட்ட காரணம், உங்களுடைய தமிழ் உச்சரிப்பு சரியில்லை என்பது. ஆனால், இன்றுகூட நீங்கள் மிக நன்றாகத் தமிழை உச்சரிப்பதாகச் சொல்ல முடியாது. எப்படி இந்தக் குறையை மீறி வெற்றி பெற்றீர்கள்?"**

"யோசித்துப் பார்க்கிறபோது அன்று என்னை நிராகரிப்பதற்கு ஒரு காரணம் அவர்களுக்குத் தேவைப்பட்டது. தமிழ் உச்சரிப்பு சரியில்லை என்றார்கள். ஒரு கால கட்டத்தில் தமிழ்நாட்டின் பல்வேறு தமிழையும் ரசிகர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். தண்ணீர் தண்ணீர் படத்தின் தமிழை நெல்லைத் தமிழ் என்று ஏற்றுக் கொண்டார்கள்; பாக்யராஜின் தமிழ் உச்சரிப்பைக் கொங்குத்

தமிழ் என ஏற்றுக் கொண்டனர். பாண்டிய ராஜன் பேசும் தமிழை, சென்னைத் தமிழ் என்று ஏற்றுக்கொண்டனர். அது போலவே மதுரைத் தமிழ் என்று என்னுடையதை ஏற்றுக் கொண்டு விட்டனர்."

**"பதவிகளை ஏற்றுக்கொள்வதை இத்தனை வருடங்கள் கண்டிப்புடன் தவிர்த்து வந்த நீங்கள், நடிகர் சங்கத் தலைவராகப் பொறுப்பேற்க ஏன் ஒப்புக் கொண்டீர்கள்?"**

"நடிகர் சங்கத்தைப் பொறுத்தவரை, கடந்த பல வருடங்களுக்கு முன்பே, தி.மு.க - அ.தி.மு.க அரசியல் புகுந்துவிட்டது. நடிகர்கள் நலனுக்காக உள்ள ஒரு அமைப்பில் இப்படி அரசியல் ரீதியான மோதல் தேவையில்லாதது என்பது பலரது கருத்து. ஆனால், அதனைத் தவிர்க்க முடியாமலேயே இருந்து வந்தது. இந்த முறை 'ரஜினி, கமல் தவிர்த்துப் பார்த்தால், நீங்கள்தான் சீனியர். நீங்கள் சொன்னால் கட்சி வட்டத்தையும் தாண்டி, அனைவரும் கேட்பார்கள். நீங்கள் தான் தலைவராக வர வேண்டும்' என்று ராதாரவி உட்பட அனைவரும் கேட்டுக்கொண்டனர். எனவே, சரி என்று ஒப்புக்கொண்டேன்."

**"ஜனநாயக முறையில், எவரும் எந்தப் பொறுப்புக்கும் போட்டியிடலாம் என்றாலும், அ.தி.மு.க.வில் இருந்துகொண்டு, பொதுமேடைகளில் கலைஞர் உட்பட அனைவரையும் கடுமையாக விமர்சிக்கிற ராதாரவியையும், அவரது ஆசி பெற்றவரையும் இணைத்துக்கொண்டு, விஜயகாந்த் அணி என்று வோட்டுக் கேட்டது தார்மீக முறையில் நியாயமாக உங்களுக்குப் படுகிறதா?"**


---

**"நம்ம பொண்ணை மாடு மாடுன்னு திட்டாதீங்கன்னு சொன்னேன் கேட்டீங்களா?"**

**"ஏன், என்னாச்சு!"**

**"எதிர்த்த வீட்டுப் பையன் ஓட்டிக்கிட்டு போயிட்டான்!"**

**— எஸ். தமிழ்மணி**



"கட்சி அரசியல், நடிகர் சங்கத்துக்குள் வரக்கூடாது. இது முழுக்க முழுக்க அரசியலுக்கு அப்பாற்பட்ட, கலைஞர்களுக்கான அமைப்பாகச் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் நானே தலைவராகி இருக்கிறேன். இனி, என் நோக்கம் திரையுலகத்துக்கு, நடிகர் சங்கத்துக்கு என்ன நல்லது செய்ய முடியும் என்பதாகவே இருக்கும்."

**"தலைவரான பின், பதவி ஏற்பை ஒட்டி உங்கள் ரசிகர்கள், நாளைய முதல்வர் நீங்கள்தான் என்கிற ரீதியில் ஒரு போஸ்டரை நகரமெங்கும் ஒட்டினார்களே! அதற்கு என்ன அர்த்தம்?"**

(சிரிக்கிறார்) "ரசிகர்கள், சில சமயங்களில் உணர்ச்சி வசப்பட்டு, இது போல ஏதாவது செய்து விடுகிறார்கள். ரசிகர்களை, ஓரளவுக்குத்தான் என்னால் கட்டுப்படுத்தி வைக்க முடிகிறது. ஆனாலும் இப்படி எல்லாம் போஸ்டர் அடித்து, என்னையே தர்ம சங்கடப்படுத்தி விடுகிறார்கள்!"

**"அப்படியென்றால், உங்களுக்கு அரசியலுக்கு வரும் எண்ணமே இல்லையா?"**

"சினிமாவை விட்டு விட்டு, அரசியலுக்கு வரும் எண்ணமெல்லாம் எனக்கு இல்லை. நான் எதைச் செய்தாலும், துணிச்சலுடன் வெளிப்படையாகத்தான் செய்வேன். கடந்த தேர்தலுக்கு முன்பு, பலரும் கலைஞருக்குப் பாராட்டு விழா என்றவுடன், தேர்தலுக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாமே என்று நழுவியபோது, நான் துணிந்து முன் நின்று விழா நடத்தினேனா இல்லையா?"

**"அப்புறம் ஏன் ரசிகர் மன்றத்துக்கு என்று தனியாகக் கொடி?"**

"அதையும், அரசியலையும் தயவு செய்து முடிச்சுப் போடாதீர்கள். ரசிகர்கள் விரும்பிக் கேட்டுக் கொண்டதற்காக, கொடி உருவாக்கினேன். நான் அரசியலுக்கு வரும் நோக்கத்துடன் அது செய்யப்படவில்லை. பிறந்தநாளையொட்டி, பல லட்சம் மதிப்புக்கு உதவிகள் செய்கிறபோது, பொது மக்களுக்குச் செல்வதை, வெளிப்படையாகச் செய்ய வேண்டும் என்றார்கள், ரசிகர் மன்றத்தினர். நானும் அவர்களுக்குக் கட்டுப்பட்டு, அப்படிச் செய்தேன். அவ்வளவு தான்!"

**"சரி! நீங்கள் அரசியலுக்கு வரும் எண்ணம் இல்லை என்று சொல்லி விட்டீர்கள். ஆனால், விரைவில் தமிழகத்தில் தேர்தல் வரப் போகிறதே! உங்களுக்கு நெருக்கமான தலைவர் கலைஞர். நீங்கள் ரொம்ப**

மதிக்கிற தலைவர் மூப்பனார். இரண்டு பேரும் வெவ்வேறு அணியில் இருக்கிறார்கள். உங்கள் ஆதரவு யாருக்கு?"

"இப்போதைக்கு இது தர்மசங்கடமான கேள்வி. தேர்தல் வரும்போது பார்த்துக் கொள்ளலாமே!"

**"இன்று தமிழக அரசியலில், ஜாதி சங்கங்களின் ஆக்கிரமிப்பும், அச்சுறுத்தலும் அதிகரித்து விட்ட நிலையில் உங்களையும் அந்த வலையில் இழுக்கப் பார்க்கும் சக்திகள் குறித்து?"**

"ஜாதி சங்கங்கள் எல்லாம் நூதன மோசடி! எங்கள் ஜாதியில் இவ்வளவு வோட்டு என்று சொல்லி, அரசியல் கட்சிகளைப் பயமுறுத்தி சுய லாபம் அடையப் பார்க்கிறார்கள். ஒரு சாதாரண கேள்வி கேட்கிறேன். எல்லா ஜாதிக்காரத் தலைவர்களும் பொறியியல், மருத்துவக் கல்லூரிகள் நடத்துகிறார்கள் இல்லையா! தங்கள் ஜாதி முன்னேற்றத்துக்கு உழைப்பது தான் இவர்களின் உண்மையான நோக்கம் என்றால், தங்கள் ஜாதி இளைஞர்களுக்கு, தங்கள் கல்லூரிகளில் இலவசமாக இடம் கொடுக்கட்டுமே! கொடுப்பார்களா? ஜாதி பேரைச் சொல்லி, ஆட்சிக்கு வந்தாலும், இவர்களின் ஜாதிக்கு மட்டும் என்று தனியாக ஏதாவது செய்ய முடியுமா? இல்லை, இன்ன ஜாதிக்கு மட்டும்தான் உதவுவேன் என்று இவர்களால் பகிரங்கமாகச் சொல்லவாவது முடியுமா? மக்களிடையே இன்னமும் ஜாதி உணர்வு இருப்பதால், அதைத் தங்கள் சொந்த லாபத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்கள். இதேபோல இவர்கள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டு இருந்தால், மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு, இவர்களுக்கு ஆதரவு தர மாட்டார்கள்! நான் நிச்சயம் இவர்களைப் பொருட்படுத்த மாட்டேன்."

**"நடிகர் சங்கத்தின் கடனை அடைக்க என்ன திட்டம் கைவசம் வைத்திருக்கிறீர்கள்?"**

"இது நான் ஒருவனாகவே செய்கிற காரியம் இல்லை. நடிகர் சங்கத்தினைக் கடனிலிருந்து மீட்டு விட வேண்டும் என்ற உணர்வு ஒருபுறம் இருந்தாலும், யார் காலத்திலோ பட்ட கடன்தானே என்ற எண்ணமும் இருக்கிறது. நடிகர், நடிகையர் ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டு, கடனை அடைப்பதும் சாத்தியமில்லை. காரணம் நாலு கோடி ரூபாய்க்குக் கடன் இருக்கிறது. இது பற்றி விரிவாகப் பேசுவதற்கு, எல்லோரையும் அழைத்திருக்கிறேன். எல்லோரது ஆலோசனைகளையும் கேட்டு, இறுதி முடிவு எடுக்கப்படும். எனக்கு ஆங்கிலம் பேசத் தெரியாது. பெரிய நிறுவனங்களில் நாலு பேரைப் பார்த்துப் பேச முடியாது. எனவே யார் யாரைக் கொண்டு, என்னென்ன செய்யலாமோ, அதைச் செய்து கடன் தீர தேவையான எல்லாவற்றையும் செய்வேன். தமிழக அரசு இதில் எங்களுக்கு உதவ வேண்டும். பண உதவி செய்ய வேண்டாம். வங்கிகளிடம் பேசி, கடனுக்குரிய வட்டிச் சுமையைக் குறைக்க, வழி செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்."



**"நீ எழுதின ஜோக் புத்தகத்தை யாருக்கு அர்ப்பணம் பண்ணிருக்கே?"**

**"ஒரிஜினல் எழுத்தாளர்களுக்குத் தான்!"**

**— அம்பை தேவா**

**"சமீபத்தில் முதலமைச்சர் மனம் புண்படாமல் படம் எடுங்கள் என்று பேசியிருக்கிறீர்களே! ஆட்சியிலிருப்போரைத் திருப்திப் படுத்துவதா படம் எடுப்பதின் நோக்கம்?"**

"இந்த முதலமைச்சர், திரை உலகிற்கு நிறைய உதவிகள் செய்திருக்கிறார். அவரிடம் உதவிகள் பெற்றுக்கொண்டு, அவரையே விமர்சனம் பண்ணுவது நியாயமில்லை என்பது என் கருத்து. தவிர, முதல்வர் மீது என்ன குறை சொல்ல முடியும்? எதிர்க்கட்சித் தலைவரான மூப்பனார்கூட நல்லாட்சி நடத்த முயல்கிறார் என்றுதானே கூறியிருக்கிறார்? முந்தைய முதல்வர் மீது பலவிதமான குற்றச்சாட்டுகள் இருந்தன. பலரும் விமர்சனம் செய்தார்கள். அது சரிதான். இப்போதும் அமைச்சர்கள் மீது விமர்சனங்கள் வருகின்றன. குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டுவதில் தவறு இல்லை. ஆனால் அபாண்டமாக ஏதும் கூறக் கூடாது என்பதைத்தான் வலியுறுத்தினேன்!"

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

அட்டை வண்ணப்படம்: **யோகா**






# ஒலிம்பிக்ஸ்!

ஆஸ்திரேலிய மூத்த குடிமக்களுக்கு அடித்திருக்கிறது ஒரு சான்ஸ். "அந்தக் காலத்தில் நம்ம மெல்போர்னிலே ஒரு ஒலிம்பிக்ஸ் நடந்ததே, அப்போ..." என்று அவர்கள் தொடங்க, அந்த மலரும் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள இளையவர்களும் ஆவலோடு தயாராகிறார்கள். திருவிழாக் கோலம் கொண்டிருக்கும் ஸிட்னி, ஒலிம்பிக்ஸ் ஒளியால் உலகம் முழுவதையும் திரும்பிப் பார்க்கச் செய்யத் தயாராகி வருகிறது. கல்கி வாசகர்களுக்காக ஸிட்னியிலிருந்து சுடச் சுட, பிரத்யேகத் தகவல்கள் இதோ:

- மூன்றரை மில்லியன் ரொட்டிகள், 42 லட்சம் பழங்கள், 760 டன் எடையுள்ள காய்கறிகள், 24 டன் காப்பி, 200 டன் ஆட்டிறைச்சி, 450 டன் கோழிக்கறி, 230 டன் மீன்கள். என்ன இவை? ஸிட்னியில் ஒலிம்பிக்ஸ் பந்தயங்கள் நடைபெறும் ஒரு மாதத்தில் அங்கு கூடும் மக்கள் தின்று தீர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படும் தோராயமான அளவுதான்!

ஒலிம்பிக்ஸில் பங்கேற்கும் அத்தனை பேருக்கும் போதிய அளவில் இந்த உணவுப் பொருள்களைப் பங்கிடும் பொறுப்பு ஆலன் ஒயிட்மேன் என்பவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இது ஒன்றும் எளிய வேலையல்ல. உணவுப் பொருள்கள் மிகச் சுத்தமாக இருக்க வேண்டும். வந்து சேரும் பல்வேறு தரப்பினரின் ருசிகளை ஓரளவாவது திருப்திப்படுத்த வேண்டும். அது மட்டுமல்ல. ஆஸ்திரேலிய உணவே ஒரு தனிச்சுவைதான் எனுமளவுக்கு பிற நாட்டினரிடையே உள்ளூர் உணவு







• டிக்கெட்டுக்குக் காத்திருக்கும் க்யூ!

# ஒலிம்பிக்ஸ்! வந்தாச்சு பாரு!

வகைகளைப் பிரபலப் படுத்த வேண்டும். இதனால் அந்த நாட்டின் உணவுப் பொருள் ஏற்றுமதி வருங்காலத்தில் அதிகமாக வேண்டும். இப்படிப் பல எதிர்பார்ப்புகள்.

சிட்னியின் பல்வேறு இடங்களில், எங்கெங்கு என்னென்ன உணவு ஐட்டங்கள் எப்போதும் கிடைக்கும் என்ற மெனுவைத் தயார் செய்து ஒயிட்மேன் முன்னதாக ஒலிம்பிக் குழுவின் ஒப்புதலை வாங்கிக் கொள்ள வேண்டும். விலை மிகவும் நியாயமானதாக இருக்க வேண்டும் என்பதும் ஒலிம்பிக் குழுவினரின் நிபந்தனைகளில் ஒன்று.


"மற்றவற்றைப் பற்றிக் கூடக் கவலையில்லை. பழங்கள்தான் அந்த சமயத்தில் போதிய அளவில் கிடைக்குமா என்று யோசனையாக இருக்கிறது" என்று தவித்துக் கொண்டிருக்கிறார் ஒயிட்மேன்.

● சொந்த நாட்டிலேயே நடக்கப் போகும் ஒலிம்பிக்கில், இருபது தங்க மெடல்களையாவது நிச்சயம் வெல்ல முடியும் என்று எதிர்பார்க்கிறது ஆஸ்திரேலிய ஒலிம்பிக் குழு.

சைக்கிளிங் போட்டியில் (சாலையில் சைக்கிள் ஓட்டும் பிரிவு) அன்னா வில்சன் தங்கம் பெற வாய்ப்பு உண்டு. ஹாக்கியில் பெண்கள் பிரிவில் தங்கத்தை வெல்லக்கூடும். படகோட்டும் பந்தயத்தில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த UTS குழுவினர் முதலிடத்தைப் பிடிக்கப் பிரகாசமான வாய்ப்பு உண்டு.




துப்பாக்கி சுடும் போட்டியில் இரு தங்கங்கள் நிச்சயம் உண்டு என்று கணக்குப் போடுகிறார்கள், மைக்கேல் டயமண்ட்



**நீதிபதி:** நீ சாராயம் காய்ச்சினது உண்மையா?

**குற்றவாளி:** எஜமான்... எங்க கட்சி தலைவர்தான் வேலை தேடி அலைவதைக் கைவிட்டு விட்டு அவர்களுக்குத் தெரிந்த தொழிலை செய்யுங்கன்னு சொன்னாரு.

— மடுக்கரை யு. அரசுதேன்மொழி

---

மற்றும் மார்க் ரஸல் ஆகிய வீரர்களை மனத்தில் கொண்டு. ட்ரயத்லான் போட்டி முடிவு மிஷேல் ஜோன்ஸிற்கு சாதகமாகத் தான் இருக்குமாம். தடகளத்தில் பெண்களுக்கான 400 மீட்டர் பிரிவில் காத்தி ஃப்ரிமேன் உலக சாதனை படைக்கப் போவது நிச்சயம்.

எல்லாவற்றையும்விடத் தண்ணீர்தான் பல தங்கங்களை அளிக்கப் போகிறதாம். 400 மற்றும் 200 ஃப்ரீஸ்டைல் பிரிவில் இயான் தோர்பே, 1500 மீட்டர் நீச்சலில் கிராண்ட் ஹாக்கெட், 100 மீட்டர் பட்டர்ஃப்ளை பிரிவில் மைக்கேல் க்ளிம், 100 மீட்டர் பட்டர் ஃப்ளை பெண்கள் பிரிவில் பெட்ரியா தாமஸ், 4X 200 மீட்டர் ரிலேவில் கலந்து கொள்ளும் குழுவினர் - இவர்கள் ஆஸ்திரேலியாவின் தங்க அறுவடைக்குத் தோள் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்.

● போட்டிகள் துவங்குமுன் நடக்கப் போகும் முக்கிய நிகழ்ச்சிகள் என்னென்ன என்பதற்கான முன்னோட்டம்:

**ஆகஸ்ட் 1:** போன்டி கடற்கரையைச் சுற்றி அமைந்த பிரபல சாலையான 'குவீன் எலிசபத் டிரைவ்' மூடப்படுகிறது. பத்தாயிரம் பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய கடற்கரை வாலிபால் ஸ்டேடியம் ஒன்று இங்கு எழுப்பப்பட்டுள்ளது.

**ஆகஸ்ட் 6:** இன்றிலிருந்து தொடர்ந்து ஐந்து ஞாயிற்றுக்கிழமைகளில், ஏற்கெனவே கட்டணத் தொகை அளித்துள்ள பொது மக்களுக்கு ஒலிம்பிக் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும்.

**ஆகஸ்ட் 18:** "சிட்னி 2000 ஒலிம்பிக் கலைவிழா" தொடக்கம்.

**ஆகஸ்ட் 24:** முதலில் வருகை தரும் பிரேஸில் நாட்டு ஒலிம்பிக் குழுவினர் கான்பெராவில் உள்ள விளையாட்டு மையத்தில் பயிற்சி பெறத் தொடங்குகின்றனர்.

**ஆகஸ்ட் 28:** சக்தி மிக்க சர்வதேச ஒலிம்பிக் குழு சிட்னியில் கூடி கடைசி நேர ஏற்பாடுகளைத் தீர்மானிக்கும்.

**செப்டம்பர் 2:** பத்திரிகையாளர்கள் வசதிக்கென 24 மணி நேரமும் இயங்கும் தன் பணியைத் துவக்குகிறது ஒலிம்பிக்ஸ் குழு.

**செப்டம்பர் 10:** ஒலிம்பிக் கிராமம் (10,305 விளையாட்டு வீரர்களும் 5100 விளையாட்டு அதிகாரிகளும் தங்கவிருக்கும் இடம்) அதிகார பூர்வமாகத் திறக்கப்படுகிறது.

**செப்டம்பர் 12:** முதலில் ஒலிம்பிக் கிராமத்தில் நுழைகின்றனர், ஆஸ்திரேலிய விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும்.

**செப்டம்பர் 15:** இரண்டு நாள் ஒத்திகைக்குப் பிறகு இன்று கோலாகலமான துவக்க விழா.


● 1950 - செப்டெம்பர் 15 அன்று சிட்னி நகரைச் சுற்றியும் பனிப்படலம். அருகில் உள்ள நீலமலைகூடக் கண்ணுக்குப் புலப்படவில்லை.

அதே போன்றதொரு பனிமூட்டம் வரும் செப்டம்பர் 15 அன்று (அதாவது சரியாக 50 வருடங்களுக்குப் பிறகு) இருக்கக் கூடாதே என்ற இலேசான உதைப்பு இருந்து வருகிறது ஒலிம்பிக் குழுவினருக்கு. முக்கியமாக, சிட்னி விமான நிலைய அதிகாரிகளுக்கு. காரணம், அப்படியொரு நிலை ஏற்பட்டால் சிட்னிக்கு அன்று விமானத்தில் வரும் ஆயிரக்கணக்கான நபர்களை பிரிஸ்பேன், மெல்போர்ன், கான்பெரா ஆகிய அண்டைப் பகுதி விமான நிலையங்களுக்குத் திருப்பி விட வேண்டியிருக்கும். அதனால் ஏற்படக் கூடிய குழப்பங்கள் மிக அதிகம். கோடிக் கணக்கில் செலவு செய்து ஆஸ்திரேலிய அரசு தன் விமான நிலையத்தை ஒலிம்பிக்ஸுக்காக மேலும் நவீனப்படுத்தியதெல்லாம் பாழாகிவிடும்!

இம்முறை எதிர்பார்த்ததைவிட மிக அதிக டிக்கெட்டுகள் விற்பனையாகியிருக்கின்றன. விமானப் பயணிகளின் எண்ணிக்கையும் மேலும் அதிகமாக வாய்ப்புண்டு.

சிட்னி விமான நிலையத்தில் அதிகபட்சம் 1360 ஆகாய விமானங்களை நிறுத்த முடியும். பிறகென்ன, நம்மூர் முன்னாள் கொத்தவால் சாவடி போல சிட்னி விமான நிலையம் தோற்றம் அளிக்க வேண்டியது தான் பாக்கி!

சிட்னியிலிருந்து: **ரமணி**





# கபடி கபடி

**ஒலிம்பிக்ஸ் வந்து விட்டது! இதில் இந்தியாவின் பாரம்பரிய விளையாட்டான கபடியைச் சேர்க்க முயற்சி செய்வீர்களா என்று நம் அரசியல் தலைவர்களைக் கேட்டால், என்ன பதில் கிடைக்கும்?**

**கருணாநிதி** : கபடி என்று ஒரே விளையாட்டாக இருப்பதை க, படி என்று இரண்டாகப் பிரிக்கலாம் என்பது என் கருத்து. ஆனால், இதுகுறித்து மத்திய அரசு எடுக்கும் எந்த முடிவையும் ஏற்க நாங்கள் தயார்.

**ஜெயலலிதா** : நான் கபடியை ஒலிம்பிக்கில் சேர்க்கக்கூடாது என்று, அகில உலக ஒலிம்பிக் கமிட்டிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளதாகக் கூறுகிறார்கள் ஒரு சிலர். அவர்களுக்கெல்லாம் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அந்தக் கடிதத்தில் இருப்பது என் கையெழுத்தே இல்லை. அக் கடிதம் எழுதப்பட்டதாகச் சொல்லும் தேதியில் என் பேனா தொலைந்து, தேடிக் கொண்டிருந்ததற்கான ஆதாரம் இருக்கிறது. அதை கபில்சிபல் கோர்ட்டில் சமர்ப்பிப்பார்.

**மூப்பனார்** : கபடியை, ஒலிம்பிக்ஸில் சேர்க்கலாமா? வேண்டாமா? என்று, ஒலிம்பிக்சில் கலந்து கொள்ளும் அனைத்து வீரர்களிடமும் கருத்துக் கேட்டு, 3001ல் ஒலிம்பிக்ஸ் நடப்பதற்குள் ஒரு முடிவு எடுத்து விடலாம் என்பது என் கருத்து, எங்கள் கட்சியின் கருத்து, தமிழக மக்களின் கருத்து. சோனியாவின் கருத்தும் அநேகமாக இதுவாகத்தான் இருக்கும்.



**டாக்டர். ராமதாஸ்** : ஒலிம்பிக்சில் கபடியைக் கட்டாயம் சேர்க்க வேண்டும்! அதில், தமிழ் ஈழத்திலிருந்து ஒரு தனி அணியும் பங்கேற்க வேண்டும். அதற்கு இந்தியா எல்லா உதவியும் செய்ய வேண்டும்!

**சுப்ரமணியசாமி** : பி.ஜே.பி. மதவாதக் கட்சி; காங்கிரஸ் ஊழல் கட்சி. இரண்டுக்கும் மாற்றாக உள்ள ஜனதா கட்சி, இந்த ஆட்சியைக் கவிழ்த்து விட்டு, ஆட்சியைப் பிடிக்கும். அப்போது, ஒலிம்பிக்சில் கபடி நிச்சயம் இடம் பெறும். இதற்கு சந்திராசுவாமி மூலம் ஏற்கெனவே ஏற்பாடு செய்து விட்டேன்!





**வாஜ்பாய்** : ஒலிம்பிக்சில் கபடியைச் சேர்க்காமல் தடுக்க ஐ.எஸ்.ஐ. சதி நடக்கிறது. அதை இரும்புக் கரம் கொண்டு அடக்குவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கற்பனை : மானஸா**




# மலரே மலரே ஏன் மலர்ந்தாய்?

தி.மு.க.வின் தலைமை இலக்கிய அணி மற்றும் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்களின் கூட்டம் சமீபத்தில் சென்னை அறிவாலயத்தில் நடந்தது. இந்த அமைப்பின் மாநிலச் செயலாளராக தஞ்சை கூத்தரசன் என்பவரும் பொருளாளராக கயல் தினகரன் என்பவரும் இருக்கிறார்கள். அமைப்பின் தலைவரான மலைச்சாமி என்பவர் மதுரையைச் சேர்ந்தவர். எப்போதாவதுதான் சென்னைப் பக்கம் தலை காட்டுவார். வருடத்திற்கு இரண்டு நாள் கலைஞர் பிறந்தநாளின்போது நிகழ்ச்சிகள் நடத்துவதுதான் இலக்கிய அணியின் தலையாய பணி.

இந்த ஆண்டு கலைஞர் பிறந்த நாள் விழா செலவு பட்டியலிடப்பட்டபோதுதான் முறைப்புகள் எழுந்தன. அழைப்பிதழ் கொண்டு கொடுப்பதற்கு ஆட்டோ சார்ஜ் மட்டும் ஐயாயிரம் ரூபாய் என்று சொல்லப்பட்டிருந்தது. ஒரு மாவட்ட அமைப்பாளர் எழுந்து "இப்படி வருடா வருடம் ஆட்டோவிற்குச் செலவு செய்ததில், ஒரு சொந்த ஆட்டோவையே வாங்கி விடலாம்" என்று படபடப்புடன் கூறி அமர்ந்தார். பொருளாளரான கயல் தினகரன், சென்ற ஆண்டு கலைஞர் பவள விழா மலர் வெளியிட்டதில் ஆறு லட்சம் நஷ்டம் ஏற்பட்டு விட்டதாகவும், ஆயிரம் பிரதிகளுக்கு மேல் (ஒரு புத்தகத்தின் விலை 500 ரூபாய்) விற்காமல் தேங்கி விட்டதாகவும் கூறியவுடன் கூட்டத்தில் "இதென்ன கூத்து?" என்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஒரு எம்.எல்.ஏவிடம் ஒரு பக்க விளம்பரத்துக்கு 1000 ரூபாய் வாங்கியிருக்கிறீர்கள். நூற்றுக் கணக்கான கட்சிப் பிரமுகர்கள் விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள். ஆயிரம் பிரதிகள்தான் அச்சடித்ததாக முன்பு சொன்னீர்கள். இப்போது ஆயிரம் தேங்கி விட்டதாகப் புதுக் கரடி விடுகிறீர்களே!" என்று எரிச்சலுடன் கேட்டார் ஒரு மாவட்ட அமைப்பாளர். கடைசியில் பவள விழா மலரை கலைஞரின் சில புத்தகங்களோடு மொத்தமாக ஆயிரம் ரூபாய்க்கு விற்கலாம் என்ற முடிவு செய்யப்பட்டது.

"என்யா... இது போலச் செய்தால் ஏதோ கலைஞர் புத்தகங்கள் சரியாக விற்காததால் தான் இது போன்று தள்ளி விடுகிறார்கள் என்று பொதுமக்கள் நினைக்க மாட்டார்களா" என்று கேட்டார் தலைவர் மலைச்சாமி.

"அதுதானே" என்று மற்றவர்களும் சொல்ல, புத்தகச் சந்தை விஜயம் ஒத்தி வைக்கப்பட்டது.

"ஏதோ இரண்டு பேர் பிரைவேட் லிமிடெட் கம்பெனி போன்று இலக்கிய அணியை நடத்தியிருக்கிறார்கள். இவர்களது நடவடிக்கைகள் பிடிக்காததால்தான் இளைஞர் அணிகூட இந்த முறை எங்கள் மேடையில் நிகழ்ச்சிகளை நடத்தாமல் வள்ளுவர் கோட்டத்தில் தனியாக நடத்தினார்கள்" என்று நம்மிடம் கூறினார் இலக்கிய அணியின் உடன்பிறப்பு ஒருவர்.

இந்த நிலையில் பவள விழா மலர் பற்றிய கணக்கு வழக்குகளை முறைப்படி கழகத் தணிக்கைக் குழு முன் உடனடியாகத் தாக்கல் செய்ய வேண்டுமென்று கோரிக்கை எழுந்துள்ளது!

— தில்லப்பா

# சனி பெயர்கிறார்; பூமிக்கு நல்லது!

ஆகஸ்ட் 3ம் தேதி சனிப் பெயர்ச்சி நடக்கிறது. இதை முன்னிட்டு சென்னை வீனஸ் காலனி ஆஸ்திக சமாஜத்தில் நவக்ரஹ - சனீஸ்வர மகாயக்ஞம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த யக்ஞத்தை நடத்துபவர் சேங்காலிபுரம் என்.ராமதீட்சிதர். இந்த சனிப் பெயர்ச்சியின் பலன் என்ன என்பது குறித்து ராமதீட்சிதர் கூறுகிறார்:

"எப்பேர்ப்பட்ட மனிதருக்கும் தீமைகளை எந்த அளவு தரவல்லவரோ அந்தளவுக்கு நன்மைகளையும் அளிப்பதற்கு சனி பகவான் ஒருவருக்கே பரிபூரண வல்லமை இருக்கிறது. துன்பத்தையும் இன்பத்தையும் இவரைப்போல் அள்ளி அள்ளித்தர வேறு எவராலும் இயலாது.

பன்னிரண்டு ராசிகளில் ஒவ்வொன்றிலும் சனீஸ்வரர் மட்டுமே அதிக காலமாக இரண்டரை ஆண்டுகள் தங்கி விடுகிறார். அதனால்தான் எல்லோரும் சனிப்பெயர்ச்சியை விசேஷமாகக் கருதுகின்றனர்.

வருகின்ற ஆகஸ்ட் மாதம் 3ந் தேதியன்று மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு இடம் பெயர்ந்து செல்கிறார் சனி பகவான்.

பிதுர் காரியங்களைத் தொடர்ந்து செய்து வருபவரின் சந்ததியினருக்கும், அரச மரம் மற்றும் அதன் தொடர்புடைய மரங்களை வைத்து வளர்த்து வருபவருக்கும் சனி யோகக்காரனாக அமைந்து விடுவார்.

நவக்ரஹ ஹோமம் நிகழும் இடத்தில் அந்தந்த ராசிக்காரர்கள் ஜப ஹோமம் செய்து பரிகாரங்கள் செய்வதன் மூலம் சனிபகவானுடைய கோபம் சாந்தி அடைந்து, நன்மைகளை அடைய முடியும் என்பது ஐதீகம். பன்னிரண்டு ராசிக்காரர்களுக்கும் இந்த நவக்கிரஹ யாகத்தில் கலந்து கொள்வது மிகவும் நன்மைகளைக் கொடுக்கக் கூடியது. நவக்ரஹங்களுக்குத் தனித்தனியாகப் பத்தாயிரம் ஆவர்த்தி ஜபமும், சனீஸ்வர பகவானுக்கு லக்ஷம் ஆவர்த்தி ஜபமும் நடைபெற இருக்கிறது.

பூலோகத்தின் பிறப்பு லக்னம் மேஷம் ஆகும். சனிபகவான் இப்போது மேஷத்திலிருந்து ரிஷபத்துக்கு இடம் பெயர்ந்து செல்வது, பூமண்டலத்துக்கே நன்மைகள் தரும் காலமாக அமையும்.

சந்திப்பு : **ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**





* முலுண்டில் ரயில் மறியல்

கேவலம் ஒரு மழையால் இத்தனை நாட்கள் மும்பையை ஸ்தம்பிக்க வைக்க முடிந்திருக்கிறது. நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற கையாலாகாத்தனம் சிவசேனைக்காரர்களை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. அதுவும் குரு பூர்ணிமா நெருங்குகையில், தலைவருக்கு குரு தட்சணையாகத் தர ஒரு வம்பும், வழக்குமில்லாமல் என்ன செய்வது என்று ரொம்பவே தவித்துத் துரும்பாகிவிட்டார்கள். (முன்பும் குரு பூர்ணிமா அன்றுதானே தாக்கரேவின் வாக்குரிமை பறிக்கப்பட்டதற்கான ரகளைகள் நடந்தன?)

பிரஜைகள் தவிப்பதைப் பார்த்துக் கொண்டு, அது எதிர்க்கட்சியினராகவே இருந்தாலும் கூட, அரசால் சும்மா இருக்கதால், பாரபட்சமிக்கவர்கள் என்ற பொல்லாப்பு ஏற்பட்டு விடப் போகிறதே என்ற பாதுகாப்பு உணர்வோடு, சிவசேனைக்காரர்களே குப்பைத் தொட்டியில் வீசிவிட்ட, "சமாஜ்வாதி கட்சி

# கலவர முகாந்திரம்!

## மும்பை நிலவரம்
## - நேரடி ரிப்போர்ட்

முடியுமா? பார்த்தார்கள்.

"92 ஆம் ஆண்டில் மும்பைக் கலவரங்களை, தம் கனல் கக்கும் பேச்சாலும் இரத்த வெறி பிடித்த பேனாவாலும் தூண்டியவர் பால் தாக்கரேதான்" என்று, குப்பைத் தொட்டியில் கிடந்த குழந்தையை எடுத்து, அரசுத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டத் துவங்கிவிட்டார்கள்.

இந்தக் குழவியை மட்டும் உயிர்ப்பித்த

யின் அபு ஆஜ்மி, நாட்டு நலனைக் காற்றில் பறக்கவிட்டு, கலவரங்களை உண்டாக்கும் நோக்குடன் பேசினார்" என்ற நோஞ்சான் குஞ்சை, புஜ்பல் தேடி எடுத்து, ஸலைன் வாட்டர் ஏற்றி, பக்கத்துத் தொட்டிலில் போட்டு, ஆராரோ பாடினார்.

"இத்தனை பழைய மெட்டா?. சீ... போர்" (எட்டு வருடப் பழசாமே?) என்று,

தாலாட்டுப் பிடிக்காமல், முதல் குழந்தை வீல் வீல் என்று அலற, அனுதாப அழுகையாக, பக்கத்துத் தொட்டிலும் சிணுங்கியது. இந்த இரட்டை நாயனத்தால், மும்பைக்காரர்கள் நிம்மதி இழந்து தவிக்கிறார்கள். இந்த அழகில் முதல் குழந்தையைத் தீவிர சிகிச்சை + போஷாக்கிற்காக அமெரிக்கா அனுப்பப் போவதாக ஒரு வதந்தி!

அலுத்து சலித்தே விட்டது போங்கள்! 'மழை கொடுக்கும் தொல்லை ஒரு மூன்று மாதம்... தாக்கரே தொண்டர்களுக்கோ நாளும் மாதம்' என்று பாடாத குறைதான். பிரளய கால மழைபோல் பிரவாக மெடுத்து, எண்பது சொச்ச உயிர்களை பலிகொண்டு, பன்னிரண்டு நாட்கள் ஊழிக் கூத்தாடி, ஒருவாறாக வருணன் ஓய்ந்தானே என்று பார்த்தால், அவன் விட்ட இடத்திலிருந்து பிடித்துக் கொண்டு விட்டனர் சிவசேனைத் தொண்டர்கள்.

• தாணாவில் கடையடைப்பு



இத்தனைக்கும் தாக்கரேவைக் கைதெல்லாம் செய்யவில்லை! அவர் மீது வழக்குத் தொடரலாம் என்ற பச்சைக் கொடிக்கே இத்தனை கறுப்புக் கொடிகள்!

"என் மீது கை வைத்தால் மும்பையே பற்றி எரியும்" என்று நவீன கண்ணகி போல் தாக்கரே மிரட்ட, 'கைவைக்கா விட்டால் என்ன? கண் வைத்ததற்கே நாங்கள் சும்மா விடமாட்டோம்' என்று சிஷ்ய கோடிகள் களேபரப்படுத்தி விட்டனர்.

''தாக்கரேவைக் கைது செய்யும் உத்தேசமில்லை'' என்று கமிஷனர் டீ.வி.யிலும் ரேடியோவிலுமாக அலறிக் கொண்டிருக்கையிலேயே, கல்லெறி, கடையடைப்பு, பள்ளி, கல்லூரிகள் விடுமுறை முதலியவை ஆரம்பித்துவிட்டன. தாதர், பரேல், செம்பூர், காட்கோபர், முலுண்டு போன்ற இடங்களுக்கு, சனியன்று மாலையே சனி பிடித்துவிட, ஞாயிறன்று உதயமே மும்பை 'பந்தாக' ஆரம்பித்தது. பஸ்கள் எரிந்தன. ரயில் ஸர்வீஸ் நத்தையாக ஊர்ந்து பின் நின்றே விட்டன. அலுவலகம் செல்லத் துணிந்தவர்களை, போலீசாரே 'எதுக் குங்க ரிஸ்க்?' என்று 'தைரிய'ப்படுத்தினர்.

• "பதினாறும் கெட்டு பொதுவாழ்வு வாழ்க" - குரு பூர்ணிமாவுக்கு சிஷ்யர்களை வாழ்த்தும் தாக்கரே



"படத்துல ஏகப்பட்ட குரூப் டான்ஸ் இருக்கே... ஏன்?"

"தயாரிப்பாளர் காங்கிரஸ்காரராம்!"

- தஞ்சை தாமு



ஒரே நாள் எல்லா இடத்திலும் கலாட்டா என்றால் ரசிக்காதே என்று, தினம் ஒரு இடமாக, 'ஷிஃப்ட் சர்வீஸ்' போல் 'பந்தை' நடத்தினர். இதை ஒட்டி திங்களன்று, தாணா, டோம்பிவிலி, கல்யாண் போன்ற பகுதிகள் செயலிழந்தன.

தாக்கரேயின் மகன் உதவ், "தலைவர் கைதாவதைப் பற்றிய கவலை எங்களுக்கில்லை. ஆனால் அதை சாக்காக வைத்துக் கொண்டு ஐ.எஸ்.ஐ. ஏஜெண்டுகள் மீண்டும் மும்பையை முற்றுகையிட்டு ரணகளமாக்கி விடுவார்களே" என்று பலியாடுகளைப் பார்த்து ஓநாய்க் கண்ணீர் வடிக்கிறார். '356வது சட்டப் பிரிவின் கீழ் விலாஸ் ராவ் தேஷ்முக்கின் அரசை டிஸ்மிஸ் செய்யச் சொல்லலாமா' என்ற சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருவதாக 'அக்கறை'யுடன் அறிக்கை விட்டிருக்கிறார்.

வழக்கம்போல் மனோகர் ஜோஷி & கோ, அத்வானியைச் சந்திக்கப் போய் விட்டது! தாக்கரே கைதானால் மாநிலத்தில் சட்ட ஒழுங்குப் பிரச்னை வெடிக்கும் என்ற ஊரறிந்த ரகசியத்தை, அவர் காதில் போட்டு வைக்க!

"இத்தனை கூத்தும் எதற்குத் தெரியுமா? மழை காரணமாக காட்கோபரில் நிகழ்ந்த நிலச் சரிவில் ஏற்பட்ட உயிரிழப்பையும் நாசத்தையும் விசாரிக்க, சோனியா காந்தியே 'ஸ்பாட் விசிட்' செய்வதாயிருந்தது. இந்தச் செய்தி வெளியே வந்தால் அவமானமாயிற்றே என்று, 'தாக்கரே வழக்கு' என்ற துருப்புச் சீட்டை சாதுர்யமாகப் பிரயோகித்து, விஷயத்தை அப்படியே அமுக்கிவிட்டார் புஜ்பல்" என்று சிவசேனைத் தலைவர் நிதின் கட்காரி சொல்கிறார்.

"எல்லாம், துவங்க இருக்கும் மழைக் கால செஷனில் எங்களை 'டிஸ்-குவாலிஃபை' செய்து, பிஜேபி - சிவசேனை எம்.எல்.ஏ.க்களைக் கொத்தாக ஓரங்கட்டவென்று நடத்தப்படும் நாடகம்! நாங்களா ஏமாறுவோம்? இந்த விஷயத்தைப் பற்றி, மன்றத்திலே கண்டு கொள்ளவே மாட்டோம்" என்று கண் சிமிட்டுகிறார்கள், கஜானன் கீர்த்திகர், ராஜ்புரோஹித் போன்ற 'விஷயமறிந்த' எதிர்க்கட்சித் தலைவர்கள்.

இவர்களுக்கே இத்தனை புத்திசாலித்தனம் வந்துவிட்டதென்றால், ஆண்டாண்டு காலமாக இந்த அரசியல் கோமாளித்தனங்களைப் பார்த்துப் பார்த்துப் பழுத்த பொது மக்களுக்கு ஞானமே வந்திருக்காதா என்ன?

எதையும் கண்டு கொள்ளாமல் இருக்கக் கற்றுக் கொண்டு விட்டார்கள். உதாரணத்துக்கொன்று :

ஞாயிறன்று, உச்ச பந்த் முகூர்த்தமான காலை 10.30 - 12.30 வேளையில், முலுண்டு ஃபைன் ஆர்ட்ஸ்காரர்கள், 'இன்றைய சூழலுக்குகந்தது காதல் திருமணமா? நிச்சயிக்கப்பட்ட திருமணமா?' என்று பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்தார்கள் — ஹவுஸ்ஃபுல் ரசிகர்களுடன்!


— ஜெயஸ்ரீ ராஜ்

"சென்னையில் பல மாடி கார் பார்க்கிங் கொண்டு வருவதற்கு முதல் முட்டுக்கட்டையாக இருப்பது இடத்தின் விலை. கோடிக்கணக்கில் விலை கொடுத்து இடம் வாங்கி அதில் கார்பார்க்கிங் கட்டினால் என்ன வருமானம் வந்து விடப் போகிறது என்று தனியார் துறையினர் தயங்குகிறார்கள். இதை மனத்தில் கொண்டு குறைவான இடத்தில் மிக அதிக கார்களை நிறுத்த முடியுமா என சிந்தித்தேன். அதன் விளைவே நான் கண்டுபிடித்திருக்கும் ஹைடெக் மல்டிலெவல் ஃபுல்லி ஆட்டோமேடிக் கார்பார்க்கிங்" என்கிறார் ஓய்வு பெற்ற பொறியாளர் வெங்கட்ராமன்.

"சென்னையில் இன்று பார்க்கிங் பிரச்னை அதிகத் தலைவலியாக இருக்கும் இடங்கள் பாரிமுனை, அண்ணாசாலை, தி.நகர், மயிலாப்பூர், இராயப்பேட்டை, புரசைவாக்கம் ஆகியவை.

"இங்கெல்லாம் எம்.எம்.டி.ஏ.வின் விதிமுறைகளைப் பின்பற்றிப் பல மாடி கார் பார்க்கிங் கட்டுவதென்பது இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் நடக்காத காரியம். காரணம், அவர்கள் நிர்ணயித்திருக்கும் விதிமுறைகளின்படி இருநூறு கார்கள் நிறுத்த அறுபதாயிரம் சதுர அடி இடம் வேண்டும். அதில் கார்கள் ஒவ்வொரு தளமாக ஏறிச்

# பார்க்கிங் நோ ப்ராப்ளம்!



• வெங்கட்ராமன் விவரிக்கும் பார்க்கிங் முறை இதுதான்!

• வெங்கட்ராமன்

செல்ல பிளைஓவர்கள், கட்டடம் இவற்றுக்கு மட்டுமே ரூபாய் இருபத்து நான்கு கோடி செலவாகும்! இட மதிப்பு தனி. இதில் ஐந்தில் ஒரு பங்கு மட்டும் செலவாகும் விதத்தில் ஏழாயிரத்து ஐந்நூறு சதுர அடியில் ஐந்தடுக்கு மாடியை உருவாக்கி இருநூறு கார்களை நிறுத்தி விடலாம்!'' என்கிறார் இவர்.

''ஒரு தளத்தில் நாற்பது கார்களை இரண்டு வரிசையில் எதிரும் புதிருமாக நிறுத்தலாம். ஒவ்வொரு தளத்திற்கும் கூரையின் உயரம் ஆறு அடி இருந்தால் போதும். பார்க்கிங் கட்டடத்தின் இடது, வலது ஆகிய இரண்டு பக்கங்களிலும் இரண்டு லிஃப்ட் பொருத்தப்பட்டிருக்கும். படத்தில் காட்டியுள்ளபடி, கார் உரிமையாளர் லிஃப்ட் உள்ளே காரை நிறுத்திப் பூட்டி விட வேண்டியதுதான். எந்தத் தளத்தில் இடமிருக்கிறதோ... அந்தத் தளத்திற்குக் காரை லிஃப்ட் எடுத்துச் செல்லும். தேர்வு செய்யப்பட்டத் தளத்திற்குச் சென்றதும் அந்தத் தளத்தில் 'பிளோர்மேனுவர்' என்ற கன்வேயர் ரெடியாகக் காத்திருக்கும். லிஃப்ட் திறந்ததும் தனக்குத் தரப்பட்ட கம்ப்யூட்டர் உத்தரவுப்படி காரை ஏந்திக்கொண்டு பின் நோக்கி வந்து தேர்வு செய்யப்பட்ட இடத்தில் காரை பார்க் செய்துவிடும். இது பல சரக்குக் கடையில் உள்ள ராக்கில் பலவகை குளியல் சோப்புகளை அடுக்கி வைப்பது போலத்தான்'' என்று கூலாகச் சொல்லும் வெங்கட்ராமன், ஒரு காரை லிஃப்ட் மூலம் எடுத்துச்சென்று பார்க் செய்யவும், திரும்ப டெலிவரி செய்யவும் அறுபது வினாடிகள் தான் ஆகும் என்கிறார்.


இந்த பார்க்கிங் சிஸ்டத்திற்கு எழுபத்தைந்து கிலோவாட் மின்சாரம் இருந்தால் போதும். மேலும் கார் திருட்டு மற்றும் காரின் உதிரிப்பாகங்களைத் திருடிச் செல்வதற்கு இதில் வாய்ப்பே கிடையாது என்கிறார்.

நில மதிப்பு தவிர, கட்டடம் இயந்திரங்கள் இரண்டிற்கும் ஐந்து கோடியே முப்பது லட்சம் தேவைப்படும். லிஃப்ட் இயந்திரங்களையும், ப்ளோர் மேனுவர்களையும், மிகக் குறைந்த விலையில் தயாரித்துத் தர தமிழகத்திலேயே பல புகழ் பெற்ற நிறுவனங்கள் உள்ளன என்று கூறும் வெங்கட்ராமன், 'அர்பன் எஞ்ஜினியரிங் அண்டு பார்க்கிங் சிஸ்டம்' என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

''எனது தானியங்கி கார் பார்க்கிங் சிஸ்டம் குறித்து மேயரிடம் தெரிவிக்கப் பல முறை முயற்சி செய்தேன். ஆனால் இதுநாள் வரை அவரைச் சந்திக்க முடியவில்லை. கார் உரிமையாளர்கள் குறைந்தது இருபது ரூபாய் கொடுத்து பிரீமியம் பார்க்கிங் செய்யத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் பார்க்கிங் கட்டணம் வசூலிப்பது கடினம் என்றும், இந்தத் திட்டத்திற்கு அவ்வளவு சீக்கிரம் ஆதரவு கிடைக்காது என்றும் அரசுத் தரப்பில் நினைக்கிறார்கள். இது வீண் பயம். அரசுக்குச் சொந்தமான பல இடங்கள் வீணாகக் கிடக்கின்றன. அவற்றில் ஒரு சதவீத இடத்தை ஒதுக்கினாலே கார்பார்க்கிங் பிரச்னை ஒழியும். அரசு இடம் தரும் பட்சத்தில் தனியார் நிறுவனக் கூட்டுறவுடன் பல மாடி பார்க்கிங் சிஸ்டத்தை ஒரு தனித்துறையாகவே கொண்டு வந்து பலருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கலாம்!'' என்கிறார் இவர்.

— ஜெயந்தன்

படம்: ஸ்ரீஹரி



''என்னது இது?''

''காசில்லாமல் சாப்பிடுபவர்களுக்காகவே நவீன கிரைண்டர்!''

— செல்வம்

## குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

### பி.ஜே.பி விருப்பம்



# டபுள் ஆக்ஷன்!

பதவி வேறு. இலட்சியம் வேறு. வயிற்றுப் பாட்டுக்குத் தேர்ந்தெடுக்கும் பதவியெல்லாம் இலட்சியம் என்று எண்ணி விடுகிறோம். பதவி என்பது வாழ்க்கைப்பாட்டுக்கு வழிகாட்டும் கருவி. இலட்சியம் என்பது, சமுதாயத்திற்காக, சமுதாயத்தின் நன்மை மீது நமக்கு இருக்கின்ற அக்கறையினைச் செயல்படுத்த எண்ணுகிற திட்டம். பலருக்கும் கொள்கைகளைத் தியாகம் செய்த பிறகு தான் பதவி கிடைக்கும். எனக்கோ, என்னைத் தியாகம் செய்து கொள்கைகளை நிறைவேற்றுகிற பொறுப்பு வாய்த்திருப்பதில் மகிழ்ச்சியே!

பூர்வாசிரமத்தில் கல்லூரியில் படிக்கும் காலத்தில் ஆசிரியராக ஆசைப்பட்டேன். ஆசிரியப் பணி புனிதமானது. கற்பித்தலில் எனக்கு இயல்பாகவே ஆர்வம் உண்டு. இளம் தலைமுறையை நாற்றங்கால்களாக உருவாக்கும் பணி. அதுவே என்னை ஆசிரியப் பணியின்பால் ஈர்த்தது. இன்று சமுதாயத்தில் தினந்தோறும் எனது கற்பித்தல் பணிகள் போதனைகளாகத் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. ஒரு நல்ல மாணவன்தான் ஒரு நல்லாசிரியனாக முடியும். இன்றும் நான் தினந்தோறும் கற்கின்ற மாணவன்தான்.

ஏகலைவனுக்குக் கூட அவனுடைய குருநாதனின் குரல் கேட்கும் தூரம் வரை அனுமதி இருந்தது. எனக்கு போதனைகளைத் தந்து கொண்டிருந்த குருமகாசந்நிதானம் (தவத்திரு குன்றக்குடி அடிகளார்) என்ற பல்கலைக் கழகம் குரல்கூடக் கேட்க முடியாத தூரத்திற்கு விடை பெற்றுச் சென்று விட்டார்கள். நான் திருமடத்திற்கு வந்து இரண்டு ஆண்டுகள் நிறைவெய்தும் முன்பே அவர் இறைநிலையடைந்தது - குருவியின் தலையில் இமயத்தின் கனமையை ஏற்றி வைத்த மாதிரி ஆகிவிட்டது.

ஊதியம் பெற்று குறிப்பிட்ட நேரம் மட்டுமே பணியாற்றும் ஆசிரியப் பணியை விரும்பினேன். ஆனால் ஊதியம் ஏதும் பெறாமல் முழுநேரமும் சமூகத்திற்குப் பணியாற்றக்கூடிய நிலை வாய்க்கப்பட்டதில் மகிழ்ச்சிதான். மாணவனாகவும், ஆசிரியனாகவும் பணிகள் நாளும் தொடர்கின்றன.

சந்திப்பு, படம் : **கி. சிங்காரவடிவேல்**



**பே**ருந்து நிறுத்தத்தின் நிழற்குடையின் கீழ் அதை ஆக்ரமித்திருந்த அந்த டீக் கடையைப் பார்க்கப் பார்க்கக் கோபமாய் வந்தது புவனாவுக்கு.

நேற்றைய மாலை நேரமும், மழையும் கூடவே நினைவுக்கு வந்து அவளை உசுப்பேற்றின.

நேதாஜி சாலையில் சாமான்களை வாங்கிக் கொண்டு திரும்பும் போதுதான் தூறலாய் ஆரம்பித்தது மழை.


பஸ் நிறுத்தத்தில் தவிப்புடன் நின்றாள். பேருந்து வந்து விட்டால் நல்லது. ம்ஹூம்! மழை சடசடவெனப் பிடித்துக் கொண்டது. ஒதுங்கி நிற்க நிழற்குடையைத் தவிர வேறு இடமில்லை. ஆனால் அங்கும் ஒதுங்க முடியாத நிலை.

நிழற்குடையின் கீழ் பாதி இடத்தை அடைத்தபடி கடை. அருகில் சிகரெட், பீடி வாசனைகளுடன் ஆண்கள் கூட்டம்.

பையிலிருந்த அரை கிலோ காப்பிப் பொடி மழையில் நனைந்து கரைந்து விடும். கடைக்காரன் பிளாஸ்டிக் பையில் போடுவதற்குள் பஸ் பிடிக்கும் அவசரத்தில், காகிதப் பையுடனேயே வாங்கி வைத்துக் கொண்ட தவறு புரிந்தது.

**கிருஷ்ணா**

காப்பிப் பொடி போகிறது. மழையில் புடைவை நனைந்து, உடலோடு ஒட்டிய உடையுடன் பஸ்ஸில் பயணித்து...



கோபமாக வந்தது.

'இன்றைக்குப் பார்த்து குடிதாருக்குப் பதில் சேலை!

அதோ பஸ்! ஏறிக் கொண்டு விட்டாள். நேற்றைய அவஸ்தை, இன்று ஆத்திரமாக உருவெடுத்து அவளுக்குள் கனன்றது.

நேரே அந்தப் பெட்டிக்கடை நோக்கிச் சென்றாள்.

"என்னம்மா வேணும்? ஷாம்பூ பாக்கெட்டா?"

சாயம் போன சிவப்பு முண்டா பனியனு

டன், எண்ணெயில்லா பரட்டைத் தலையுடன், கருப்பாய், ஒல்லியாய் இருந்தான் கடைக்காரன். புஜத்தில் கருப்புக் கயிறு வேறு.

வெந்நீர் பாய்லர் சாம்பலை ஒரு தட்டு, தட்டினான். குவளையிலிருந்து டீயை, தம்ளரில் ஆற்றினான். கிளாஸ் தம்ளர் விளிம்பில் அழுக்கு வளையம்.

"ஏம்பா, இது நியாயமா?"

புவனாவின் சீற்றம் அவனை நிமிர வைத்தது.

''மழை, வெயிலுக்கு ஒதுங்க, இந்த நிழற்குடையை ஜனங்க வசதிக்காகக் கட்டியிருக்காங்க. நீ இப்படி டீக்கடை போட்டு இடத்தை ஆக்ரமிச்சா என்ன அர்த்தம்?"

அவளை யோசனையுடன் பார்த்தான் அவன்.

''பிழைப்புக்காகத் தான்ம்மா கடை போட்டிருக்கேன்'' என்றான்.

"போட்ட கடையைத் தள்ளிப் போடறது?"

''மழை பெய்ஞ்சா சாமானெல்லாம் கெட்டுப் போயிடுமே. அதான் உள்ளே வந்துட்டேன்."

''அப்ப நாங்க நனைஞ்சா பரவாயில்லையா?"

''ஏன், இவ்வளவு இடமிருக்கே'' என்று கையைக் காட்டினான். காம்பவுண்ட் சுவரில் மாதவனும், ஷாலினியும்



'அலைபாய்ந்து' கொண்டிருந்தார்கள்.

"இந்த பிடி நாத்தத்திலா? அதுவும் ஆம்பளைங்களோட நெருக்கியடிச்சு எப்படி நிற்கறதாம்?"

சட்டென அவன் நிதானம் தவறியது.

"என்னம்மா பேசிக்கிட்டே போறே? பஸ் கூட்டத்துல ஆம்பளைங்களோட இடிச்சுக்கிட்டு நிக்கறதில்லியா? பொழைப்பைக் கெடுக்காதே. போ, போ!"

அவனது ஒருமைப் பேச்சும், அலட்சியமும் அவளை ரௌத்ரமாக்கியது.

கடையின் அருகிலிருந்த ஆண்கள் இவளைப் பார்த்து ஏளனமாய்ச் சிரிப்பது கண்டாள்.

விருட்டென நகர்ந்தாள். சும்மாவிடக் கூடாது இவனை. கடையைக் காலி செய்ய வைத்தே ஆகவேண்டும்.

அப்பாவிடம் ஆலோசனை கேட்டாள், வீட்டுக்கு வந்ததும்.

"எதுக்கும்மா வம்பு? நாளைக்கு நம்ம வீட்டு வாசல்ல வந்து கத்தினான்னா நமக்குத்தான் அசிங்கம்" என்றார்.

ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர். சகிப்புத்தன்மை இரத்த ஓட்டத்தில் கலந்து போனவர்.

தானே நகராட்சிக்குப் புகார் கடிதத்துடன் சென்றாள்.

வீட்டு பிளான் அப்ரூவல் என்றால் பணம் வரும் என்ற நப்பாசையுடன் இவளை நெருங்கிய பியூன், இவள் வரவின் நோக்கம் புரிந்ததும் விலகினான்.

"அதோ அந்தப் புகார்ப் பெட்டியிலே போட்டுட்டுப் போங்கம்மா" என்றான் அலட்சியமாய்.

ஒரு வாரம் சென்றது. பலனில்லை. நேரே போய் நகராட்சி ஆணையரைச் சந்தித்தாள்.

காந்தியின் சிரிப்புடன், முதல்வரின் சிரிப்பும் கலந்து கிடந்தது ஆணையருக்குப் பின்புற சுவர் போட்டோக்களில்.

"வாங்கம்மா. உங்க புகார் நியாயமானதுதான். எங்கே நேரம்? பாருங்க. அமைச்சரின் சுற்றுப் பயணம். எலெக்ஷன் வேற வருதுல்ல, அதான் முடுக்கி விடறாங்க. ராத்திரி முழுக்க சிவராத்திரி. பார்க்கறேன். இந்த வாரத்துல அந்தக் கடையை எடுத்துடலாம்" என்றார்.

சோர்வான அவர் முகத்திற்கு முன் வேறு எதுவும் பேச முடியாமல் திரும்பினாள்.

அடுத்த ஒரு வாரம் ஓடியது. நடுவில் பஸ் ஸ்டாப்பில் நின்ற போது கடைக்காரன் வம்பிழுத்தான்.

"நகராட்சி ஆளுங்க வந்தாங்க. அடிக்க வேண்டிய காசை அடிச்சேன். போயிட்டாங்க" என்றான்.

அவன் கடையில் இப்போது ஆளுங் கட்சிக் கொடி வேறு புதிதாய் பறந்து கொண்டிருந்தது.

கையாலாகாத ஆத்திரத்துடன் வீடு திரும்பினாள்.

நடராஜன் மாமா வந்திருந்தார்.

"என்ன மருமகளே, சிவப்பு வர்ணம் பூசிக்கிட்டு வர்றே முகத்துல?"

தூரத்து சொந்தம். நெருங்கிய நட்பு. மாதம் ஒருமுறை வியாபார விஷயமாய் இந்த ஊருக்கு வருவார். இரண்டு நாள் தங்கியிருப்பார். வீடே கலகலப்பாகி விடும்.

"அவ கிடக்கா நடராஜா. வெட்டியா அலையறா" என்றார் அப்பா.

"ஸ்! நீ சும்மா இரு. புவனியிடமே கேட்டுக்கறேன்."

மாமாவிடம் பொருமித் தீர்த்தாள். தன் கோபத்தையும் கேட்க ஆள் கிடைத்தது ஆறுதலாயிருந்தது.

"முதல்ல ஒரு அட்டைப் பெட்டியிலே சிகரெட், விக்ஸ் மிட்டாய்னுதான் தள்ளி நின்னு ஆரம்பிச்சான் மாமா வியாபாரத்தை. திடீர்னு உள்ளே வந்து பெட்டிக் கடை போட்டான். நாலு பக்கமும் கள்ளிப் பெட்டி மரத்துனாலே சட்டம் அடிச்சு உள்ளே நின்னு வியாபாரம் செஞ்சான். அடுத்ததாய் டீக்கடையும் போட்டுட்டான்.

---

***"டாக்டருக்குக் குசும்பு ஜாஸ்தி!"***

***"எப்படிச் சொல்றீங்க?"***

***"தூக்கம் வரலைன்னதுக்கு பிரிஸ்கிரிப்ஷன்ல நூறு மெகா சீரியல்கள் பேருங்களை எழுதிக் கொடுத்து தினம் ஒன்றாகப் பார்க்கச் சொல்லிட்டாரு!"***

**— பா. விஸ்வநாதன்**



அநியாயம் மாமா. அன்னிக்கு மழையிலே, கைக் குழந்தையோட ஒரு அம்மா ஒதுங்க முடியாம தவிச்ச தவிப்பிருக்கே... அவனைக் காலி பண்ண வைக்கணும் மாமா."

அவளைப் புன்சிரிப்புடன் பார்த்தார் நடராஜன்.

"புவனாவை இன்னமும் குழந்தைன்னே நினைச்சேன். வளர்ந்துட்டா. சமூக அக்கறை வேற வந்துடுச்சு, பலே."

அவர் பாராட்டவும் சிணுங்கினாள்.

"எனக்கு உதவுங்க மாமா எப்படி யாச்சும்."

"கவலைப்படாதேம்மா. இந்த ஊரு எஸ்.பி. என் நண்பர்தான். நேரே போய் பார்த்துடலாம்."

மாமாவுடன் உற்சாகமாய்க் கிளம்பினாள்.

எஸ்.பி. வீட்டில் நல்ல வரவேற்பு.

"போன் பண்ணிச் சொன்னாலே போதுமே சார். ஏதோ, இதனாலே எங்க வீட்டுக்கு நீங்க வந்ததுலே மிகவும் சந்தோஷம்."

மாமாவின் வியாபார அந்தஸ்து அங்கு தெரிந்தது.

அடுத்த நாளே போலீஸ் வேன் பஸ் நிறுத்தத்தில் வந்து நின்றது.

பொருட்கள் சிதறின. வெந்நீர் பாய்லர் சாலையில் உருண்டது. டீக்கடை ஆள் வேனில் ஏற்றப்பட்டான்.

தூரத்தில் நின்றபடி அந்தக் காட்சிகளை ரசித்தாள் புவனா.

வேன் அகன்றதும் நிழற்குடைக்குள் போய் நின்றாள். வெள்ளை மாளிகையில் ஜனாதிபதியாய் நிற்பது போலப் பெருமையாய் உணர்ந்தாள்.

அடுத்த மாதம் நடராஜன் அவள் வீட்டுக்கு வரும் போது அந்த வித்தியாசத்தைக் கண்டார்.

புவனாவின் வீட்டு முன்புறம், காம்பவுண்ட் சுவரை ஒட்டி, உட்புறமாய் ஒரு பெட்டிக் கடை.

"அட, மாமா! வாங்க, வாங்க."

உற்சாகமாய் வரவேற்ற புவனாவை கண் சிமிட்டலுடன் பார்த்தார்.

"என்னம்மா இந்த முறை ஏதும் சமுதாய சேவை உண்டா? எஸ்.பியைப் பார்க்கணுமா?"

மாமாவின் கிண்டலுக்கு வெட்கமாய்ச் சிரித்தாள்.

"அது சரி புவனா, நம்ம வீட்டு வாசலிலே



"வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்'ன்னு சொன்ன டாக்டர் பேச்சைக் கேட்டு பெட்டுல உட்கார்ந்து சத்தம் போட்டு சிரிச்சது தப்பாப் போச்சு...!"

"என்னாச்சு...!?"

"ஜெனரல் வார்டுல இருந்து டிஸ்சார்ஜ் பண்ணி மென்டல் வார்டுல அட்மிட் பண்ணிட்டாங்க!"

— கே.ஜி.எஸ். கோவிந்தன்

திடீர்னு ஒரு பெட்டிக்கடை முளைச்சிருக்கே? என்ன விஷயம்?"

புவனாவுக்கு அந்த நிகழ்ச்சி மனத்தில் ஓடியது.

அன்று ஒருநாள் கோவிலுக்குப் போய் விட்டுத் திரும்பும் போதுதான் அந்த டீக் கடைக்காரனை கவனித்தாள்.

மனைவி, இரு குழந்தைகளுடன் கோவில் வாசலில் அமர்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான்.

பிழைப்பைக் கொடுத்த கடையும் போய்; சாமான்களும் போய்விட, வேறுவழியின்றி, காசுக்கு வழியில்லாமல் அவன் பிச்சையெடுக்க வந்து விட்டது புரிந்தது.

அவளுக்குள் நெருடியது. தன்னால் தானே? உழைக்கத் தயாராயிருந்தும், அவன் வேறுவழியின்றி இந்த நிலைக்குத் தாழ்ந்து விட்டது அவளை வருத்தியது.

அப்பாவுடன் பேசினாள். அவனுடன் பேசி, பணம் தந்து உதவினாள். இவள் வீடு இருக்கும் இடமும் மக்கள் அதிகமாய்ப் புழங்கும் இடமாதலால், அவன் வியாபாரம் சூடுபிடிக்க ஆரம்பித்து விட்டது.

மாமா அவளை வியப்புடன் பார்த்தார்.

"அன்னிக்கு அவனை விரட்டினே. இன்னிக்கு வலியப் போய் உதவியிருக்கே. உன்னைப் புரிஞ்சுக்கவே முடியலேம்மா."

"மாமா, அன்னிக்கு அநியாயத்தைத் தட்டிக் கேட்டேன். இன்னிக்கு மனிதாபிமானத்தினாலே இதைச் செஞ்சேன். அவ்வளவுதான்!"



# S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

**முதியோர் சேவை பெரியது!**

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

**S.V. HOME FOR AGED**

#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356. Pager : 9610 - 114668
Web Page : www.svhome.org
Email: svhome@svhome.org

## "5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"



Lakshmi Iyer

ஸ்ரீமதி. லக்ஷ்மிஐயர்,
மேட்டூர்டேம் R.S.,
சேலம் மாவட்டம்,
தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும் , பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது, இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)** இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி திற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டிசை (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பவுல்டிசை (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டீஸ், ஸ்பாண்டிலைட்டீஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.

★ ஒரு வரைப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க
இப்போதே
தொடர்பு கொள்க.
தொலைபேசி
**0413-346683**

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

**MARC ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்**
32, செயின்ட் தெரெஸ் வீதி, பாண்டிச்சேரி – 1
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, ஸ்பார்ச்சுன் பேக்கரி எதிரில்)
**Fax : 91 - 0413 - 346683**



# பொன்னியின் செல்வன்

### பதினாறாம் அத்தியாயம்

## பூங்குழலி பாய்ந்தாள்!

சோழ நாட்டில் பிரயாணம் செய்துள்ளவர்கள் அந்நாட்டின் இயற்கை அமைப்பில் ஒரு விசித்திரத்தைக் கவனித்திருப்பார்கள். சோழ நாட்டைச் சோறுடைய வளநாடாகச் செய்யும் நதிகளில் வெள்ளம் வரும்போது, வெள்ளத்தின் மேல் மட்டம் நதிக்கு இருபுறங்களிலுள்ள பூமி மட்டத்துக்கு மிக்க உயரமாயிருக்கும். இவ்விதம் இருப்பதினாலேதான் நதிகளில் வரும் வெள்ளம் வாய்க்கால்களின் வழியாக வயல்களுக்குப் பாய்வது சாத்தியமாகின்றது.

இந்த நிலையில் வெள்ளத்தை நதிப் படுகையோடு போகச் செய்வதென்பது மிகவும் சிரமமான காரியம் அல்லவா? நதிகளுக்கு இரு பக்கங்களிலும் உயரமான கரைகள் உறுதியாக அமைந்திருக்க வேண்டும். இல்லாவிடில், வெள்ளம் நதியோடு போவதற்குப் பதிலாக, மழை நீர் நாலாபுறமும் பாய்ந்து ஓடுவது போல் ஓடிச் சோழ நாட்டைத் தண்ணீர் தேங்கிய சதுப்பு நிலமாக்கி ஒன்றுக்கும் பயனற்றதாகச் செய்துவிடும்.

இதை முன்னிட்டு ஆதி காலத்திலிருந்து சோழ மன்னர்கள் காவேரிக்கும் காவேரியின் கிளை நதிகளுக்கும் கரைகள் அமைப்பதில் மிக்க கவனம் செலுத்தினார்கள். கரிகால் வளவன் ஈழ நாட்டிலிருந்து யுத்தத்தில் தோற்றவர்களைச் சிறைப்படுத்தி வந்து காவேரிக்குக் கரையெடுக்கும் வேலையில் அவர்களை

அமரர் கல்கி

ஈடுபடுத்தினான் என்னும் வரலாற்றை நேயர்கள் அறிந்திருப்பார்கள்.

காவேரியின் கிளை நதிகளில் தண்ணீர் நல்ல மேல் மட்டத்தில் வருவதற்கு உதவியாகவே ஸ்ரீரங்கத்துக்கு ஒரு காத தூரம் கிழக்கே சோழ மன்னர்கள் கல்லணை கட்டினார்கள். அந்த அணையின் மூலம் தண்ணீர் மட்டம் மேலும் உயர்ந்து கிளை நதிகளில் நிறையத் தண்ணீர் பாய்வது சாத்தியமாயிற்று.

இவ்விதம் இயற்கை அமைப்போடு இடைவிடாத செயற்கை முயற்சிகளும் சேர்ந்தே சோழ நாட்டைப் பண்டை நாளிலேயே நீர்வளத்தில் இணையில்லாத நாடாகச் செய்திருந்தன.

சோழ வளநாட்டுக்கு இவ்விதம் இயற்கை விசேஷ உதவிகள் செய்தது போலவே சில சமயம் விபரீதமான அபாயங்களையும் உண்டாக்கி வந்தது.

சோழ மண்டலத்துக் கடற்கரைக்குக் கிழக்கே கடலில் அடிக்கடி சுழிக்காற்றுகளும் புயற்காற்றுகளும் தோன்றுவதுண்டு. இக் காற்று சில சமயம் கடற்கரையோரமாக வடக்கு நோக்கிச் சென்று கிருஷ்ணை – கோதாவரி முகத்துவாரங்களிலோ அல்லது கலிங்க நாட்டிலோ உள்ளே பிரவேசித்துப் பெரு மழை கொட்டச்செய்து கடுமையான சேதங்களை விளைவிக்கும். வேறு சில சமயங்களில் சோழ நாட்டுக்குள்ளேயே நேரடியாகப் பிரவேசித்து மேற்கு நோக்கி விரைந்து செல்லும். கோடிக்கரைக்கும் கொள்ளிடக் கரையின் முகத் துவாரத்துக்கும் மத்தியில் இவ்விதம் சுழிக்காற்று உள்நாட்டில் பிரவேசிப்பது சரித்திரத்தில் பலமுறை நடந்திருக்கும் சம்பவம். சில சமயம் அச் சுழிக்காற்றுகள் கோர பயங்கர ரூபங் கொண்டு கடலையே பொங்கி எழச் செய்து கடற்கரையோரமுள்ள ஊர்களையே அழிந்து விடும்!

பூம்புகார் என்று வழங்கிய காவேரிப் பட்டினத்தைக் கடல் கொண்டது வெறுங் கதையன்று; சரித்திர ஆதாரங்களினால் நிரூபிக்கக்கூடிய உண்மை நிகழ்ச்சியேயாகும்.

நதிகளில் வெள்ளம் அதிகமாக வரும் போது சில சமயம் கரைகள் உடைந்து விடுவதும் உண்டு. நதிகளின் நீர்மட்டத்தைக் காட்டிலும் பூமி மட்டம் தாழ்வாயிருக்கும் காரணத்தினால் உடைப்பு எடுத்ததும் சுற்றுப்புறமெல்லாம் ஒரே தண்ணீர் மயமாகி விடும். நதிகளுக்கு அருகிலுள்ள ஊர்கள் முழுகிப் போய்விடும். அப்போதெல்லாம் ஜனங்கள் உயிர் தப்புவதற்கு அக்கம்பக்கத்திலுள்ள கோயில்கள் உதவியாயிருக்கும்.

விஜயாலய சோழனின் மகன் ஆதித்த சோழன் காவேரி உற்பத்தியாகும் ஸஹ்ய மலையிலிருந்து அந்த மாந்தி கடலில் சங்கமமாகும் இடம் வரையில் நூற்றெட்டு ஆலயங்களை எடுப்பித்தான் என்று சரித்திரம் கூறுகிறது. சாதாரண காலங்களில் கோயில்கள் கடவுளை ஆராதிப்பதற்குப் பயன்படுவது போலவே, பெருவெள்ளம் வந்து உடைப்பெடுக்கும் காலத்தில் மக்கள் கோயில் மண்டபங்களின் மீது ஏறி உயிர் தப்புவதற்கும் உபயோகமாயிருக்கட்டும் என்பது ஆதித்த சோழனின் நோக்கமாக இருக்கலாம் அல்லவா?

நதிக்கரைகளில் உடைப்பு உண்டாவதன் காரணமாகச் சில சமயம் நதிகளின் போக்கே மாறி விடுவதும் உண்டு. அரிசிலாறு, குடமுருட்டி முதலிய நதிகள் இப்படிப் பலமுறை இடம் மாறி, திசை மாறியிருக்கின்றன என்பதைப் பழைய வரலாறுகளிலிருந்து அறியலாம்.

இனி நம்முடைய வரலாறு நடந்த காலத்துக்கு வருவோம். இலங்கைத் தீவிலிருந்து சோழ நாட்டுக்குப் பார்த்திபேந்திரனுடைய கப்பல் வந்து கொண்டிருந்தபோது உண்டான சுழிக்காற்று, வந்தியத்தேவனை முன்னிட்டு இளவரசர் அருள்மொழி வர்மரைக் கடலில் குதிக்கச் செய்த பிறகு, கடலோரமாகவே சென்று கலிங்க நாட்டை அடைந்து மறைந்தது.

ஆனால் அருள்மொழிவர்மர் நாகைப் பட்டினம் சூடாமணி விஹாரத்தில் தங்கியிருந்தபோது உண்டான சுழிக்காற்று சோழ நாட்டுக்குள்ளேயே புகுந்து பற்பல அட்டகாசங்களைச் செய்துகொண்டு மேற்கு நோக்கிச் சென்றது. ஒரே இரவில் அது காவேரியின் இருபுறங்களிலும் தன் லீலைகளை நடத்திக்கொண்டு போய்

மறுநாள் கொங்கு நாட்டை அடைந்து தேய்ந்து மறைந்தது. அது பிரயாணம் செய்த இடங்களிலெல்லாம் பற்பல சேதங்களை விளைத்தது மட்டுமன்று; அதைத் தொடர்ந்து பெருமழை கொட்டும்படியாகவும் செய்து கொண்டு போயிற்று. மேற்கே போகப் போக மழை அதிகமாகப் பெய்தது. ஆகவே காவேரியிலும் கொள்ளிடத்திலும் அவற்றிலிருந்து பிரிந்த கிளை நதிகளிலும் மறுநாள் முதல் வெள்ளம் அபரிமிதமாக வந்தது. பல நதிகள் கரைகளை உடைத்துக்கொண்டன. மழையினாலும் நதிகளின் உடைப்பினாலும் சோழ நாடெங்கும் வெள்ளக் காடாகி விட்டது.

ஆனால் இவ்வளவு இயற்கை விபரீதங்களும் சோழ நாட்டு மக்களைப் பீதி கொண்டு செயலிழந்து விடும்படி செய்து விடவில்லை. இவை அடிக்கடி நடைபெறும் நிகழ்ச்சிகளாதலால், அம் மாதிரி நிலைமைகளில் என்ன செய்ய வேண்டும் என்பதை மக்கள் அறிந்திருந்தார்கள். அப்போதைக்குக் கோயில் மண்டபங்களிலோ வேறு உயரமான இடங்களிலோ ஏறிக் கொண்டு உயிர் தப்புவார்கள். வெள்ளம் எவ்வளவு அவசரமாக வந்ததோ, அவ்வளவு துரிதமாக வடிந்தும் போய்விடும். பிறகு வழக்கம் போல் அவரவரின் வேலையில் ஈடுபடுவார்கள். வீடுகளை இழந்தவர்கள் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் உதவியைக்கொண்டு உடனே வீடு கட்டிக் கொள்வார்கள். "ஐயோ! போய் விட்டதே!" என்று தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட மாட்டார்கள்.

"சோர்வு, சோம்பல் என்பதையே அறியாத தன்னம்பிக்கை கொண்ட மக்கள் அக் காலத்தில் சோழ நாட்டில் வாழ்ந்திருந்தார்கள். இல்லாவிடில் இன்றைக்கும் உலகம் கண்டு வியக்கும்படியான அற்புதங்களை அவர்கள் சாதித்திருக்க முடியாது அல்லவா?

வானதி கோயில் மண்டபத்தின் மீது ஏறாமல் தவறித் தண்ணீரில் விழுந்ததும் முதலில் மண்டபத்தின் மேல் ஏறியிருந்தவர்கள் கவலை அடைந்தார்கள். ஆனால் உடனடியாக அந்தக் கவலை மாறியது. வானதி ஜோதிடர் வீட்டுக் கூரை மீது தொத்திக்கொண்டதைப் பார்த்து அவர்களுக்குத் தைரியம் உண்டாயிற்று. இளையபிராட்டி ஓரளவு குதூகலமே அடைந்தாள். வானதியை அபாயகரமான நிலைமைகளில் சிக்க வைப்பதிலும் அவள் எப்படிச் சமாளிக்கிறாள் என்று பார்ப்பதிலும் குந்தவை தேவிக்கு எப்போதும் உற்சாகம் இருந்தது. வீராதி வீரனான தன் தம்பியை மணந்து கொள்ளப் போகிறவள் நெஞ்சுத் துணிவுள்ள தீர மங்கையாக வேண்டுமென்பதில் இளையபிராட்டிக்குச் சிரத்தை இருந்தது. அத்தகைய தீரத்தை வானதியின் உள்ளத்தில் வளர்க்கும் பொருட்டுக் குந்தவை பல உபாயங்களையும் தந்திரங்களையும் கையாண்டு வந்தாள். அந்த உபாயங்கள் நல்ல பலன் அளித்திருக்கின்றன என்ற நம்பிக்கையும் அவளுக்கு ஏற்பட்டிருந்தது.


சில காலமாக வானதி மூர்ச்சையடைந்து விழும் வழக்கத்தை விட்டு விட்டிருந்தாள் அல்லவா?


இப்போது குந்தவையின் தந்திரம் ஒன்றுமின்றித் தெய்வாதீனமாகவே வானதியின் தீரத்தைச் சோதிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. சுற்றிலும் வெள்ளம் சூழ்ந்திருக்க, ஓர் ஓட்டுக் கூரையின் மேல் வானதி தொத்திக்கொண்டிருந்தாள். அவள் பயப்படாதிருப்பாளா? ஜோதிடரின் சீடன் படகு கொண்டு வந்து அவளைத் தப்புவிக்கும்வரையில் தைரியத்தைக் கைவிடாது இருப்பாளா? – ஆம்; இருப்பாள்! சந்தேகமில்லை! இத்தனை காலமும் அளித்து வந்த பயிற்சி இச்சமயம் பயன்படாமலா போய்விடும்?

இவ்விதம் குந்தவை எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோது, ஆழ்வார்க்கடியான் "தாயே! இது என்ன? கூரை நகர்வதாகத் தோன்றுகிறதே?" என்றான்.

"உன் கண்ணிலே ஏதோ கோளாறு! வெள்ளம் நகர்ந்து செல்கிறது; கூரை நகர்வதாகத் தோன்றுகிறது!" என்றாள் குந்தவை. இப்படிச் சொல்லும்போதே அவளுடைய உள்ளத்திலும் சந்தேகம் உதித்துவிட்டது. அதன் அறிகுறி முகத்திலும் காணப்பட்டது.

"அம்மா! நன்றாய்ப் பாருங்கள்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.






"ஐயோ! இது என்ன விபரீதம்?" என்றாள் இளையபிராட்டி.

"ஜோதிடரே! உம்முடைய சீடன் சீக்கிரம் படகுடன் வருவானா?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"போதும்! போதும்! ஜோதிடரையும் அவருடைய சீடனையும் நம்பியது போதும்! திருமலை! உன்னால் வானதியைக் காப்பாற்ற முடியுமா என்று பார்! இல்லாவிட்டால், நானே வெள்ளத்தில் குதிக்க வேண்டியது தான்! வானதிக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால், அப்புறம் நான் ஒரு கணமும் உயிர் வைத்திருக்க மாட்டேன்!" என்றாள்.

"தாயே! அபாயம் நேரும் காலத்திலே தான் நிதானத்தை இழக்கக்கூடாது. இது தங்களுக்குத் தெரியாதது அல்ல. கொடும்பாளூர் இளவரசிக்கு

உதவி செய்வதற்காக என் உயிரைக் கொடுக்கவும் சித்தமாயிருக்கிறேன். அதனால் பயன் ஏற்பட வேண்டுமே? படகு இல்லாமல் நான் மட்டும் நீந்திச் சென்றால் அந்தக் கூரையில் போய் நானும் தொத்தி ஏறிக் கொள்ள லாம். கொடும்பாளூர் இளவரசியைத் தாங்குமா? அல்லது இரண்டு பேரையும் வெள்ளத்தில் அமுக்கி விட்டுக் கூரையும் கீழே போய்



விடுமா? இதைப் பற்றிச் சிறிது யோசிக்க வேண்டும்...?"

பூங்குழலியின் சிரிப்புச் சத்தத்தைக் கேட்டு அவளை இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

"இந்த வீர வைஷ்ணவர் யோசித்து முடிப்பதற்குள் கொடும்பாளூர் இளவரசி வாழ்க்கை முடிந்துவிடும்!'' என்றாள் பூங்குழலி.

"அப்படி நேர்ந்தால் இந்த ஓடக்காரப் பெண் சந்தோஷப்படுவாள்!'' என்று ஆழ்வார்க்கடியான் கூறியதும் பூங்குழலியின் முகத்தில் ஆத்திரம் கொதித்தது.

திருமலை மேலும் தொடர்ந்து கூறினான்: "ஆனால், தேவி! அவ்விதம் ஒன்றும் நேரப் போவதில்லை. ஆலிலை மேல் பள்ளி கொண்டு அகிலமெல்லாம் காப்பாற்றும் திருமால் வானதியையும் காப்பாற்றுவார். மச்ச கூர்ம வராக அவதாரங்கள் எடுத்து இந்தப் பூவுலகைக் காப்பாற்றிய ஸ்ரீமந் நாராயணன் கொடும்பாளூர் இளவரசியையும் காப்பாற்றுவார்...! அதோ பாருங்கள்! ஜோதிடர் சிடன் படகுடன் வருகிறான்!"

ஆழ்வார்க்கடியான் சுட்டிக் காட்டிய திசையில் உண்மையாக ஒரு படகு வந்துகொண்டிருந்தது. அப் படகு வெள்ளத்தின் வேகத்தை எதிர்த்து இவர்கள் இருந்த கோயில் மண்டபத்தை நோக்கி மெதுவாக வந்துகொண்டிருந்தது.

வானதி ஏறியிருந்த கூரையோ வெள்ளத்தோடு போய்க்கொண்டிருந்தது.

படகு இங்கே வந்து இவர்களை ஏற்றிக்கொண்டு போவதற்கு வெகு நேரம் ஆகிவிடும். அதற்குள் வானதி அதிக தூரம் போய்விடுவாள். கண்ணுக்கு மறைந்தாலும் மறைந்து விடுவாள்.

இதையெல்லாம் எண்ணி மண்டபத்தின் மேல் நின்றவர்கள் படகில் வந்த ஜோதிடர் சிடனைப் பார்த்து உரத்துக் கத்தினார்கள்: சமிக்ஞைகளும் செய்து பார்த்தார்கள். தன்னைச் சீக்கிரம் வரச் சொல்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டு அவன் படகை விரைவாகச் செலுத்தி வர முயன்றான்.

பூங்குழலி அப்போது குந்தவையைப் பார்த்து, "தேவி! எனக்கு அனுமதி கொடுங்கள்! நான் நீந்திப் போய்ப் படகை வழிமறித்து அழைத்துச் சென்று கொடும்பாளூர் இளவரசியை ஏற்றி வருகிறேன்!'' என்றாள்.

குந்தவை சிறிது தயங்கினாள். பூங்குழலி கையைக் கொடுக்கப் போய்த்தான் வானதி வெள்ளத்தில் விழுந்தாள் என்பது அவளுக்கு நினைவு இருந்தது.

"தேவி! என்னை நம்புங்கள். என்னுடைய அஜாக்கிரதையினால்தான் இளவரசி வெள்ளத்தில் விழுந்தாள். ஆகையால் அவரை மீட்பது என்னுடைய கடமை!'' என்று பூங்குழலி கூறினாள்.

"பெண்ணே! உன்னை நான் நம்புகிறேன். ஆனால் வானதியைத்தான் நம்பவில்லை!'' என்றாள் குந்தவை.

"ஆகா! நான் இருக்கும் படகில் ஒரு வேளை ஏற மறுத்து விடுவார் என்கிறீர்களா? அப்படியானால் அவரை ஏற்றிவிட்டு நான் இறங்கிக்கொள்வேன்!'' என்று சொல்லிக்கொண்டே பூங்குழலி வெள்ளத்தில் பாய்ந்தாள். படகை நோக்கி விரைந்து சென்றாள்.

குந்தவை ஜோதிடரைப் பார்த்து, "ஐயா! ஜோதிடரே! உம்முடைய சாஸ்திரத்தில் ரொம்ப நம்பிக்கை வைத்திருந்தேன். இன்றைக்கு அந்த நம்பிக்கையை இழந்து விட்டேன்!'' என்றாள்.

"ஆனால் எனக்கு இன்றைக்குத்தான் பூரண நம்பிக்கை ஏற்பட்டது, தேவி! கொடும்பாளூர் இளவரசியின் ஜாதகப் பிரகாரம் அவருக்கு இன்று பெரிய கண்டம் வர வேண்டும். பழுவேட்டரையர் மூலம் அது வருமோ என்று நினைத்தேன். அப்படி வராமற் போகவே ஆச்சரியமடைந்தேன். வேறு விதமாகக் கண்டம் வந்தது. இளவரசி இந்தக் கண்டத்துக்குத் தப்பிப் பிழைப்பார்! ஆகா! அவருடைய அபூர்வமான கைரேகைகள்! அவர் விஷயமாக நான் சொல்லியிருப்பதெல்லாம் நிறைவேறும்! அதைப் பற்றிச் சந்தேகமில்லை!'' என்றார்.

"அழகாய்த்தானிருக்கிறது. அது எப்படி

நிறைவேறும்? வானதி இந்தக் கண்டத்துக் குத் தப்பிப் பிழைத்தாலும் உம் ஜோசியம் நிறைவேறப் போவதில்லை. சற்றுமுன் உம்முடைய வீட்டில் அந்தப் பெண் செய்த சபதத்தை நீர் கேட்கவில்லையா?" என்றாள் குந்தவை.

"யார் என்ன சபதம் செய்தாலும், என் ஜோசியம் நிறைவேறியே தீரும். அப்படி நிறைவேறாவிட்டால், என்னிடமுள்ள ஜோதிட ஏடுகளையெல்லாம் காவேரி நதியில் எறிந்து விடுகிறேன்! இது என் சபதம்!" என்றார் ஜோதிடர்.

அப்போது ஆழ்வார்க்கடியான், "ஜோதிடரே! உமது ஏடுகளை நீரே எறியும் வரையில் காவேரி மாதா காத்திருக்கவில்லை. அவளே கொண்டு போய் விட்டாள்!" என்றான்.

ஜோதிடர் அவன் கூறியதன் உண்மையை உணர்ந்து திகைத்து நின்றார். "ஆயினும், என் ஜோதிடம் பலிக்காமற் போகாது!" என்று தம் வாய்க்குள்ளே முணுமுணுத்துக்கொண்டார்.

## பதினேழாம் அத்தியாயம்

# யானை எறிந்தது!

சென்ற அத்தியாயங்களில் கூறிய சம்பவங்கள் நடந்த அன்றைக்கு முதல் நாள், நாகைப்பட்டின நகர மாந்தரின் விருந்தினராக இளவரசர் அருள்மொழி வர்மரை நாம் விட்டு விட்டு வந்தோம். விருந்தெல்லாம் முடிந்த பிறகு அலங்கரித்த யானை மீது இளவரசர் புறப்பட்டார். எண்ணற்ற மக்கள் அவரைத் தொடர்ந்து தஞ்சைக்கு வருவோம் என்று கிளம்பினார்கள். அன்றிரவு இளவரசரும் அவருடன் வந்த ஜனங்களும் திருஆரூர் வந்து சேர்ந்தார்கள்.

திருஆரூர் மக்கள் இளவரசர் வருகையை முன்னதாக அறிந்திருந்தபடியால், அவருக்கு இராஜரீக வரவேற்பு அளித்து இராஜோபசாரங்கள் செய்தார்கள். பழம் பெரும்பதியான திருஆரூரில் குணவாசலிலிருந்து குடவாசல் வரையில் மக்கள் திரண்டு நின்றார்கள். நாலு இராஜ வீதிகளிலும் எள்ளுப் போட்டால் எள்ளு விழாதபடி ஜனக்கூட்டம் நிறைந்திருந்தது. வீடுகளின் முகப்புகள் எல்லாம் தோரணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. திருஆரூர்ச் சோழ மாளிகையையும் அதிகாரிகள் அலங்கரித்திருந்தார்கள். இளவரசருக்கு மட்டுமின்றி அவருடன் வரும் திரளான மக்களுக்கும் விருந்தளிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள்.

முதல் நாளிரவு திரு ஆரூர் வழியாகவும் கொடும்புயல் சென்றிருந்தது. ஆனால் இளவரசர் வருகையில் உண்டான குதூகல கோலாகலப் புயல் முதல் நாள் அடித்த புயலை அடியோடு மறக்கச் செய்துவிட்டது. வீதிகளிலெல்லாம் வாத்திய முழக்கங்களும் ஆடல் பாடல்களும் குரவைக் கூத்துக்களும் பொம்மையாட்டங்களும் வீர, முழக்கங்களுடன் கூடி கத்தி விளையாட்டு - கழி விளையாட்டுக்களும் நடந்துகொண்டிருந்தன.

தஞ்சாவூர்ச் சோழ குலத்தினர் தில்லையம்பலத்தில் ஆடும் நடராஜப் பெருமானின் கோயிலுக்கு அடுத்தபடியாகத் திருஆரூரில் உள்ள தியாகராஜப் பெருமானின் ஆலயத்தில் விசேஷ பக்தி கொண்டு, ஏராளமான மானியங்கள் அளித்திருந்தார்கள். ஆனால் இளவரசர் அருள்மொழிவர்மர் மட்டும் அதுவரையில் திருஆரூர் வந்ததில்லை. ஆகையால் கோயிலுக்கு இளவரசர் அவசியம் வர வேண்டுமென்று ஆலயத்தார் வற்புறுத்தினார்கள். இளவரசரும் கோயிலுக்குப் போனார். பல காரணங்களினால் அவருடைய உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருந்தபடியால் இறைவனுடைய திருக்கோலங்களில் அவருடைய மனம் பூரணமாக ஈடுபட முடியவில்லை. அர்ச்சனை ஆராதனைகள் முடிந்து இறைவனுடைய பிரசாதங்களும் பெற்றுத் திரும்பும் சமயத்தில், ஆலயத்தார்களைப்

பார்த்து இளவரசர் "இந்தக் கோயிலின் இறைவருக்குத் தியாகராஜர் என்று ஏன் பெயர் வந்தது?'' என்று கேட்டார்.

தேவர்களுக்குள் மகா தேவரும் மூவர்களில் முதல் வருமான சிவபெருமான் மூன்று உலகங்களிலும் வாழும் உயிர்கள் உய்யும் பொருட்டுச் செய்த தியாகங்களை ஆலயத்தார் எடுத்துச் சொன் னார்கள். மூன்று உலகங்களையும் ஆக் கவும் அழிக்கவும் வல்ல பெரு மான் தம்முடைய பக்தர் களுக்கு அருள் புரியு மாறு மேற் கொண்ட



கஷ்டங்களைப் பற்றிக் கூறினார்கள். உயிர்கள் உய்யும் பொருட்டுத் தவக்கோலம் பூண்டு மயானத்தில் தவம் புரிந்ததைப் பற்றிச் சொன்னார்கள். அந்தத் தவத்தையும் கைவிட்டுத் தேவர்களின் நன்மைக்காக உமையை மணந்தது பற்றிக் கூறினார்கள். எல்லா உலகங்களுக்கும் இறைவர் பிக்ஷாடன மூர்த்தியாகத் தோன்றிய பிச்சை எடுத்த வரலாற்றைக் கூறினார்கள். தில்லை அம்பலத்தில் வந்து ஆடியது பற்றிச் சொன்னார்கள். பிட்டுக்கு மண் சுமந்து பாண்டிய மன்னனிடம் பிரம்பினால் அடிபட்டது பற்றியும் கூறினார்கள்.

அத்தகைய தியாகராஜப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருஆரூரில் பழைய காலத்தில் அருள்மொழி வர்மரின் முன்னோர்கள் வசித்து வந்



தலையும், மனுநீதிச் சோழன் பசுவுக்கு நீதி வழங்கும் பொருட்டுத் தன் அருமை மகனையே தியாகம் செய்த அற்புதத்தையும் நினைவூட்டினார்கள்.

இவையெல்லாம் அருள்மொழிவர்மரின் உள்ளத்தில் நன்கு பதிந்தன. இதுகாறும் புத்த பகவானுடைய தியாகத்தை நினைந்து நினைந்து வியந்து கொண்டிருந்த இளவரசர், தேவதேவரான சிவபெருமானைத் தியாக மூர்த்தியாகச் சித்திரிக்கும் வரலாறுகளைப் பற்றி எண்ணி எண்ணி வியக்கத் தொடங்கினார். மேலைத் தேசங்களிலே கடவுளின் திருப்புதல்வராகப் போற்றப்படும் அவதார புருஷர் மக்களின் நலத்துக்காகச் சிலுவையில் அறையப்பட்டு மாண்டார் என்ற வரலாறும் அவர் காதுக்கு எட்டியிருந்தது. இவற்றையெல்லாம் பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க, மனிதனுக்குத் தெய்வத்தன்மை அளிக்கக் கூடியது தியாகந்தான் என்னும் எண்ணம் அவர் மனத்தில் வேர் ஊன்றியது. ஆதலின் அவரைச் சூழ்ந்துள்ள மக்கள் அனைவரும் தம் மீதுள்ள அன்பின் மிகுதியினால் தம்மைத் தஞ்சைச் சிங்காதனத்தில் அமர்த்திப் பட்டம் சூட்ட விரும்புவது பற்றி அவர் மனம் அளவில்லாத வேதனை அடைந்தது. இவர்களுடைய அன்புச் சிறையிலிருந்து தப்புவது எப்படி என்பது பற்றியும் தீவிரமாக யோசிக்கலானார்.

ஆலய வழிபாட்டுக்குப் பிறகு திருஆரூர் மக்கள் இளவரசருக்குப் பெருவிருந்து அளித்தார்கள். அவரை உபசரிக்கும் பொருட்டுப் பற்பல கேளிக்கைகளை நடத்தினார்கள். அவற்றிலெல்லாம் இளவரசரின் உள்ளம் ஈடுபடாவிட்டாலும் வெளிப்படையாக உற்சாகம் காட்டி ஏற்றுக்கொண்டார்.

பின்னர், ஏறக்குறைய நடுநிசியில் இளவரசர் சோழ மாளிகைக்கு வந்து சேர்ந்தார். அங்கே சில விபரீதமான செய்திகள் காத்திருந்தன. தஞ்சைக்கு மேற்கே பலமான மழை பெய்தபடியால் காவேரியிலும் கொள்ளிடத்திலும் அவற்றின் கிளை நதிகளிலும் பெரு வெள்ளம் வந்து பல இடங்களில் கரை உடைத்துக்கொண்டதாகவும், ஒரே வெள்ளக் காடாக இருப்பதால் மேற்கொண்டு பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்துவது கஷ்டமாயிருக்குமென்றும் சொன்னார்கள். இரண்டு நாள் திருஆரூரில் தங்கி வெள்ளம் வடிந்த பிறகு புறப்படுவது உசிதம் என்றும் தெரிவித்தார்கள். இதற்கு இளவரசர் இஷ்டப்படவில்லை. தஞ்சையை உடனே அடைய வேண்டுமென்ற பரபரப்பு அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. நதி உடைப்புக்களும் வெள்ளமும் அவருடைய அந்த ஆர்வத்தைத் தடை செய்துவிடக் கூடுமா, என்ன? ஆம்; இத்தனை ஜனங்களும் உடன் வந்தால் பிரயாணம் தடைப்படத்தான் செய்யும். தாம் மட்டும் தனியே யானை மீது ஏறிச் சென்றால் பிரயாணம் தடைப்பட வேண்டிய அவசியமில்லை. யானைக்கு அண்டாத ஆழம் உடைய நதி எதுவும் தஞ்சைக்குப் போகும் வழியில் இல்லை. அப்படியிருந்தாலும் இளவரசருக்கு அதைப் பற்றிக் கவலை கிடையாது. தண்ணீரிடத்தில் அவருக்கு எப்போதும் அச்சம் ஏற்பட்டதில்லை. பொன்னி நதி அவருடைய அன்னைக்கு மேலான அன்புடையவள் ஆயிற்றே? சின்னஞ்சிறு குழந்தைப் பிராயத்தில் தான் முழுகிப் போகாமல் காப்பாற்றிய காவேரித்தாய் இப்போது தன்னைக் காப்பாற்ற மாட்டாளா?

இந்தப் பெருந் திரளான மக்களிடமிருந்து எப்படித் தப்பித்துச் செல்வது என்பதுதான் கேள்வி. அயோத்தியின் மக்களிடமிருந்து இராமர் இரவுக்கிரவே தப்பிச் சென்றது பொன்னியின் செல்வருக்கு நினைவு வந்தது. அவ்விதமே அவரும் இரவில் ஜனங்கள் தூங்கும் சமயத்தில் போய்விட்டால் என்ன? எல்லாவற்றுக்கும் யானைப்பாகனிடம் எந்த நேரத்திலும் புறப்பட ஆயத்தமாயிருக்கும்படி சொல்லி வைப்பது நல்லது.


இந்த எண்ணம் தோன்றியதும் யானைப் பாகனை அழைத்து வரும்படி அரண்மனைச் சேவகனுக்கு இளவரசர் கட்டளையிட்டார். சேவகன் வீதிக்குச் சென்று பார்த்து விட்டு உடனே திரும்பி வந்தான். யானை மட்டும் வாசலில் கட்டியிருக்கிறதென்றும் யானைப் பாகனைக் காணோம் என்றும் தெரிவித்தான்.

''ஒருவேளை வீதி களில் நடைபெறும் ஆடல் பாடல் களி யாட்டங்களைப் பார்க்கப் போயிருப் பான். அவன் திரும்பி வந்ததும் அழைத்து வா! அல்லது யாரை யாவது சிலரை அனுப்பித் தேடிப் பார்க்கச் சொல்!'' என்று இளவரசர் கட்டளையிட்டார்.

''ஆகட்டும், அரசே! படகோட்டி முருகய்யன் என் பவன் ஒருவன் மாளிகை வாசலில் வந்து காத்திருக்கிறான். தங்களை அவசரமாகப் பார்க்க வேண்டும் என்று அவன் பிடிவாதம் பிடிக் கிறான்!'' என்றான் சேவகன்.

படகோட்டி முருகய் யனை இத்தனை நேரம் மறந்திருந்தது பற்றி இள வரசர் பச்சாதாபங் கொண்டார். தாம் இரக சியமாகத் தப்பிச் செல் வதற்கு அவன் ஒரு வேளை உதவி





யாயிருந்தாலும் இருப்பான். அவனை உடனே தம்மிடம் அனுப்பும்படி அரண்மனைச் சேவகனுக்குக் கட்டளையிட்டார்.

முருகய்யன் இளவரசரிடம் வந்ததும் அவருடைய காலில் விழுந்து தேம்பி அழத் தொடங்கினான். இந்த மூட பக்தனைச் சமாதானப் படுத்துவதும் அவனிடம் விஷயங்களைக் கிரஹிப்பதும் சிரமமான காரியந்தான். ஆயினும் செய்ய வேண்டும்.

முருகய்யன் தனது துயரத்தின் காரணத்தைக் கூறினான். அதன் விவரமாவது:-

முருகய்யன் நாகைப்பட்டினத்திலேயே தன் மனைவியிடமிருந்து பிரிந்து விட்டான். திருஆரூர் வந்து சேர்ந்த பிறகு அவளும் அங்கு வந்திருக்கிறாளா என்று பார்ப்பதற்காக ஜனக்கூட்டத்தினிடையில் அலைந்து சுற்றினான். ஒரு ஜாம நேரம் தேடிய பிறகு இராஜ வீதியிலிருந்து பிரிந்து சென்ற ஒரு சந்தின் முனையில் அவன் மனைவியும் இளவரசர் ஏறி வந்த யானையைச் செலுத்திய யானைப் பாகனும் போவதைக் கண்டான். அவர்கள் சந்தில் புகுந்ததும் மிக வேகமாக நடந்து சென்றார்கள். முருகய்யனும் தொடர்ந்து போனான். கடைசியாக ஒரு வீட்டின் வாசலில் நின்றார்கள். அங்கே இன்னொரு மனிதன் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்ததாகத் தோன்றியது. அவனும் இவர்களுடன் சேர்ந்து கொண்டான். பிறகு மூன்று பேரும் சேர்ந்து போனார்கள். முருகய்யனுக்கு ஏதேதோ சந்தேகங்கள் உதித்தன. தன் மனைவியின் ஒழுக்கத்தைப் பற்றியே ஐயம் கொண்டான். உண்மையைக் கண்டுபிடிக்க ஆத்திரம் அடைந்தான். ஆகையால் அவர்களைப் போய்ப் பிடித்து விடாமல் பின்னாலேயே போனான். அவர்கள் ஊரைத் தாண்டி வாய்க்கால் - வயல் வரப்புகள் வழியாகச் சென்று கடைசியில் ஒரு மயானத்தை அடைந்தார்கள். முருகய்யனுடைய உள்ளம் பயங்கரத்தை அடைந்தது. ஆயினும் அவன் விடாமல் சென்று மயானத்தில் இருந்த ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்துகொண்டான். ராக்கம்மாளுடனும் யானைப்பாகனுடனும் வழியில் சேர்ந்து கொண்ட மனிதன், மயானத்தில் சாம்பலைப் பூசிக்கொண்டு ஏதேதோ பயங்கரமான மந்திரங்களை உச்சரித்தான். பிறகு யானைப்பாகனைப் பார்த்து, "நாளைக் காலையில் உன் உயிருக்கு ஆபத்து வரப் போகிறது! ஜாக்கிரதையாயிருந்து பிழை!" என்றான். யானைப் பாகன் கதி கலக்கத்துடன், "என்ன ஆபத்து? எவ்விதம் வரும்? தெரிந்தால் அல்லவோ பிழைக்கலாம்?" என்றான். மந்திரவாதி "யானைக்குத் திமிர் என்று மதம் பிடிக்கும்! நீ அருகில் நெருங்கியதும் உன்னைக் கீழே தள்ளிவிட்டு ஓடும்! உன்னால்தான் யானைக்கு மதம் பிடித்தது என்று ஜனங்கள் எண்ணுவார்கள். உன் கையிலுள்ள அங்குசத்தைப் பிடுங்கி உன்னைக் கொன்று விடுவார்கள்!" என்றான் மந்திரவாதி. "ஐயையோ! தப்புவதற்கு வழி என்ன?" என்று யானைப் பாகன் கேட்டான். "நாளைக்காலையில் யானையிடம் நெருங்காமலிருந்து விடு!" என்றான் மந்திரவாதி. "அது எப்படி முடியும்? பின்னால் இராஜ தண்டனைக்கு உள்ளாக நேரிடுமே?" என்று யானைப் பாகன் அலறினான். "அப்படியானால், என் வீட்டுக்கு வா! மந்திரித்த கவசம் தருகிறேன். அதை அணிந்துகொண்டு போ! கையில் அங்குசத்தைக் கொண்டு போகாதே!" என்றான் மந்திரவாதி.

முருகய்யன் அதற்கு மேல் அங்கே நிற்க மனமில்லாமல் ஓடி வந்து விட்டான். நாளைக் காலையில் யானைக்கு மதம் பிடிக்கப் போகும் செய்தியை இளவரசரிடம் சொல்லி எச்சரிப்பதற்காகவே முக்கியமாக ஓடி வந்தான்...

இதையெல்லாம் கூறிவிட்டு முருகய்யன் மீண்டும் தேம்பி அழுதான்.

"அப்பனே! ஏன் அழுகிறாய்? நீதான் சமயத்தில் வந்து எச்சரிக்கை செய்து விட்டாயே? இனி, நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்றார் பொன்னியின் செல்வர்.

"ஐயா! இதிலெல்லாம் என் மனைவி சம்பந்தப்படுவது பற்றித்தான் வருந்துகிறேன். ராக்கம்மாளைப் பற்றி என்ன நினைப்பது என்றே எனக்குத் தெரியவில்லை. அவளைப் பற்றிய பழைய சந்தேகங்கள் திரும்பி வருகின்றன!" என்றான் முருகய்யன்.

"அவளை நான் திருத்தி விடுகிறேன். நீ கவலைப்படாதே! உடனே, திரும்பிப் போ! யானைப் பாகனை எப்படியாவது தேடிப் பிடித்து அழைத்துக் கொண்டு வா!" என்றார் இளவரசர்.

படகோட்டி முருகய்யன் போன பிறகு பொன்னியின் செல்வர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். முருகய்யன் கண்டது, கேட்டது இவற்றின் பொருள் என்னவாயிருக்கும் என்று ஊகத்தினால் உணர முயன்றார். பழுவேட்டரையர்களின் உத்தேசம், பாண்டிய நாட்டுச் சதிகாரர்களின் முயற்சி - இவற்றைக் குறித்து இளையபிராட்டி கூறியதையெல்லாம் நினைவுபடுத்திக்கொண்டார். அந்தச் சதிகாரர்களின் முயற்சியில் இது ஒன்றாயிருக்கலாம். அல்லது வெறும் மூடத்தனமாகவும் இருக்கலாம். எப்படியிருந்தாலும், காலையில் தாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி ஒரு முடிவுக்கு வந்தார். பிறகு, நிம்மதியாக நித்திரையில் ஆழ்ந்தார்.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து பிரயாணத்துக்கு ஆயத்தமானார். மாளிகை வாசலுக்கு வந்தார். அங்கே கட்டியிருந்த யானை இளவரசரைப் பார்த்ததும் ஆதரவோடு துதிக்கையை நீட்டி அவரைத் தடவிக் கொடுத்துக் கொஞ்சியது. "யானைக்கு மதம் பிடிக்கும்" என்று மந்திரவாதி கூறியதாக முருகய்யன் சொன்னது இளவரசருக்கு நினைவு வந்தது. மதம் பிடிக்கும் என்பதற்கு அறிகுறி எதுவும் இல்லை.

"யானைப் பாகன் எங்கே?" என்று இளவரசர் உரத்த குரலில் கேட்டார். உடனே பல குரல்கள் "யானைப்பாகன் எங்கே?" என்று எதிரொலி செய்தன.

இளவரசரைப் போலவே அதிகாலையில் பிரயாணம் தொடங்க ஆயத்தமாக ஜனங்கள் திரண்டு வந்திருந்தார்கள். அவர்களிடையே அகப்பட்டுக்கொண்டு முன்னால் வர முடியாமல் திணறிக் கொண்டிருந்த முருகய்யனைப் பார்த்தார். அவனை நோக்கிச் சமிக்ஞை செய்யவே ஜனங்கள் அவனுக்கு வழி விட்டார்கள். முருகய்யன் அருகில் வந்து இரவில் வெகு நேரம் தேடிய பிறகு தன் மனைவியை மாத்திரம் கண்டுபிடித்ததாகவும், அவள் தான் மயானத்துக்குப் போனதையெல்லாம் அடியோடு மறுத்து, முருகய்யனுக்குப் பித்துப் பிடித்துவிட்டது என்று கூறியதாகவும், யானைப்பாகன் அகப்படவே இல்லை என்றும் சொன்னான்.

"அதைப் பற்றிக் கவலை இல்லை, முருகய்யா! யானையின் காலைக் கட்டியுள்ள .சங்கிலியை அவிழ்த்து விடு!" என்றார் இளவரசர்.

முருகய்யன் அவ்வாறு அவிழ்த்து விட்டுக்கொண்டிருக்கும்போதே, "இதோ யானைப்பாகன் வந்து விட்டான்!" என்று ஒரு குரல் கேட்டது. "வந்து விட்டான்! வந்து விட்டான்!" என்று பல குரல்கள் ஒலித்தன.

கையில் அங்குசத்துடன் யானைப் பாகன் ஓடி வந்து கொண்டிருந்தான். கூட்டத்திலிருந்தவர்கள் அவசர அவசரமாக விலகிக்கொண்டு அவனுக்கு வழி விட்டார்கள்.

பொன்னியின் செல்வரும் "நல்ல வேளை!" என்று பெருமூச்சு விட்டு, யானைப்பாகன் ஓடி வந்து கொண்டிருந்த திசையை நோக்கினார்.

பாவம்! ஒருநாள் இரவு அனுபவத்தில் அவன் எவ்வளவு மாறிப் போயிருக்கிறான்? பயப்பிராந்தி கொண்டவனாக அல்லவா தோன்றுகிறான்?

ஒரு கையில் அங்குசம் வைத்துக் கொண்டிருந்த யானைப்பாகன் யானையின் அருகில் வந்து அதன் துதிக்கையை இன்னொரு கையினால் தொட்டான்.

யானை உடனே அவனைத் துதிக்கையால் சுழற்றிப் பிடித்தது. தலைக்கு மேலே தூக்கியது. கேட்டவர்கள் பீதி கொள்ளும்படியாகப் பிளிறி விட்டு, யானைப்பாகனை வீசி எறிந்தது.

யானைப்பாகன் வெகு தூரத்திலே போய் விழுந்தான். அவன் கையில் வைத்திருந்த அங்குசம் இன்னும் அப்பாலே போய் விழுந்தது.

"யானைக்கு மதம் பிடித்துவிட்டது!" என்று பயங்கரம் நிறைந்த குரல் அந்த ஜனக்கூட்டத்திலே எழுந்தது.

சுற்றிலும் நின்ற ஜனங்கள் நாலா பக்கமும் சிதறி ஓடத் தொடங்கினார்கள்.

(தொடரும்)



# சத்தமில்லாமல் ஒரு

**வி**ழா எப்போது முடியும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த பார்வையாளர்கள், தேசிய கீதம் முடிந்ததும், மேடையில் தாவி ஏறி அந்த இளைஞரைச் சூழ்ந்து கொண்டு கைகுலுக்குகிறார்கள். காரணம் எம்.எஸ். உதயமூர்த்தி, எக்ஸ்னோரா நிர்மல், திலகவதி என்று அந்த விழாவில் கலந்து கொண்ட அத்தனை விஐபிகளின் பேச்சுகளையும் அந்த இளைஞனின் எளிய பேச்சு ஓவர்டேக் செய்து விடுகிறது.

"நான் இந்த நாட்டு மக்களின் வரிப் பணத்தில் படித்தவன். அதை மறப்பது பெற்ற தாயை மறப்பது போலப் பச்சை துரோகம். நம் இளைஞர்கள் இங்கே படித்துப் பட்டம் வாங்கி விட்டு, வெளிநாடுகளில் செட்டிலாகி விடுகிறார்கள். கடந்த முப்பது வருடமாக இது தான் நிலை. ஆனால் இந்திய மக்கள் தொகையில் எண்பது சதவீதம் பேர் பள்ளிக்கூடத்தைக் கண்ணால் கூடப் பார்க்காதவர்கள். இதை மாற்ற வேண்டும். கல்லாமையை இந்த நாட்டை விட்டே துரத்தி அடிக்க வேண்டும். அதற்கு இன்னொரு சுதந்திரப் போராட்டம் தேவை. அதைத்தான் நாங்கள் கையிலெடுத்திருக்கிறோம். முதலில் செயல். பிறகுதான் பேச்சு" இப்படிப் பேசிய அந்த இளைஞரின் பெயர் டி.பி. பிரகாஷ்.

'ஆஷா ஃபார் எஜுகேஷன்' என்ற அமைப்பின் இயக்குனர்களில் ஒருவரான இவர் பணியாற்றுவது, அமெரிக்காவில் உள்ள ஐபிஎம் கணிப்பொறி நிறுவனத்தில்.

அமெரிக்காவில் இருந்து கொண்டு இந்தியாவில் எப்படி தொண்டு செய்கிறார் இவர்?

இவர் மட்டுமல்ல; இவரோடு அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் பணிபுரியும் ஆயிரத்து இருநூறு இந்திய இளைஞர்கள் இணைந்து இந்த இயக்கத்தை 1990-ல் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், மிகவும் பின்தங்கிய நூறு பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அங்குள்ள ஏழை, நடுத்தரக் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி அளிக்கிறார்கள். விளையாட்டு, உணவு, காட்சி வழி போதனை என்று டச்சிங்கான டீச்சிங்!

ஆஷா இயக்கத்திலுள்ள அத்தனை இளைஞர்களும் அமெரிக்காவில் டாக்டரேட் பட்டம் பெற்றவர்கள்.

இந்தியப் பணத்தில் படித்து விட்டு, பணம் சம்பாதிக்க அமெரிக்கா வந்து விட்டார்கள். ஆனால் இங்கோ வறுமை! அதற்கு முக்கியக் காரணம் கல்லாமை என்ற உறுத்தும் மனதோடு உழன்று கொண்டிருந்த இவர்களை ஒன்று சேர்த்து வைத்தது இன்டர்நெட்தானாம்.

**இ**ந்தியாவில் செயல்படுத்தப்படும் இந்த திட்டங்களைப் பார்வையிட அடிக்கடி விடுப்பில் இங்கே விசிட் அடிக்கும் பிரகாஷ்,



• ஒரிஸ்ஸா குழந்தைகளுடன்...

ஆஷா உருவாக முக்கியக் காரணமாக இருந்திருக்கிறார். அந்த அமைப்பின் முன்னாள் தலைவராகவும் ஒரு வருடம் பணியாற்றி இருக்கும் இவர், ஆஷாவில் ஒருவர், ஓராண்டிற்கு மேல் தலைமைப் பதவியில் இருக்க முடியாது என்கிறார்.

சரி, இந்தக் கல்வித் திட்டத்திற்கு செலவிட உங்களுக்கு நிதி எங்கிருந்து கிடைக்கிறது என்றால், "ஊதியத்தின் ஒரு பகுதியை எல்லோரும் அளித்து விடுகிறோம். அதோடு நிதி திரட்டும் கலையை எங்களுக்குச் சொல்லிக் கொடுத்தது, யூனிவர்சிட்டி ஆஃப் கலிபோர்னியா, லாஸ்ஏஞ்சல்ஸ்!" என்கிறார்.

சென்னைவாசியான பிரகாஷ் ஒன்பதாம் வகுப்பு வரை மக்குப் பையன் என்று பெயரெடுத்து விட்டு, பத்தாம்



• பிரகாஷ்

# அறிவுப் புரட்சி!

வகுப்பிலும், பன்னிரண்டாம் வகுப்பிலும் தொண்ணூற்று நான்கு சதவீதம் மதிப்பெண் வாங்கி இருக்கிறார்!

"நான் படிப்பில் திடீரென சாதித்தேன் என்றால் அதற்குக் காரணம் வித்யாமந்திர் பள்ளிதான். அங்கிருந்த ஆசிரியர்களின் அணுகுமுறையால் என் மனநிலையில் பெரிய மாற்றம் வந்தது. என் பிளஸ் டூ மதிப்பெண்கள் ஐஐடியில் சேர உதவியது. ஐஐடிதான் என்னை எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியராக உருவாக்கியது" என்கிறார்.

"ஆஷா என்றால் ஆசை, நம்பிக்கை! எங்களது ஒரே உறுதியான நம்பிக்கை, வரும் 2047ல் இந்தியாவில் கல்வி அறிவு பெறாதவர்கள் என்று யாருமே இருக்கக் கூடாது என்பதுதான். இதனால்தான், ஜாதி, மதம், மொழி, மாநிலம், அரசியல் இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு, உழைத்துக் கொண்டிருக்கிறோம். ஆஷாவின் உறுப்பினர்கள் அத்தனை பேரும் தொண்டர்கள். அத்தனை பேருமே இருபதிலிருந்து முப்பத்தைந்து வயதுக்காரர்கள். சுதந்திரப் போராட்ட காலத்தில் எழுந்த தேசிய உணர்வு இப்போது எங்களிடம் ஏற்பட்டிருக்கிறது. எனவே சுதந்திர நூற்றாண்டு கொண்டாடும் போது இந்தியா உலகின் வல்லரசுகளில் ஒன்றாக இருக்க வேண்டும். திட்டம் செயல்படும் ஒவ்வொரு மாநிலத்திலும் இருபது பேர் சுறுசுறுப்பாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். சந்தீப் பாண்டே என்ற எங்கள் நண்பன் அமெரிக்காவிலிருந்து மூட்டை கட்டிக் கொண்டு இந்தியா வந்து விட்டான். அவனை உத்திர பிரதேசம் சென்றால் பார்க்க முடியும். இன்ஷா என்ற பஞ்சாபிப் பெண் ராஜஸ்தானிலிருந்து கூலி வேலைக்காகக் கூட்டி வரப்படும் ஏழைத் தொழிலாளர்களின் குழந்தைகளை ஒன்று திரட்டி அவர்களுக்குக் கல்வி தருகிறாள். இப்படிப்பட்டவர்கள்தான் ஆஷாவின் தொண்டர்கள். அடிப்படைக் கல்விக்காகவும் உணவுக்காகவும் மற்ற நிறுவனங்களோடும் நாங்கள் கைகோத்துக் கொண்டு உழைக்கிறோம். எங்கள் லட்சியத்தோடு சிறப்பாக செயலாற்றுபவர்களுக்குத் தேவையான உபகரணங்களையும் வாங்கிக் கொடுக்கிறோம்" என்று கூறும் பிரகாஷ், உத்திரபிரதேசம், மத்திய பிரதேச மாநிலங்களில் பழங்குடிமக்களிடமும், தென் மாநிலங்களில் முதலில், தெருக் குழந்தைகளுக்கும் தமது கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தி வருவதாகச் சொன்னார். சென்னை, மும்பை, டெல்லி ஆகிய இடங்களில் விரைவில் ஆஷா சென்டர்களை நிறுவி அடிப்படைக் கல்வித் திட்டத்தை நேரடியாக செயல்படுத்தவும் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

— லியோ

படங்கள் : ஸ்ரீஹரி

6

**கா**ந்தாமணி டீச்சர் மேல் தண்ணீர் தெளித்தது போல இந்த விவகாரமும் எளிமையாய் - சுபமாய் முடிந்து விட்டால் தேவலை.

புது பி.ஈ.டி. மாஸ்டர் மேடையில், "என் பேரு ரவிச்சந்திரன்..." என அறிமுகப்படுத்திக் கொண்டு சில வார்த்தைகள் பேசினார். தங்கராஜுவைக் கொண்டு சாரை சாந்தப்படுத்த வேண்டும் என பார்த்திபன் நினைத்தான். 'சைட் அடிக்க வழி விடுப்பா' என்பது மாதிரி காலை நகட்டச் சொல்லியாகி விட்டது. என்னதான் நினைப்பார் அவர். தங்கராஜின் அருகில் சென்று நின்றான். ஆசிரியர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வந்த ரவிச்சந்திரன்,

"தங்கம்! டீ சாப்பிடப் போலாமா?" என்றார்.

ஆமோதித்துக் கிளம்பினான் தங்கராஜ்.




# கானல் தெரு

"நீங்களும் வாங்க கிளம்ப்பா" என்றார் சார் பார்த்திபனையும் அவனுக்கு ஐந்தடி தள்ளி நின்ற பிரகாஷையும் பார்த்து.

"வேண்டாம்ங்க சார்."

"அட... சும்மா வாங்கய்யா."

நால்வரும் நடக்கத் துவங்கியபோது மாணவிகள் கோடவுனுக்குள் நுழைய ஆரம்பித்திருந்தனர். கதவுக்குள் மறைகையில் பார்த்திபனை ஒருமுறை பார்த்து விட்டு அருட் பிரகாசமானாள். கை ஒடியாத வீனஸ். ரவிச்சந்திரன் பார்த்திபனிடம், "இந்தப் பொண்ணாப்பா?" என்றார்.

"ஆமாங்க சார்" - போச்சு. எதுவும் தப்பாது போலிருக்கிறது அவரது கண்ணில்.

"பேரென்ன?"

"பார்த்திபன்."

"உன் பேரல்லப்பா. அந்தப் பொண்ணு பேரு?"

"அனிதா" குரல் குழைந்து விட்டது பார்த்திபனுக்கு.

"பயலுக்கு வெட்கத்தைப் பாரு" என்றார் ரவி தங்கராஜிடம். காதல் உறுதிப்பட்டு விட்டால் அவரே கல்யாணம் செய்து வைத்து விடுபவர் போலவும் காட்சியளித்தார்.

"இந்த வருஷம் பாத்துப் படிங்கப்பா. அதுல கோட்டை விட்டுடாதீங்க."

பிரகாஷிடம் பெயர் கேட்டுத் தெரிந்து கொண்ட மறு விநாடி குனிந்து ஒரு கல்லை எடுத்து அதைத் தவற விட்டார். நிலத்தை அது அடைந்ததும், "பிரகாஷ்! இவ்வளவுதான் லைஃப்" என்றார்.

பிரகாஷுக்கும் பார்த்திபனுக்கும் புதிராயிருந்தது.

தங்கராஜ், "ஐயய்யோ! சார். இவனுக கிட்டவும் ஆரம்பிச்சிட்டீங்களா?" எனச் சிரி சிரி என்று சிரித்தான். அவன் அடிக்கடி கண்டு மகிழ்ந்த நாடகம் அது.

ஒரு ஆசிரியர் முன்னால் இன்னொரு ஆள் சிரித்தே பார்த்ததில்லை பார்த்தியும் பிரகாஷும்.

**ம**லைச்சியூர் பிரிவிலுள்ள டீக்கடைக்குச் சென்றனர். தேநீர் அருந்திக் கொண்டிருந்த போது பள்ளி கலைந்து மாணவ மாணவிகள் வீடு நோக்கிப் பயணிக்கத் துவங்கினாயிற்று. பார்த்திபனுக்கு சாரிடம் நிறையப் பேச வேண்டும் போல இருந்தது. அதே நேரம் பேச ஒன்றுமில்லையாகவும் இருந்தது.

தங்கராஜ் பார்த்திபனிடம், "அந்தப் பொண்ணு பேங்க் மானேஜர் பொண்ணுதானே?" என்றான்.

ஆமா... ஆனா நம்ம ரூட்ல குறுக்கே வந்துடாதீங்க."

அனிதா பற்றி தனக்கே தெரியாத தகவல்களை தங்கராஜ் தெரிந்து வைத்திருக்கக்கூடும் என நம்பினான் பார்த்திபன். தங்கராஜின் திறமைக்கு பள்ளி நிர்வாகமே அவனிடம் ஆலோசனைகளும் தகவல்களும் பெறலாம்.

தேநீர் குடித்தான பிறகு தங்கராஜ் சிகரெட் பற்றவைத்தான். ரவி, "நீங்க யாரும் சிகரெட் குடிக்கறது இல்லியா?" என்று கேட்டார்.


'இல்லை' என்றதும் அதுகுறித்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு, "பார்த்தி! ஒரு ஹெல்ப் பண்ணு. இந்த வாரம் ஒவ்வொரு வகுப்பா போயி எத்தனை எத்தனை பசங்க என்னென்ன விளையாட்டுல ஆர்வமா இருக்காங்கன்னு ஒரு லிஸ்ட் எடு" என்றார். 'பார்த்தி' என அழைத்தது அவனுக்குப் பிடித்திருந்தது.

"என்னென்ன விளையாட்டுன்னா..."

"வாலிபால், ஃபுட்பால், கபாடி... தடகளம் எல்லாம்தான்."

"கிரிக்கெட் சார்?"

"அது வேண்டாம். ஒரு செட் ஃபினேனல்ஸ் வாங்கிப் போட்டுடலாம். விளையாடறவன் விளையாடட்டும். அதுக்குக்



க.சீ. சிவகுமார்

கோச்சிங் தரப் போறதில்ல."

"ஏன் சார்?" பார்த்திபனுக்கு அவரது கூற்று ஆச்சரியமாக இருந்தது.

"இன்னொரு நாள் விரிவா சொல்றேன். ஏன் அதுல ஆர்வமில்லைன்னு" இதைச் சொல்கிற போது ரவியின் கண்கள் கோபம் போன்ற உணர்வில் மின்னின.

"எல்லா விளையாட்டுகளையும் கொன்னு அதுக்கு உரமாப் போட்டுக்கிட்டு இருக்கு கவர்ன்மெண்ட்டு. மூதல்ல டீ.வி. மேட்சுகளைக் காட்டறதை நிறுத்தணும்."

தங்கராஜ், "இல்ல ரவி. அதையெல்லாம் நிறுத்தினா வேலையில்லாத் திண்டாட்டப் போராட்டம்லாம் பெரிய அளவுல எந்திரிச்சுடும்" என்றான். சைக்கிள் விடுகிற நேரம் போக தங்கராஜ் நாட்டு நடப்பு பற்றிச் சிந்திக்கவும் செய்வானாய் இருக்கும்.

மலர்விழி, தமயந்தி, ஜோதி, அனிதா நால்வரும் டீக்கடைக்கு எதிர்ச்சாரியில் கடந்து நடந்து கொண்டிருக்க, சற்றுத் தள்ளி அன்வர் அலி போய்க் கொண்டிருந்தான்.

பார்த்திபன், "அனா..." என்று கத்தவும் நான்கு பெண்களும் அன்வரும் வலதுபுற டீக்கடையைப் பார்த்தார்கள். பார்த்திபன் இப்போது,

"அன்வர்... டீ சாப்பிட்றா" என்றான். அன்வர் இவர்களை நோக்கி வர, பெண்கள் நேர் தெற்கே நடந்தார்கள். 'அனா' என்ற விளிப்பில் அனிதா துணுக்குற்று முகம் சிவந்தாள். 'அனாவாம் அனா... பிற்பாடு அன்வராம்'

முகத்தில் இரு நொடிகள் மட்டுமே தங்கும் சிரிப்பைத் தவழ விட்டு மேற்கொண்டு நடந்தாள்.

பார்த்திபனிடம் ரவி, "இல்லாடிடா நீ" என்றார். பார்த்திபனுக்கு புரிப்பு தாளவில்லை. அன்வர்.,


"கூப்பிடறதுன்னா நேராக் கூப்பிட்டு டீ வாங்கிக் குடு மாப்ள. எங்க வாப்பா வச்ச பேர நீ ஏன் சுருக்கறே?" என்றான் ரவியைப் பார்த்து



## ஸ்டெபி ஆடிய கால்ஃப்!

படத்தில் இருப்பவர் ஸ்டெபி கிராப்தான். ஆனால் அவர் பிடித்துக் கொண்டிருப்பது டென்னிஸ் மட்டை இல்லை. கால்ஃப். ஸ்டெபி எப்போது கால்ஃப் ஆட ஆரம்பித்தார்? அண்மையில் ஜெர்மனியில் நடந்த கால்ஃப் போட்டியில் கலந்து கொண்டு ஆடினார். அதன் மூலம் வருவான பணம், ஒரு குழந்தைகள் நல அமைப்புக்கு வழங்கப்பட்டது!

- எம்



தயக்கமான புன்னகையைப் புரிந்தான். "வணக்கம் சார்" என்று ராணுவ பாணி சல்யூட் வைத்தான்.

ரவி மேலும் ஒரு தேநீர் மாஸ்டரிடம் சொன்னார்.

"இன்னொண்ணும் சொல்லுங்கள். கலைச்செல்வன் வந்துகிட்டிருக்கான்" அன்வர் இதைச் சொன்ன போது தூரத்தில் கலைச்செல்வன் வருவது தெரிந்தது. பனிரெண்டு – சி படிக்கிறவன்.

"நம்ம ஸ்கூல்ல ரன்னிங் ஃபர்ஸ்ட் இவன்தானுங்க சார்" என்று பார்த்தி எடுத்துரைத்தான். "அப்படியா" என்று ரவி உற்சாகமானார். கலைச் செல்வன் தேநீர் குடிக்கையில்,

"நூறு மீட்டர் எத்தனை செகண்டுல வருவே?" என்றார்.

இதற்கு கலைச் செல்வனிடம் பதிலில்லை. பந்தயத்தன்று டவுசரோடு நிற்பான். கிளாப் கட்டையைத் தட்டியதும் சிட்டாய்ப் பறப்பான். முதல் பரிசு. எவர்சில்வர் தட்டு அதன் மேல் சான்றிதழ். அவ்வளவே அவன் அறிந்தது.

"செகண்டுல இல்ல சார். ஃபர்ஸ்ட்ல வந்துடுவேன்" என அவன் சொல்லாததுதான் ஆச்சர்யம். ரொம்ப யோசித்து, "அரை நிமிஷத்துக்குள்ள வந்திடுவனுங் சார்" என்றான்.

"ரவிசாஸ்திரி ஆறு சிக்ஸர் அடிச்சது யாரு பந்துல?"

"தெரியலைசார்."

"ரைட். நீ வந்து ஹண்ட்ரட் மீட்டர் பதிமூணு இல்லாட்டி பதினாலு செகண்ட்ல வந்துடுவே."

ரவி இதைச் சொன்னதும் கலைச் செல்வனுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவனது இவ்வளவு வேகத்தை அவனே எதிர் பார்த்திருக்கவில்லை.

"திங்கட்கிழமையிலிருந்து காலை நேரமே ஸ்கூல் கிரௌண்டுக்கு வந்துரு. நான் இருப்பேன். பிராக்டீஸ் பண்ணலாம். உள்ளூர்தான நீ?"

"ஆமாம் சார்."

ரவி நினைத்துக் கொண்டாற்போலத் தங்கராஜிடம்,

– "இங்கியே வீடு இருந்தாத் தேவலை" என்றவர் பார்த்திபனைப் பார்த்து,

"உனக்கு ஏதும் தெரியுமாப்பா... இங்கே வீடு" என்றார்.

பார்த்திபனுக்கு சிரிப்பு வந்து விட்டது. குறிப்பாக பிரகாஷ் அருகில் நிற்பதால் தோன்றிய மகிழ்ச்சி அது. .அவனைக் குறும்பாகப் பார்த்து விட்டு,

"இவங்கப்பாகிட்டே சொன்னாப் போதும் சார். உடனே பாத்திடுவாரு" என்றார். அனிதா குடும்பத்துக்கு வீடு பார்த்ததைச் சொல்கிறான் எனப் புரிந்ததும் பிரகாஷ்,

"நாயே! நீ உதைபடுவே" என்றவன், பிறகு ரவிச்சந்திரனிடம் திரும்பி, "பார்த்துடலாம் சார். அதொரு மேட்டரே கிடையாது" என்றான்.

ரவி பார்த்திபனிடம்,

"ஏப்பா... அனிதா அவங்கப்பா பேங்க்ல அக்கவுண்ட் ஒண்ணு ஓப்பன் பண்ணிட வேண்டியதுதானே?" என்றார். அவர் இவ்வளவு சீக்கிரம் காதல் வரை ஊடுருவுவது எதிர்பாராததாக இருந்தது. ஒரே நேரத்தில் ஒவ்வாமையையும் கிளர்ச்சியையும் தந்து கொண்டிருந்தது. மற்ற நடவடிக்கை கொண்டு பார்க்கையில் பிரியமானவராகவும் தெரிந்தார். பயம் கொள்ளுதல் தேவையில்லை என்ற கட்டத்துக்கு மனம் வந்து விட,

"பேங்க்ல எதுக்கு சார் அக்கவுண்டு. வீட்டுக்கே போய்க்கிட்டிருக்கம்" என்றான்.

தங்கராஜ், "ஓ... அக்கவுண்ட் அங்கியே ஓப்பன் பண்ணியாச்சா? மனசுக்குள் உட்கார்ந்து மணியடிச்சுட்டே" என்றார். தேவதைப் படுத்துதல் தொடங்கியாகி விட்டது. இனி அவன் காதலிப்பதான, காதலிப்பதாக நம்புகிறதான ஒரு காரியத்தைச் செய்யாமல் மீள முடியாது.

தங்கராஜின் பேச்சைப் பாராட்டு போல எடுத்துக் கொண்டு சிரித்த பார்த்திபன், அதே நேரம் கலைச் செல்வனின் கண்களைச் சந்திக்கத் தவறினான். அந்தக் கண்களில் தீக்குழம்பு படர்ந்தாடிக் கொண்டு இருந்தது. அது சூரியனின் மேற்பரப்பிலும் புவியின் மையத்திலும் கனலுகிற வெப்பம்.

(தொடரும்)

"எனக்கு சமுத்திரத்துலே கண்டம்னு ஜோஸியர் சொன்னது சரிதான்..."

"எப்படி?"

"அம்பா சமுத்திரத்துலே பொண்ணு பார்த்துட்டாங்க..."

– தஞ்சை தாமு



**ராஜரங்கன்**

பகவதி சரண் மஹாபாத்ரா சிகரெட்டை அழுத்தமாக உறிஞ்சி விட்டு, ஓடும் ஜீப்பிலிருந்து வலது கையை வெளியே நீட்டி எறிந்தபின் மறுபடியும் ஸ்டியரிங் வளையத்தைப் பிடிக்கிறான். குண்டும் குழியுமாக இருக்கும் சாலையில், முழங்கால் அளவு தண்ணீரில் முக்கி முனகிக் கொண்டே ஜீப் முன்னேறுகிறது.

திடீரென்று ஓர் உலுக்கல். எதிலோ மோதி வண்டி நிற்கிறது. அதிர்ச்சியில் முன்னே இருக்கும் கண்ணாடியில் மோதுகிறேன். தானாகவே கை உடனே நெற்றியைத் தடவுகிறது. ரத்தமோ, காயமோ இல்லை. வெறும் வலி.

''ஸாரி'' - கழுத்தை வெளியே நீட்டித் தண்ணீருக்குள் உமிழ்கிறான்.

இன்னொரு சடலம். இந்தத் தரம் உப்பி ஊதிப் போன எருமைக் கன்றுக்குட்டி. பரதீப் போவதற்குள் இன்னும் எத்தனை பார்க்கப் போகிறோமோ? ஓ காட்.

ஜீப்பைக் கிளப்பி வலதுபுறமாக ஒடித்து அந்தக் கறுப்பு மூட்டையைக் கடக்கிறான். எனக்குக் குமட்டிக் கொண்டு வருகிறது. சட்டைப் பையைத் தடவி நாலைந்து ஏலக்காய்களை வாயில் போட்டு அடக்குகிறேன்.

ஜகத்சிங்பூர் மாவட்டம் முழுவதும் வெள்ளக்காடு, பிணக்காடு. அதிகாரபூர்வ அறிவிப்பின்

# ஊழி



படியே அங்கு மட்டும் ஏழாயிரம் மனித உயிர்கள் காவு. ஒரிஸ்ஸா மாநிலத்தில் பத்தாயிரம் பேருக்கு மேல் பலி. இரண்டு லட்சம் கால் நடைகள் சர்வநாசம். ஏர்ஸாமா பகுதியில் இருந்த இருநூறு கிராமங்களில் எத்தனை முழுகிப் போயிற்று என்று கணக்கு எடுத்தாக வேண்டும். கொலைகாரப் புயல் சென்ற பாதையில் ஒன்பது லட்சம் வீடுகள் தூள் தூள். பதினோரு லட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிர் மட்டத்துக்கு மேல் சில மீட்டர்கள் வெள்ளத் தேக்கம்.

என் பத்திரிகை ஆசிரியர் அனுபவ முதிர்ச்சியோடு சொன்னார். "உன் போன்ற இளைஞனுக்கு இது ரொம்பவே ஆழ் அதிர்ச்சி தரும் அனுபவமாக இருக்கும். நவகாளி சம்பவங்கள், பிரிவினையின் போது நடந்த சமயம் நான் காந்தியுடன் ரத்தச் சேறு படிந்த வீதிகளில் நடந்திருக்கிறேன். மனித சமுதாயத்தின் மீதே அவநம்பிக்கையும் வெறுப்பும், குமிழி யிட்டுப் பெருகும் அதே நேரத்தில் பளிச் பளிச் சென்று ஓரிரு நிகழ்ச்சிகள் நடந்து ஒளி வீசி என்னைத் திரும்ப மனிதநேயப் பாதைக்குக் கொண்டு வந்தன. ஒரு இளம் பத்திரிகையாளன் என்ற முறையில் நீ சுற்றிலும் நடக்கும் எல்லாவற்றையும் ஊன்றி கவனித்து பத்திரமாகத் திரும்பி வா. நல்ல செய்திக் கட்டுரை கொடு."

மஹாபாத்ரா என்னை விட

ஓரிரண்டு வயது மூத்தவனாக இருக்கலாம். அரசாங்க இயந்திரத்தின் கண்ணுக்குத் தெரியாத எத்தனையோ முள் சக்கரங்களில் ஒன்றாக இப்போது இருந்தாலும், இன்னும் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளில் அதன் தூணாக நிச்சயமாய் விளங்கப் போகிறவன். எர்ஸாமாவிலிருந்து பாதீப் துறைமுகம் வரை எனக்கு அரசாங்கம் கொடுத்த வழித்துணை.

"பாதீப் துறைமுகம் அருகில் பயங்கரமான புயல் வீசி, கடல் அலைகள் நாற்பது அடி உயரத்துக்கு சுவர் போல நகர்ந்து வந்து ஜனங்கள் இருந்த குடியிருப்புகளை மூழ்கடித்திருக்கின்றன. தெற்கே ஆந்திராவிலிருந்து வந்த செம்படவர்களும், கூலி வேலை செய்பவர்களும் அங்கே இருந்திருக்கிறார்கள். கடற்கரையிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்திலிருந்த வீடுகளின் மேற்கூரையே பிய்த்துக் கொண்டு போய் விட்டது என்றால் பார்த்துக் கொள். ஜன்னல் கண்ணாடியெல்லாம் தவிடு பொடி."

ஜீப்பை நிறுத்துகிறான். எதிரே ஒரு கார் வழியை மறைத்துக் கொண்டு நிற்கிறது. வெள்ளை வெளேரென்று சட்டையும் நிக்கரும் அணிந்த ஒரு ராணுவ வீரர் – கடற்படையாக இருக்க வேண்டும் – இறங்கி மஹாபாத்ராவிடம் வந்து சல்யூட் வைக்கிறார். "யூ மஸ்ட் பீ மிஸ்டர் மஹாபாத்ரா?"



"பூண்டு வியாபாரி எப்படி கோடீஸ்வரர் ஆனார்?"
"முன்னேறணும்னு உறுதி பூண்டு உழைச்சாராம்!"
– தஞ்சை தாமு

"ஆமாம், என்ன வேண்டும்?" என்கிறான்.

"நேவல் கமாண்டர் உங்களிடம் சொல்லச் சொன்னார். இதற்கு மேல் ஜீப் போவதற்குப் பாதை இல்லை. ஒரு பாலம் உடைந்து சுக்கு நூறாக வெள்ளத்தில் போய் விட்டது. அதோ அந்த மைதானத்தில் நேவி ஹெலிகாப்டர் நிற்கிறது. உணவுப் பொட்டலங்கள் போடப் போகிறோம். பாதீப் வரை போவோம். உங்களை அதில் அழைத்து வரச் சொன்னார்."

"கமான் சாரங், வானத்திலிருந்தும் இந்தக் கொடுமையான காட்சியைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது. வா..."

காமிராவை பத்திரமாக ஒரு துண்டில் சுற்றி எடுத்துக் கொண்டு இறங்குகிறேன். இருவரும் கடற்படை அதிகாரியுடன் மைதானம் நோக்கி நடக்கிறோம். அங்கங்கே வேரோடு விழுந்த மரங்களையும் பின்னிப் பிணைந்து அழுகல் நெடி அடிக்கும் கிளைகளையும் தாண்டிப் போகும் போது ஓரிரு மனித உடல்களும் கிளைகளுக்கிடையில் தென்படுகின்றன. தந்திக் கம்பங்களும், மின்சாரக் கம்பிகளும் தரைமட்டத்தில் வளைந்து, நசுங்கி விபரீதக் கோணங்களில் கிடக்கின்றன.

மஹாபாத்ரா என் கையை இழுத்து நிறுத்துகிறான். "இரு, நகராதே."

திகைப்புடன் நான் நிற்கிறேன். ஐந்தாறு அடி தூரத்தில் விழுந்து கிடந்த புளிய மரத்தடியிலிருந்து ஒரு நல்ல பாம்பு நெளிந்து வருகிறது. அதன் மேனியில் ஈரம் பளபளக்கிறது. படம் எடுத்து, எங்களைப் பார்த்து சில கணங்கள் அசையாமல் உறைகிறது. நாங்கள் மூவரும் சிலையாக நிற்கிறோம். படத்தைச் சுருக்கி, தலையைத் தாழ்த்தி நகர்ந்து சாலையைக் கடந்து ஒரு புதருக்குள் போய் மறைகிறது.

"உம், பசி, பட்டினி, குளிர், புயல், மழை, இத்தனையும் போதாதா? காலரா, பிளேக் தவிர பாம்புக் கடியால் வேறு எத்தனை பேரைச் சாவு தழுவியதோ? வா, போகலாம்."

ஹெலிகாப்டர் சிறகைச் சுழற்றி, "ஜிவ்"வென்று வானில் ஏறுகிறது.

கண்ணுக்கெட்டிய தூரம் பழுப்பு நிறத் தண்ணீர்ப் பாளம். ஆங்காங்கே தெப்பம் போல மிதக்கும் மனித, கால்நடைச் சடலங்கள். மூழ்கிய குடிசைகள், வீடுகளின் மேற்கூரைகள் மட்டும் தெரிகின்றன. அவற்றின் மேலே சில ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் ஒண்டி, நடுங்கி அண்ணாந்து பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். அடிவானம் அருகில் துண்டு துண்டாகத் தெரியும் கறுப்பு மேகங்களை, யமதூதர்களைப் பார்ப்பது போல் பயத்துடன் பார்த்து நிற்கிறார்கள். ஹெலிகாப்டர் சப்தம் கேட்டவுடன் ஓரிருவர் இந்தப்புறம் திரும்பிக் கையை ஆட்டுகிறார்கள். ஒரு காரை வீட்டின் மேல் தளத்தில் ஐம்பது, அறுபது பேர் ஏதோ சொல்லிக் கூவுகிறார்கள். ஹெலிகாப்டர் தாழப் பறந்து போடும் உணவுப் பொட்டலங்கள் அவர்கள் மேலேயே விழுகின்றன. ஒருவரோடு ஒருவர் மோதிப் பாய்ந்து அவற்றைப் பிடித்துக் கொள்கிறார்கள். காமிராவை இயக்க முடியாமல் என் கண்கள் நனைகின்றன. மஹாபாத்ரா ஒன்றுமே பேசாமல் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். ஹெலிகாப்டர் அங்கிருந்து விலகி பாதீப் இருக்கும் திசையை நோக்கிப் பறக்கிறது.

"அதோ பாருங்கள்" என்று ஹெலிகாப்டரை இயக்கும் கடற்படை வீரர் காட்டுகிறார். தண்ணீர்ப் பரப்புக்கு நடுவே ஒரு திட்டு

தெரிகிறது. அதற்கு மேலே ஹெலிகாப்டர் தாழ்வாகப் பறக்கிறது. குடல் எழும்பித் தொண்டைக்கு வந்து விடும் போலிருக்கிறது. ஐயோ...!

திட்டின் மேல் படும் மஞ்சள் வெயிலில் குப்பல் குப்பலாக, கோயம்பேட்டுக் காய்கறி வியாபாரிகள் கழித்து எறிந்த அழுகல் குப்பையாக, கோணல் மாணலாக மடங்கியும், முறிந்தும், காய்ந்த இரத்தக் கறைகளுடனும் ஏராளமான உடல்கள் கிடக்கின்றன. நூறு நூற்றிருபதுக்குக் குறைவில்லை. ஆடை கிழிந்து தலைமயிர் குலைந்த பெண்கள், கையில் ஏதேதோ சட்டி பானைகளைப் பிடித்துத் தழுவிக் கொண்ட ஆண்கள். பிளாஸ்டிக் பொம்மைகளை இறுகப் பிடித்த குழந்தைகள். இறைந்து கிடந்த சிறு பெட்டிகள், கூடைகள்.

"ஒரு உடல் கூடத் தப்பியிருக்க முடியாது" என்கிறார் கடற்படை வீரர். அவர் குரல் தழுதழுக்கிறது.

"ஷாக், குளிர், பதினாலு நாள் பட்டினி, வேறு என்ன வேண்டும் அவர்களுக்கு?"

நெஞ்சு கனத்தாலும் கடமை உணர்வோடு ஒரு புதுச் சுருளைப் போட்டு காமிராவை இயக்குகிறேன். மஹாபாத்ரா ஒரு கைக் குட்டையை வாயிலும் மூக்கிலும் இணைத்து அடைத்திருக்கிறான். ஹெலிகாப்டருக்கு உள்ளேயே, "குப்"பென்று தாங்க முடியாத வாடை அடிக்கிறது. ஹெலிகாப்டர் அங்கிருந்து ஓரிரு கிலோ மீட்டர் தூரம் போகும் வரை அதன் நெடி துரத்துகிறது.

மஹாபாத்ரா கைக் குட்டையை வாயிலிருந்து எடுக்கிறான்.

"குளிராலும் பசியாலும் பட்டினியாலும் ஒரு மனித உயிர் பிரியும் தருணங்களை உன்னால் கற்பனை செய்ய முடிகிறதா? எனக்கு முடியவில்லை. அந்த நேரத்தில் எதையேனும் செய்து, யாரை வேண்டுமானாலும் அழித்து தன்னுயிரைத் தக்க வைக்கும் வெறி வரும் என்பது மட்டும் தெரிகிறது."

"யூ ஆர் அப்ஸொல்யூட்லி ரைட்" என்கிறார் ஹெலிகாப்டரை இயக்கும் கடற்படை வீரர்.

"பரதீப்பிலிருந்து எர்ஸாமா வரும் வழியில் உடைப்புகள் மட்டுமில்லை. அங்கங்கே வந்த உணவு லாரிகளை மடக்கி சூறையாடி நடுவழியில் நிறுத்தியிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏழை எளியவர்கள் ஆயுதம் எடுத்து வந்து தாக்கும் போது, அதுவும் இதுபோன்ற இயற்கையின் கொடுமைக்கு ஆளானவர்கள் வரும் போது, போலீஸ் கூட முடியுமா? அப்படி அவர்களை அடக்கவோ, சமாதானப்படுத்தவோ யாரேனும் அரசியல்வாதியோ, ஆன்மீகவாதியோ, அதிகாரிகளோ வந்தால் நெருப்பிலே தூக்கி எறிந்து விடுவார்கள். சின்னக் குழந்தைகள் கூட ஆக்ரோஷத்தோடு இதில் பெரியவர்களோடு கலந்து கொண்டிருக்கிறார்களாம்..."

"கரெக்ட். சமூகப் பிரக்ஞை உள்ள எவனும் வன்முறையையும், சட்டமீறலையும் ஒத்துக் கொள்ள முடியாதுதான். ஆனால் வேலியே பயிரை மேயும் நிலை வரும் போதுதான் அவை வெடிக்கின்றன. இந்த எளிய மக்களின் அத்துமீறல்களுக்குக் காரணத்தை ஆராய்ந்து பார்த்தாயா? அது சரியா, தவறா என்பதை விட்டு விடுவோம். இந்த ஹெலிகாப்டருக்குள் நம் மூக்கைத் தாக்குகின்றதே பிணவாடை, அதைவிட மோசமான ஊழல் நாற்றம் எல்லாத் தளங்களிலும் அடிக்கிறது" - மஹாபாத்ரா குரலில் சூடு ஏறுகிறது.

வியப்போடு அவனைப் பார்க்கிறேன். இவ்வளவு சமூகப் பிரக்ஞையோடும், இறந்த மனத்தோடும் பேசும் இவனா டெல்லியில் யார் காலையோ பிடித்து சலுகையில் சொந்த மாநிலத்திலேயே வந்து வேலை பார்க்கிறான்? எனக்கு யாரோ சொன்ன தகவல் அசூயையால் உற்பத்தியான பொய்யோ? மெதுவாக அவனை இதுபற்றிக் கேட்டு விடுகிறேன்.



''அந்த எழுத்தாளர் கால்லே கட்டு போட்டிருக்காரே... ஏன்?''
''கற்பனைக் குதிரையிலே பறக்கும்போது கீழே விழுந்துட்டாராம்!''
— தஞ்சை ராமு

அவன் கண்கள் ஒருகணம் கலங்குகின்றனவா என்ன?

"நீ கேட்டது தப்பில்லை, சாரங்க்! இந்த விஷயம் ரொம்பப் பேர் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது.

என் குடும்பத்தில் மனைவியைத் தவிர யாரும் இல்லை. அனாதை விடுதியிலிருந்து படித்து முன்னேறினவன் நான். இரண்டு ஆண்டுகளுக்கு முன் டெல்லியில் நான் வேலை பார்த்த போது அந்த அதிர்ச்சியான செய்தியை எனக்கு டாக்டர்கள் சொன்னார்கள். சௌதாமினி எப்போது என்னைப் பிரிந்து, வாழ்க்கையை உதறிவிட்டுப் போவாளோ தெரியாது. வாயில் நுழையாத

ஒரு வினோத வியாதியின் லத்தீன் பெயரைச் சொன்னார்கள். அவளுக்கு நான் சொல்லவில்லை. இரண்டு பேரும் ஒரிஸ்ஸாவின் மண்ணில் பிறந்து வளர்ந்து விளையாடியவர்கள். இங்கே வந்து சேர்ந்து விட வேண்டும் என்று தாபம். அமைச்சருக்கு இது தெரிந்து கண்ணீரே வந்து விட்டது. உடனே மாற்றலுக்கு ஏற்பாடு செய்து விட்டார். என்னுடைய மொழி பேசி, என்னுடைய மக்களோடு இந்த இரண்டு ஆண்டுகள் இருக்கும் அதிர்ஷ்டம் கிடைத்தது...'' பேச்சை திடீரென்று நிறுத்தி விட்டு ஹெலிகாப்டர் பைலட்டிடம் திரும்புகிறான்.

"அதோ பாருங்கள்! அது என்ன?"

வெள்ளத்துக்கு நடுவே ஒரு பெரிய மரத்தின் கிளைகள் மட்டும் ஓரடி, நீர்மட்டத்துக்கு மேல் தெரிகின்றன. ஒரு கிளையின் அகன்ற இலைப் படுக்கையின் மேலே ஏழெட்டு வயதிருக்கும் - ஒரு சிறுமி உட்கார்ந்து ஒரு கையால் கிளையைப் பிடித்துக் கொண்டு இன்னொரு கையை மெதுவாக அசைக்கிறாள். மஹாபாத்ரா எழுந்திருக்கிறான். "உடனே அங்கே போங்கள். தாழப் பறந்து கிளைக்கருகில் போனால் மெதுவாக அவளைக் கையைப் பிடித்துத் தூக்கி விடுகிறேன்."

''மன்னியுங்கள்'' என்கிறார் பைலட். "எனக்கு இரக்கமில்லை என்று நினைக்காதீர்கள். இதெல்லாம் சினிமாவில் வரும் காட்சி போல் இல்லை. ஏற்கெனவே பெட்ரோல் தீரும் சமயமாகி விட்டது. அதோ அருகிலேயே பரதீப் கரை தெரிகிறது. அங்கே போய் இறங்கும் வரை சமாளித்து விடலாம். உடனே படகை அனுப்பி இவளைக் காப்பாற்ற முடியும். இப்போது கிளைக்கு மிக அருகில் போவதும், அந்தப் பெண்ணை ஏற்றிக் கொண்டு, அதிக எடையோடு எதிர்க்காற்றில் காலி பெட்ரோல் டாங்குடன் கரை நெருங்குவதும் ஆபத்து. அவளை வேறு ஏற்பாடு செய்து காப்பாற்றலாம்...''

மஹாபாத்ராவின் கண்களில் எங்கிருந்தோ ஒரு ஆவேசம் தெறிக்கிறது. "ஸாரி... அவள் கை ஆடுவதைப் பார்த்தாலே பலகீனமாகத் தெரிகிறது. நாம் கரைக்குப் போய் வரும் வரை உயிரோடு இருப்பாள் என்று என்ன நிச்சயம்? ப்ளீஸ்... அங்கே போங்கள்."

மறுக்க முடியாமல், தயக்கத்தோடு அவர் ஹெலிகாப்டரைத் தாழ்த்தி மரக்கிளை அருகில் கொண்டு போகிறார். காற்று வேகத்தில், அது ஆடிக் கொண்டே பெரிய ஒலியோடு நெருங்கும் போது கிளைகள் பயங்கரமாக அசைகின்றன. காபின் கதவைத் திறந்து நூலேணியை வீசுகிறான் மஹாபாத்ரா. அண்ணாந்து அரைக்கண் பார்வையாக எங்களைப் பார்க்கும் அந்தச் சிறுமியின் முகத்தில், கிளைகள் கீறி ரத்தம் கசிகிறது. இன்னும் இரண்டொரு நிமிடம்தான். அவள் நூலேணியை பற்றிக் கொண்டு மேலேற வேண்டும். இந்த அற்புதக் கணங்களை நான் காமிராவில் பதிவு செய்கிறேன்.

எழுதுவேன். எனக்குள் பொங்கும் உணர்ச்சிகளைக் காகிதத்தில் கொட்டுவேன். இதுவரை இருந்த சூழலின் அவலத்தை மறந்து, மனிதநேயத்தை எழுதுவேன். என் ஆசிரியர் சொன்னது சத்தியமான வார்த்தைதான்.

யாரும் எதிர்பார்க்கவில்லை. படபடப்புடன் அவள் ஏணியைப் பற்றும் கணத்துக்காகத் தலையை வெளியே நீட்டிக் குனிந்து, 'கமான், கமான்' என்று கத்திக் கொண்டிருந்த மஹாபாத்ரா ஒருகணம் தடுமாறுகிறான். நிலைகுலைந்து அவன் விழ, சிறுமியின் மீதே விழுந்து இருவரும் வெள்ளத்தில் மறைகிறார்கள்.

பிரமை பிடித்து நிற்கிறேன். இனி என்னால் ஆயுசுக்கும் ஒரு வரி கூட எழுத முடியும் என்று தோன்றவில்லை. ○




''மத்தவங்க மாதிரி பைக், கார்னு சின்னதா திருடாம கொஞ்சம் பெரிசா திருடலாமேன்னு நெனச்சி திருடப்போய் இப்படி வசமா போலீஸ்ல மாட்டிக்கிட்டேன்.''

''அப்படி என்ன நீ லாரியையா திருடினே?''

''இல்லே.... ரோடு ரோலரை!''

– ராசிபுரம் சம்பத் குமார்



* 'பாரதி' படத்தில்...



* கேஸட் வெளியீட்டில்...

# பார்க் ஷெரட்டனுக்கு வந்த பாரதியார்!

"நடு இரவு தூங்கிக் கொண்டிருந்தவர், திடீரென்று கண் விழித்து, படபடவென்று ஏதோ பேச ஆரம்பித்துவிட்டார். சப்தம் கேட்டு எழுந்து பார்த்த எனக்கு 'என்ன சொல்லுகிறார், எதற்காகச் சொல்லுகிறார் என்று ஒன்றுமே புரியவில்லை.

அவரைப் பிடித்து உலுக்கி, 'என்ன ஆயிற்று உங்களுக்கு? ஏன் இப்படி நடந்து கொள்ளுகிறீர்கள்' என்று கேட்டபோது, 'உஷ்! பேசாதே குறுக்கே! நான் சொல்வதைக் கேள்!' என்று அதட்டல் போட்டுவிட்டு, மறுபடியும் படபடவென்று பேசிக்கொண்டே போனார். எனக்கு ரொம்ப பயமாகிவிட்டது. எழுந்துபோய், அம்மாவை எழுப்பிக் கூப்பிட்டுக் கொண்டு வந்தேன். அம்மா என்னவென்று விசாரிக்க, அவரோ, தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்!

"அதிர்ச்சியுடன் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தோம். சில நிமிடங்களுக்குப் பிறகு அவர் அமைதியானார். என்ன பேசினீர்கள் இத்தனை நேரம் என்று கேட்டபோது, அவர் அமைதியாய்ச்



★ சாயாஜி ஷிண்டே

சொன்னார். 'தமிழ்...
தமிழ் பேசினேன். பாரதி பேசும் வசனம்...'

இந்த நடுநிசி சம்பவத்தை நினைவு கூர்ந்தவர் மோனிகா. 'பாரதி' - தமிழ்த் திரைப்படத்தில் பாரதி பாத்திரத்தில் நடிக்கும் மராட்டிய நடிகரான சாயாஜி ஷிண்டேவின் மகள். சமீபத்தில் பார்க் ஷெராட்டன் ஓட்டலில் நடைபெற்ற பாரதியார் படப் பாடல் கேஸட் வெளியீட்டு விழாவுக்குத் தன் மகளையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தார் சாயாஜி ஷிண்டே!

இந்தப் படத்தில் நடிக்க, இவர் பரிசீலிக்கப்படுவதற்கு முன்பு வரை, அவர் துளியும் அறிந்திராத பெயர் பாரதி. ஆனால் இன்று பாரதி பற்றி ஒரு பெரும் சொற்பொழிவே ஆற்றுகிற அளவுக்கு விஷயங்கள் தெரிந்து வைத்திருக்கிறார் ஷிண்டே! பல பாரதி பாடல்கள் இவருக்கு மனப்பாடம். விரல் சொடுக்கியபடி, ராகமாய்ப் பாடிக் காட்டுகிறார். படத்தில் பேசிய வசனங்களை, படபடவென்று பேசிக் காட்டுகிறார்.

"தமிழ் வசனங்கள் பேசுவது கஷ்டமாக இருந்ததா? அர்த்தம் புரிந்து பேசினீர்களா ஷிண்டே?"

"ஆமாம்! தமிழ் வசனங்களை இந்தியில், மராத்தியில் எழுதி வைத்துக்கொண்டு மனப்பாடம் செய்தேன். ஒவ்வொரு வார்த்தைக்கும் அர்த்தம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அப்போதுதானே வசனங்களுக்கு ஏற்ப, முகத்தில் உணர்ச்சிகளைக் காட்ட முடியும்? ஹைதராபாதில் வேறு ஒரு இந்திப் பட ஷூட்டிங் சமயத்தில்கூட சென்னையிலிருந்து யூனிட் நண்பர் ஒருவரை வரவழைத்து வசனப் பயிற்சி பெற்றேன்."

"மறக்க முடியாத காட்சி?"

"கல்லிடைக்குறிச்சியில் எடுக்கப்பட்ட ஒரு காட்சி. பாரதியின் மகளுக்கு, அவருக்குத் தெரியாமலேயே கல்யாண ஏற்பாடுகள் நடந்து, அந்தச் செய்தி அவருக்குத் தெரிய வருகிறபோது, அதிர்ச்சியடையும் காட்சி. மிகுந்த ஈடுபாட்டுடன் நடித்தேன்."

இடையில் புகுந்து பேசினார் மோனிகா.

"பாரதியார் இறந்து போகும் காட்சி எடுப்பதற்கு இரண்டு மூன்று நாட்கள் முன்பு டைரக்டர் டெலிபோன் பண்ணி, இரண்டு நாள் சோக மூடில் இருங்கள் என்று சொல்லி விட்டார்.

"அவ்வளவுதான். அப்பா முகத்தில் வாட்டம் குடிகொண்டு விட்டது. அடிக்கடி, கண்ணாடி முன் சோகமாய் நின்று முகத்தைப் பார்த்துக் கொள்வார். ஏறத்தாழ அப்பாவின் முகத்தில் சவக்களையே வந்து விட்டது!"

மகள் சொல்வதைக் கேட்டு, ஆமோதித்துச் சிரிக்கிறார் ஷிண்டே.

"அடுத்த ஆண்டு தேசிய விருது...?"

ரொம்ப யோசித்துவிட்டு, "வேறு ஒரு நடிகருக்குக் கொடுக்க நடுவர்களுக்கு நிச்சயம் மனம் வராது!" என்கிறார்.

தன்னம்பிக்கை!

சந்திப்பு: **பாரதி மௌலி**

---



***"காலத்துக்கு ஏற்ப மாடர்னா மாறுவதிலே நம்ம தலைவரை யாருமே பீட் பண்ண முடியாது!"***

***"என்னவாம்?"***

***"கட்சிக் கரை போட்ட பேண்ட் மாட்டியிருக்காரே!"***

***- அம்பை தேவா***




# இயன்றவரை இனிய தமிழ்!

✉ உலக மொழியான ஆங்கிலம் நின்று நிலைத்திருப்பதற்குப் பல்வேறு மொழிகள் அதில் சங்கமித்திருப்பது தான் காரணம். தமிழ் வார்த்தைகளான மாங்கா கட்டுமரம் இவைகள் அப்படியே ஆங்கிலமயமாகி விடவில்லையா? பிறமொழிச் சொற்கள் கலப்பதால் தமிழின் எல்லை விரியுமே தவிர சுருங்காது. தனித் தமிழ் என்பது குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல்தான்!
அரவக்குறிச்சிப்பட்டி,
எம். அசோக் ராஜா.

✉ கொடுவேரியின் கோபக் கடிதம் கண்டேன். அவர் கோபம் நியாயமானது தான். அவர் குறிப்பிட்டபடி, ஏன் கூடியவரை தமிழில் தலைப்புகள் தரக்கூடாது? நாங்களும், நீங்கள் அடைப்புக் குறிக்குள் கொடுத்திருக்கும் தூய தமிழை எதிர்பார்க்கவில்லை. எங்கள் எதிர்பார்ப்பு, இயன்ற வரை இனிய தமிழ்.
சென்னை - 28, செ. குமார்.

✉ காஷ்மீர் முதல்வரின் கர்ஜனை பற்றிய தலையங்கம் வெகு அற்புதமாக எழுதப்பட்டுள்ளது. மக்களுடைய கருத்தை அறியாமல், தலைவர்களால் திணிக்கப்படும் தீர்வுகள் பலன் தராது என்ற வரிகள் அரசியல்வாதிகளுக்கு சற்றே உரைத்தால் நல்லது.
கும்பகோணம்,
எஸ்.கே. மூர்த்தி.

✉ 'ஜெவுக்கு வந்த மூன்று லட்சம் டாலர்' கட்டுரையில் இது தொடர்பான விவரங்களைத் தெளிவாக, ஆதி முதல் அந்தம் வரை விலாவாரியாக விளக்கி விட்டு, இறுதியில் இந்தப் பிரச்னையை 'மேடம்' சமாளிக்க ஒரு அருமையான ஐடியாவையும் அன்னி வழங்கி இருக்கிறாரே தில்லப்பா, அவருக்கு பயங்கர லொள்ளப்பா!
ஈரோடு,
எஸ். ரஜினிப்ரியன்.

✉ 'வெற்றிக் கொடி கட்டு' படத்தைப் பார்க்கலாம் என வாசகர்களுக்கு பச்சைக் கொடி காட்டிய உமது விமர்சனத்துக்கு ஒரு சபாஷ்!
மதுரை - 16,
பி.எம். வள்ளி.

✉ அந்த மம்தா பொண்ணு பாட்டுக்கு ஏதோ சமையல் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இருக்கு. அதை எதுக்கு 'சினிமாவில் நடிங்க'ன்னு இம்சை பண்றீங்க?
கல்பாக்கம், சி. இரவிச்செல்வன்.

✉ படித்தும், படிக்காமலும் சோம்பித் திரியும் இன்றைய இளைஞர்களைக் காட்டிலும் வயதான காலத்தில் மனம் தளராது மிருகங்களுடன் வாழ்க்கை நடத்தும் மெக்கானிக் சாமியார்தான் 2000-ல் சிறந்த மனிதர்!
கீழ்வேளூர், கோ. தியாகராஜன்.

✉ மூக்குத்தி கதைகள் ஒரே மூக்கில் (இதழில்) இரு வைர மூக்குத்திகளாக மின்னின. அருமை!
சென்னை - 73, ஏ.வி. கஸ்தூரி ரங்கன்.

✉ ரைன் நதியின் ஓட்டத்தையும், அதன் பல பரிமாணங்களையும் ஆல்ப்ஸ் மலைத் தொடர் பற்றியும் தமது பயணக் கட்டுரையில் மிகவும் சிலாகித்து எழுதியிருந்தார் சீதா ரவி. அந்த மலைத் தொடரின் அழகில் மயங்கியதோடு மட்டுமில்லாமல் அந்த ஒற்றைக் குருவியின் சங்கீதத்தை எழுத்தில் வடித்தெடுத்து எங்கள் காதுகளுக்குக் கொண்டு வந்திருந்த எழுத்து வன்மை பாராட்டத்தக்கது!
மொரட்டுப்பாளையம், க. நா. இராஜேஸ்வரன்.

✉ திடீர்ப் பூசாரிகள் பற்றிச் சாவி சரியாகத்தான் சாடியுள்ளார். அவர் ஒரு பிடி பிடித்திருப்பது பக்தர்களுக்கும் பிடித்தமான ஒன்றுதான்; பிள்ளையார் விஷயத்திலுமா பிசினஸ்?
பொறையாறு, கங்கா கணேசன்.

**வட்டமேஜை**

● வி.பி. மகராசி, மதுரை.

? ***பீஹார் மாநிலத்தில் 314 ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியரே கிடையாதாமே?***

! மக்கள் படித்து விழிப்புணர்வு பெற்று விட்டால் தங்கள் பாச்சா பலிக்காது என்பது ஆளும் வர்க்கத்துக்குத் தெரியாதா என்ன?

● என். சண்முகம், திருவண்ணாமலை. *

? ***'தினமலர், ஹிந்து, கல்கி, ஜூனியர் விகடன் ஆகிய பத்திரிகைகளை இனி யாரும் வாங்கிப் படிக்கக் கூடாது' என்று ஈரோடு மாநாட்டில் டாக்டர். ராம்தாஸ் பேசினாரே?***

! இப்படி ஒதுக்கிக் கொண்டே போனால் கட்சிப் பத்திரிகைகள்தான் மிஞ்சும். ஜால்ரா தட்டும் பத்திரிகைகளைப் படிப்பதால் மக்களின் சிந்தனை சக்தி வளராது. மூளைச் சலவைதான் நடக்கும்.

□ ரூ. 50 பரிசு பெறுபவர் :
சுதந்திரச் செல்வன்,
சித்தமல்லி அஞ்சல் பி.ஓ.
மன்னார்குடி தாலுகா,
திருவாரூர் மாவட்டம் - 614 705.

* ரூ. 25 பரிசு பெறுபவர் :
என். சண்முகம்,
32 கே, பைபாஸ் சாலை,
திருவண்ணாமலை - 606 602.

● ஆ. அழகேஷ், பூதப்பாண்டி.

? ***தராசுக்குப் பிடித்த, பிடிக்காத விஷயங்கள் என்ன...?***

! பிடித்தது - எடை போடுவது; பிடிக்காதது - அடியில் புளி ஒட்டுவது!

● சுதந்திரச் செல்வன், சித்தமல்லி. □

? ***ஒரு போர் விமானம் வாங்கும் காசில் உலகில் உள்ள காசநோயை முற்றிலும் ஒழித்து விடலாமாமே?***

! உண்மைதான்! ஆனால் காசநோயை ஒழிப்பதை விட மனிதகுலத்தையே அழித்து விடுவது சுலபம் என்ற போக்கில்தான் இன்றைய உலக அரசியல் நோக்கு இருக்கிறது.

● அ. சங்கரன், பெங்களூர் - 16.

? ***ராஜீவ் காந்தி கொலையுண்ட பிறகு தொடர்ந்து ஐந்தாண்டுகள் மத்தியில் காங்கிரசும் தமிழகத்தில் அ.தி.மு.க.வும்தான் ஆட்சியில் இருந்தன. அந்தக் காலகட்டத்தில் பிரபாகரனைக் கைது செய்ய முடியாத ஜெவும் காங்கிரஸாரும் இப்போது தமிழகத்தில் தி.மு.க. அரசும் மத்தியில் பி.ஜே.பி. கூட்டணி அரசும் இந்த விஷயத்துக்காக ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோருவது நியாயமா?***

! இதோ தேர்தல் வந்து கொண்டேயிருக்கிறது. பிரபாகரனைக் கைது செய்து கொண்டு வந்து சிறையில் அடைப்பதாக ஜெவும் இளங்கோவனும் வாக்குறுதி அளிக்கட்டுமே!

● எம்.டி.. ரவிகாந்த், காஞ்சிபுரம் - 1.

? ***ஃபிஜியின் முன்னாள் பிரதமர் மகேந்திர சௌத்ரி விடுதலை செய்யப்பட்டிருப்பது குறித்து...?***

! சௌத்ரி பிழைத்தாலும் ஜனநாயகம் பிழைக்கவில்லை. சதி - மாற்றுச் சதி என்று இரட்டைக் கொலைக்கு உள்ளாகியிருக்கிறது!

● மணிப்புறா, திருச்சி - 8.

? ***இலக்கியம் சோறு போடுமா?***

! போடாது. அவ்வப்போது குடிக்க டீ கொடுக்கும்.

● பாலு, மதுரை - 1.

? ***பா.ம.க. தி.மு.க. அணியை விட்டு விலக ஏன் யோசிக்கிறது?***

! அ.தி.மு.க. அணியில் ஏற்கெனவே பட்ட அனுபவம்தான்


• வாக்குறுதி...


• வருமா...?


• விடுதலை...


• ...படுகொலை...!


• நாற்பது லட்சம் நன்மை!

நயக்கத்துக்குக் காரணம். பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக முடிந்து விடக்கூடாதல்லவா?

● ப. இராம்முருகன், சிவகங்கை.

? ஏழை மாணவர்களுக்கு விஜய்காந்த் நாற்பது லட்சம் ரூபாய் உதவி செய்துள்ளது பற்றி?

! மிக நல்ல காரியம். கூடவே தகுதி உள்ளவர்கள் பெறுகிறார்களா என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

● டி. பகபதி, ஊஞ்சவேலாம்பட்டி.

? இன்று சமூகத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கும் தீய சக்தி எது?

! ஜாதி-மத அரசியல்தான்.

● கலை அரசு, கோவைப்புதூர்.

? 1953க்கு முந்தைய அந்தஸ்து காஷ்மீருக்கு வேண்டும் என்று ஃபாரூக் அப்துல்லா கேட்கிறாரே...?

! அதிகச் சம்பளம் கேட்டு ஸ்ட்ரைக் செய்யத் தூண்டும் தொழிற்சங்கத் தலைவர்களைக் கேட்டுப் பாருங்கள்; ஆயிரம் கேட்டால்தான் முந்நூற்றைம்பதாவது கிடைக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். அது போல் தான் ஃபாரூக்கும் பேரத்தில் இறங்கியிருக்கிறார்!

● வைகை வளவன், மதுரை.

? அ.தி.மு.க.வில் ஓரங்கட்டப்பட்ட கண்ணப்பன் 'தமிழ் தேசம்' என்ற பெயரில் புதிதாகக் கட்சி தொடங்கப் போகிறாராமே? அண்ணாச்சி கரையேறுவாரா...?

! எடுத்த எடுப்பிலேயே ஜாதி பேர்லதானே அறிக்கை வருது... அவரும் கரையேற மாட்டார்; தமிழக அரசியலும் கரையேறாது.

● அஜார், தேனாம்பேட்டை.

? காவிரி நீர் தகராறுக்குக் காரணம் மொழி வாரி மாநிலம் அமைந்ததுதானா?

# பா.ம.க. விலக யோசிப்பது ஏன்...?

! இல்லை; அனுபவ பாத்தியதையை அங்கீகரிக்க மறுப்பதுதான்.

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை – 84.

? பா.ம.க. நடத்தும் நூறாவது அரசியல் மாநாடு அழைப்பிதழில், தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் பா.ம.க. பெயர்ப் பலகை இருப்பது போலவும் செங்கோட்டை கொடிக் கம்பத்தில் பா.ம.க. கொடி பறப்பது போலவும் அச்சிட்டுள்ளார்களே... இது தேசியக் கொடிக்கு அவமதிப்பு விளைவிக்கும் செயல் அல்லவா?

! தேசியக் கொடிக்கு மட்டுமின்றி நாட்டின் இறையாண்மைக்கும் அவமதிப்புதான். ஆனால் இது மாமியார் உடைத்த மண்குடமாயிற்றே!

● உமா ராஜகோபால், சென்னை – 34.

? நாம் ஏன் இந்த பூமியில் பிறந்திருக்கிறோம்...?

! அரசியல்வாதிகளால் ஆட்டிப் படைக்கப்படுவதற்குத் தான்!

● ஔவை ஏ.எஸ். யோகானந்தம், கலிங்கியம்.

? மிகவும் கேவலமாக நினைக்கும் 'குப்பை' மலை சரிந்து பிலிப்பைன்ஸில் நூறுக்கும் மேற்பட்டவர்கள் இறந்துள்ளது எதைக் குறிக்கிறது?

! பிலிப்பைன்ஸுக்குப் போவானேன். இங்கே, பம்பாயில் என்ன வாழ்ந்தது! பலத்த மழையில் நிலச்சரிவு ஏற்பட்டு எத்தனையோ பேருக்கு சமாதி கட்டி விட்டதே!

• முதல் கோணல்...




• 'பேரம்' அப்துல்லா!



மூன்று பெண்கள், மேடையில் மூன்று ஸ்டூல்கள் மீது நின்று கொண்டிருக்கிறார்கள். உதவியாளர்கள் ஆறு மூங்கில் தடிகளைக் கொண்டு வர, மிஸ்ரா, ஒவ்வொரு பெண் முன்பும் இரண்டு மூங்கில் தடிகளை நிற்க வைத்து, அவர்களின் கைகளை அந்த மூங்கிலின் மேல் பகுதியில் வைக்கிறார். பின்னணியில் இசை ஒலித்துக் கொண்டிருக்க, உதவியாளர்கள் அந்த மூன்று பெண்கள் நிற்கிற ஸ்டூல்களையும் பதவிசாக அப்புறப்படுத்துகிறார்கள். ஆச்சரியத்துடன் கண்கள் விரிய, மேடையையே பார்க்கிறது மொத்த அரங்கமும்.

மிஸ்ரா, நடுவில் நிற்கும் பெண் அருகே வந்து இரண்டு மூங்கில்





• மிஸ்ரா

களையும் எடுத்து விட, அடி ஆத்தி! தரைக்கு மேலே சுமார் ஒன்னரை அடி உயரத்தில் அந்தப் பெண் அந்தரத்தில் மிதக்கிறார்! மிஸ்ரா, அந்தப் பெண்ணின் தலைக்கு மேலாகவும், கால்களுக்குக் கீழாகவும் பெரிய கத்தி ஒன்றை இடது வலமாக அசைத்து, மேலும், கீழும் எந்த சப்போர்ட்டும் இல்லை என்று கூட்டத்துக்கு எடுத்துக்காட்டுகிறார்.

வாய் பிளக்கிறது அரங்கம். வாவ்!

சமீப காலத்தில் சென்னைக்கு வந்த எந்த பிரபல மேஜிக் நிபுணரும் இப்படி அந்தரத்தில் பெண்களை நிற்க வைத்து அசத்தியது இல்லை. ஆனால், இப்போது வந்திருக்கும் மிஸ்ரா செய்து காட்டுகிறார்!

மிஸ்ராவுக்கு வயது நாற்பத்து ஆறு. கோட்டயத்தைச் சேர்ந்தவர். கேரளாவின் பிரபல மேஜிக் நிபுணர்களில் ஒருவர். உலகமெங்கும் மூவாயிரத்துக்கும் அதிகமான மேஜிக் ஷோக்கள் நடத்தியவர்.

"மேஜிக் நிபுணராகும் ஆசை உங்களுக்கு எப்படி வந்தது?"

"நான் ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு மேஜிஷியன் பள்ளிக்கு வந்திருந்தார். அவரது மேஜிக் என்னை ரொம்ப ஆச்சரியப்படுத்தியது. அப்போதே எனக்குள்ளே மேஜிக் நிபுணர் ஆக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு விட்டது. பள்ளியிறுதி வகுப்பில் படித்தபோது, வைக்கம் என்கிற ஊரில் வசித்த 'கிச்சு' என்று பிரபலமாக அறியப்பட்ட கிருஷ்ணன் குட்டி நாயர் என்ற மேஜிக் நிபுணர் பற்றிக் கேள்விப்பட்டு, வீட்டில் யாருக்கும் தெரியாமல், அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அவர் ஒரு குறிப்பிட்ட நாளில் தம்மை வந்து சந்திக்கும்படி பதில் போட்டார்.

"என் அம்மாவிடம் மெதுவாக விஷயத்தைச் சொன்னேன். அப்பாவிடம் அனுமதி கிடைப்பது கஷ்டம் என்று தெரியும். எனவே, சொந்தக்காரர் ஒருவர் வீட்டுக்குப் போவதாகச் சொல்லிவிட்டு, வைக்கம் போனேன். ஒருநாள்

# அடி ஆத்தி! மிரக்குறாக!



அவருடன் தங்கினேன். மேஜிக் பற்றி விளக்கி விட்டு, சில ஐட்டங்கள் சொல்லிக் கொடுத்தார். பயிற்சிதான் மிக முக்கியம் என்றார்.

"ஊர் திரும்புகிறபோது, உறவுக்காரர் வீட்டில் தலையைக் காட்டி விட்டு, வீடு வந்து சேர்ந்தேன். அம்மா, என் சார்பில் அப்பாவிடம் பேசி அனுமதி வாங்கித் தர, மறுபடி இச்சு மாஸ்டரைச் சந்தித்தேன். என் ஆர்வத்தைப் புரிந்து கொண்டார். மேஜிக் சொல்லிக் கொடுத்தார்.

"வீட்டில் தனிமையில், கடுமையாகப் பயிற்சி செய்வேன். வீட்டுக்கு வருகிறவர்கள் விஷயம் கேள்விப்பட்டு, 'மந்திரவாதம் படிக்கிறாயாமே!' என்று கேட்பார்கள். ஒருசிலர் என்னை ஏதோ பில்லி சூனியக்காரன் போலப் பார்ப்பார்கள். ஒரு வருடம் கழித்து என் குரு இச்சு நாயரே, வைக்கத்தில் என் அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார். நிறைய பாராட்டுகள் கிடைத்தன."

**ம**றக்க முடியாத அனுபவங்கள் சில வற்றை நினைவுகூர்ந்தார் மிஸ்ரா :

- இரண்டு வருடங்களுக்கு முன்பு மாவட்ட கலெக்டர், உயர் போலீஸ் அதிகாரிகள், எம்.பி., எம்.எல்.ஏ.கள் முன்னிலையில், என்னை எழுபத்து ஐந்து அடி நீள சங்கிலியால் கட்டி, கைவிலங்கிட்டு ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள்ளே போட்டுப் பூட்டி, அந்தப் பெட்டியை கிரேன் மூலம் மேலே தூக்கிக் கொண்டு போய், கொழுந்து விட்டு எரியும் வைக்கோல் போரினுள் போட்டார்கள். சிறு காயமும் இல்லாமல் முப்பது விநாடிகளில் நான் பூட்டு, சங்கிலி, பெட்டி அனைத்திலும் இருந்து தப்பித்தேன். பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் நடந்தது இந்த பரபரப்பான நிகழ்ச்சி.
- பிரபல நடிகர் சுரேஷ் கோபி கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியில், அவரை மேடைக்கு அழைத்து கௌரவிக்கிறபோது, ஒரு துண்டுக் காகிதத்தை அவரிடம் கொடுத்து, ஏதாவது எழுதிக் கையெழுத்து போடும்படிச் சொன்னேன். அவர், எழுதி முடித்தபின் அந்தச் சீட்டை வேறு ஒருவரிடம் தந்தார். அந்த நபரிடம், சீட்டில் உள்ளதைப் படிக்கச் சொன்னேன். என் சொத்துக்கள் முழுவதையும் மேஜிக் நிபுணர் மிஸ்ராவுக்கு எழுதிக் கொடுத்து விடுகிறேன் என்று எழுதி, சுரேஷ் கோபி கையெழுத்திட்டிருப்பதாக அவர் படித்துச் சொன்னதும், கோபிக்கே ஷாக்! நான் 'மிஸ்ராவுக்கு நல் வாழ்த்துக்கள்' என்று எழுதித்தானே கையெழுத்திட்டேன். சொத்து பற்றி எழுதவில்லையே!' என்றார்.

ஆனால், அந்தச் சீட்டைக் காட்டி கையெழுத்து உங்களுடையதுதானே என்றபோது ஆமாம் என்று கூறினார். இது எப்படி நடந்தது என்று ரசிகர்களுக்கு மட்டுமில்லை; சுரேஷ்கோபிக்குக் கூட இன்று வரை குழப்பம்தான்! ஆனால் என்னைப் பொறுத்தவரை, அது ஒரு சிறு டிரிக்! அவ்வளவுதான்!

சந்திப்பு : **கௌதம்**

படங்கள் : **ஸ்ரீஹரி**

**ச**ன் டீ.வியின் 'வணக்கம் தமிழகம்' நிகழ்ச்சியில் கடந்த ஒரு மாதமாக உமா பத்மநாபனைக் காணவில்லை. என்ன ஆனார் திடீரென்று? மனத்துக்குள் மல்லுக் கட்டிய கேள்வியோடு அவர் வீட்டில் ஆஜரானோம்.

பெரிய பெரிய சூட்கேஸ்களும் பைகளும் வரவேற்பறையை அடைத்துக் கிடக்க, அமைதியாக உட்கார்ந்திருந்த உமா "லண்டனிலிருந்து இன்னிக்குத் தான் வந்தேன்'' என்றார்

# "லண்டனுக்குப் போய் ஏராளம் செய்ப்பாடு கற்றேன்!"



இலேசாகப் புன்னகைத்தபடி!

லண்டன்...?

"ஆமா... சன் டீவி ஐரோப்பிய தமிழ்ப் பார்வையாளர்களுக்காக 'தீபம்'ங்கற இருபத்தி நான்கு மணிநேர தமிழ்ச்சானலை அங்க ஆரம்பிச்சிருக்கு. இங்கிருந்து ஒருத்தர் அங்க போய் பயிற்சி கொடுத்தா நல்லாயிருக்கும்னு நினைச்சு என்னை அங்க அனுப்பினாங்க. நிகழ்ச்சி தயாரிப்பிலேர்ந்து எல்லா விஷயத்துலயும் அவங்களுக்கு ஒரு மாதம் பயிற்சி கொடுத்துட்டு வந்தேன்'' என்றவர் சிறிது நேர மௌனத்திற்குப் பின் தொடர்ந்தார்.

"அங்க இருக்கிற தமிழர்கள் எல்லாத்தையும் ரொம்ப உன்னிப்பா கவனிக்கறாங்க தெரியுமா? 'உங்களுக்குப் பிடிச்ச பாட்டு', 'உங்கள் விருப்பம்' மாதிரியான நிகழ்ச்சி தொடங்கிய பத்து நிமிஷத்துல டென்மார்க், ஹாலந்துலயிருந்தெல்லாம் ஏகப்பட்ட ஃபேக்ஸ், தொலைபேசி அழைப்புகள்! எல்லாரும் ரொம்ப ஆர்வமா இருக்காங்க'' என்றவரிடம் "சன் டீ.வி. அங்க ஏற்கெனவே ஒரு சானல் ஆரம்பிச்சிருந்ததே?'' என்றோம்.

"அது முழுநேர சானல் இல்லை. சும்மா இரண்டு மூன்று மணி நேரம் மட்டும் போய்ட்டிருந்தது. இப்பத்தான் இருபத்தி நான்கு மணி நேர சானலா மாத்தியிருக்காங்க'' என்றவர் லண்டன் ஈஸ்ட்ஹாம்

# உமா பத்மநாபன்

பகுதியில் நம்மூர் சமோசாவையும், லட்டையும் சாப்பிட்டதை சிலாகித்துச் சொல்கிறார்:

''அந்தப் பகுதி பூராவும் நம்மூர்





கடைகள்தான் ஜாஸ்தி. அதைப் பார்த்ததும் ஒரு நிமிஷம் ஆடிப்போய்ட்டேன். இருபது நாளா இட்லி, பூரி, சமோசா ஐட்டங்களைத் தொடாம இருந்துட்டு திடீர்னு அதைப் பார்த்ததும் தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள பாசம் மாதிரி அப்படி ஒரு ஈர்ப்பு. ரெண்டு பிளேட் சமோசா சாப்பிட்டேன்!

அப்புறம் லண்டனுக்குப் புதுசா போற ஒருத்தர், யாரோட துணையும் இல்லாம எங்க வேணாலும் சரியா போயிடலாம். எல்லாருக்கும் ஒரு சார்ட் மாதிரி கொடுத்திடறாங்க. அதை வச்சுகிட்டே பூமிக்கு அடியில போகிற ரயில்ல போய் ஜாலியா தனியா சுத்தினேன். ஒரு ஷாப்பிங் ஹாலுக்குப் போயிட்டு திரும்பி வரும்போது 'ஹாய் உமா'ன்னு ஒரு குரல். திரும்பிப் பார்த்தா ஒரு குடும்பமே நின்னு கை நீட்டுது கைகுலுக்க. நான் அதிர்ச்சியாகி 'நீங்க...'னு கேட்டா... 'தமிழர்கள்'னு பதில். ''டீ.வியில் உங்களைப் பார்க்கிறோம். நல்லா பண்றீங்க. இங்க எப்படின்னாங்க. அப்புறம் நான் அங்க போன கதையை அவங்ககிட்ட விளக்கிட்டு வந்தேன். எவ்வளவோ தூரப் பிரதேசத்துக்குப் போனாலும் அங்கயும் நம்மை அடையாளம் தெரிஞ்சுக்கறாங்கங்கற சந்தோஷம் மனத்தை நிறைக்குது'' என்றவர், சின்னதாய் மூச்சு விட்டுவிட்டு ''ஏழாம் வாய்ப்பாடு இப்ப எனக்கு அத்துப்படி தெரியுமா?'' என்றார் ஏழால் எதையோ பெருக்கிக் கொண்டே!

"ஆமாங்க... அவங்க பணம் ஒரு பவுண்டுக்கு, எழுபது ரூபாய் இந்திய பணம். எந்தக் கடைக்குப் போனாலும் ஏழால பெருக்கிப் பெருக்கிப் பார்த்து வாங்கி, இப்ப ஏழாம் வாய்ப்பாடு நல்லா மனப்பாடமாகிவிட்டது.


''அப்புறம் வாக்ஸ் மியூஸியம் பத்திச் சொல்லாம இருந்துட்டேனே. உயிரோட்டமா இருக்கிற அந்த மெழுகுப் பொம்மைகளைப் பார்த்துட்டு வெளியே வந்தா, வீதியில நடக்கிற எல்லா மனுஷங்களும் மெழுகு பொம்மை மாதிரியே தெரியறாங்க!'' என்றார் மெழுகு பொம்மைகளுடன் தாம் எடுத்துக் கொண்ட புகைப்படங்களைக் காட்டியபடி!

"சரிங்க 'வணக்கம் தமிழகம்' நிகழ்ச்சில தினமும் ஒரே மாதிரியான கேள்விகள்... போரடிக்கலையா!''

"என்னங்க இப்படிக் கேட்டுட்டீங்க. ஒவ்வொரு நாளும் புதுப்புது மனிதர்களைச் சந்திக்கிறோம். ஒவ்வொருத்தர்ட்டயும் நிறைய விஷயங்கள் இருக்கு. அதை கவனிச்சு கேள்வி கேட்கிறேன். ஒரே கேள்வியைப் பத்து பேர்ட்ட கேட்டா பத்துவிதமான பதில்கள் கிடைக்குது. புது விஷயங்களைச் சொல்றது, தெரிஞ்சுக்கிறது நல்லதுதானே?''என்றார், சமாளிப்புத் திலகம் நல்லதம்பியின் ஒன்று விட்ட டீவி தங்கையாக.


— ஏக்ஜி

# நடக்குமென்பார்...




**மேஷம்** : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

வார ஆரம்பத்துல சின்னச் சின்ன பிரச்னைகள் இருக்கும். நண்பர்கள் உதவ வருவாங்க. வெளிநாட்டுத் தொடர்பால நன்மை ஏற்படும். ரொம்ப நாளா தள்ளிப் போன காரியம் இப்ப நிறைவேற சான்ஸ் இருக்கு. பண வரவுக்குப் பிரச்னையில்லை. சொத்துக்கள் விஷயமா பிரச்னை ஏற்படலாம். ஜாக்கிரதையா இருங்க. எதிரிகள் ஓடி ஒளிவாங்க. கோர்ட் வழக்கு விவகாரங்கள்ல கவனமா இருங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல முன்னேற்றம் இருக்கு. அரசியல்வாதிகளுக்கு நல்ல நேரம் இது. புகழ் கூடும்.




**ரிஷபம்** : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

இந்த வாரம் எதை செஞ்சாலும் வெற்றிதான். இருந்தாலும் அலைச்சலைத் தவிர்க்க முடியாது. உடல் நலத்துல கவனம் வைங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கு. அப்பாவால மருத்துவச் செலவு ஏற்பட வாய்ப்பிருக்கு. கவனமா இருங்க. ஓவியர்கள், சிற்பிகள், புகழ், பாராட்டுப் பெறுவாங்க. அரசியல்வாதிகளுக்கு மதிப்பு உயரும். வெளியூர் போறதா இருந்தா கண்டிப்பா போங்க. அந்த பயணத்தால உங்களுக்கு ஒரு யோகம் இருக்கு. இருந்தாலும் எச்சரிக்கையா பயணம் செய்யுங்க. வெளிநாட்டுலயிருந்து நல்ல சேதி வரலாம்.




**மிதுனம்** : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

பிரச்னைகள், சோதனைகள் தான் இந்த வாரமும். எதையும் பக்குவமா சமாளிக்க வேண்டியது அவசியம். பொருளாதாரம் திருப்தியா இருக்காது. திடீர் பணப் பிரச்னை வரும். எதிர்பாராத செலவும் வந்து டென்ஷனாக்கும். பயணத்தைத் தவிர்த்திடுங்க. அவசரம் பதட்டத்தைத் தவிர்த்துடுங்க. பேச்சில நிதானம் அவசியம். உடல் நலத்துல கவனம் வைங்க. உஷ்ண சம்மந்தமான நோய்கள் வரலாம். கலைத்துறையைச் சேர்ந்தவங்க முன்னேற்றமடைவாங்க.



**கடகம்** : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

இந்த வாரம் நீங்க அழகா தெரிவீங்க. திறமை கூடும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. கொடுக்கல் வாங்கல்ல ஆதாயம் இருக்கு. புதுசா ட்ரெஸ், நகைகள் வாங்குவீங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு வளர்ச்சி இருக்கு. வெளிநாட்டுத் தொடர்பால ஆதாயம் இருக்கு. பயணத்துல எச்சரிக்கை அவசியம். சின்ன விபத்து வர்ற வாய்ப்பிருக்கு. எதிலயும் அவசரப்படாதீங்க. உடன் பிறந்தவங்களால பிரச்னை வரலாம். அடக்கி வாசிக்கறது நல்லது. அரசியல்வாதிகள் கொஞ்சம் உஷாரா இருக்கறது நல்லது.



**சிம்மம்** : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்களோட அந்தஸ்து, மதிப்பு உயரும். எந்தக் காரியத்துல இறங்கினாலும் எப்பாடுபட்டாவது முடிச்சிருவீங்க. அரசியல்வாதிகள் எச்சரிக்கையா இருக்கறது அவசியம். குடும்பத்துல மகிழ்ச்சி நிலவும். ஜாலிக்குக் குறைவிருக்காது. நண்பர்களால உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்துல கவனமா இருங்க. பத்திரிகைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு இது நல்ல நேரம். வெளிநாட்டுல இருந்து நல்ல தகவல் ஒண்ணு வரலாம். கவர்ன்மென்ட்ல வேலை பார்க்கிறவங்க எச்சரிக்கையா இருந்தா மேலதிகாரிங்ககிட்ட திட்டுப்படாம தப்பலாம்.



**கன்னி** : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

உங்களோட திட்டங்கள் எல்லாம் நிறைவேறும். அரசியல்வாதிகளோட மதிப்பு மரியாதை இந்த வாரம் தூள் பறக்கும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. திடீர் அதிர்ஷ்டத்துக்கும் வாய்ப்பிருக்கு. எதிரிகள் விலகிப் போடுவாங்க. வெளிநாட்டுல இருந்த நல்ல தகவல் வந்து கதவைத் தட்டலாம். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு மாமூலான பலன்ல மாற்றம் இல்லை.

**அக்னிசர்மா பக்கம்**

# நடக்கும்!

**துலாம் :** (சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)

இந்த வாரம் கவனமாவே இருங்க. சின்னச் சின்ன சங்கடங்கள் ஏற்படலாம். உடல்நலன்ல கவனம் தேவை. பணக் கஷ்டம் முழுசா தீராது. பணம் கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கை அவசியம். மக்கள் நலன்ல கவனம் தேவை. கருத்து வேறுபாடு வரலாம். பொறுமை, சகிப்புத் தன்மை கண்டிப்பா வேணும். கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்குத் தங்கள் துறையில பிரச்னைகள் எட்டிப் பார்க்கும்.

**கும்ப ராசிக்காரரான எழுத்தாளர் பத்மா ரவிசங்கருக்கு வெளிநாட்டுத் தொடர்பு உண்டா? இருந்தா, ஏதோ ஒரு அதிர்ஷ்டம் அடிக்கப் போகுது!**



**விருச்சிகம் :** (விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

அறிவாற்றல் பளிச்சிடும். முகம் அழகா தெரியும். நல்லவங்க பக்கபலமா இருப்பாங்க. வீட்ல மகிழ்ச்சி வழிந்து ஓடும். எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்களுக்கெல்லாம் நல்ல நேரம் இது. திடீர் அதிர்ஷ்டம் அடிக்கலாம். வெளிநாட்டுலயிருந்து நல்ல செய்தி வரலாம். கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் பாராட்டு கிடைக்கும். பயணத்தைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு :** (மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)

வீட்ல ஏதாவது ஒரு பிரச்னை வந்துட்டே இருக்கும். வாயை அடக்கி மௌனம் காப்பது நல்லது. பண விஷயத்துல எச்சரிக்கை அவசியம். வீண் பழி உங்க மேல வந்து விழ சான்ஸ் இருக்கு. கவனமா இருங்க. வேறு மொழிக்காரங்ககிட்ட எச்சரிக்கையா பழகறது அவசியம். எதிலயும் உணர்ச்சி வசப்படக் கூடாது. பயணத்தைத் தவர்த்துடறது நல்லது. கண்டதை சாப்பிட்டு உடலைக் கெடுத்துக்காதீங்க.

**மகரம் :** (உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)

உங்க திறமை வெளிப்படற நேரம் இது. பண நடமாட்டத்துக்குப் பிரச்னை இல்லை. எதிர்ப்புகள் இருக்காது. எதிரிகள் விலகி ஓடுவாங்க. வாழ்க்கைத் துணை நலத்துலக் கவனம் தேவை. புதிய முயற்சிகள் கைக்கூடி வரும். எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்களுக்கு நல்ல முன்னேற்றம் இருக்கு. கணவன் மனைவிக்குள்ள சின்னச் சின்ன சண்டைகள் வரலாம். விட்டுக் கொடுத்துப் போறது நல்லது.

**கும்பம் :** (அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)

அலைச்சல் அதிகமாகும். மக்கள் நலத்துல கவனம் அவசியம். உங்களோட எந்த முயற்சியும் வீண் போகாது. எதிரிங்க அடங்கிப் போவாங்க. பொருளாதார விஷயத்துல எச்சரிக்கை அவசியம். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடறது நல்லது. வெளிநாட்டுத் தொடர்பால ஆதாயம் கிடைக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்க விழிப்புடன் செயல்பட வேண்டியது அவசியம். எதிலயும் அவசரப்படாம இருங்க.

**மீனம் :** (பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

உங்கள் அறிவாற்றல் கூடும். அழகா தெரிவீங்க. புதுசா ட்ரெஸ், நகைகள் வாங்க சான்ஸ் இருக்கு. விளையாட்டு, கேளிக்கை விஷயங்கள்ல ஈடுபாடு கூடும். பயணத்தால பயன் பெறுவீங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்க வெற்றி நடை போடுவாங்க. கொடுக்கல் வாங்கல் விஷயத்துல எச்சரிக்கை அவசியம்.

**ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 1 வரை**

வி. ராஜகோபாலன்

# ஆங்கிலம்

சமீபத்துல நான் வெளியூர் போயிருந்தபோது அங்கே ஒரு கடையில் வைத்திருந்த போர்டு, அதில் எழுதியிருந்த வாசகம் என்னை மிகவும் கவர்ந்தது.

"Be good and do good" – நல்லவனாக இரு, நல்லதையே செய். எவ்வளவு அர்த்தமுள்ள அழகிய வாக்கியம். ஆனால் நடைமுறையில் இது சாத்தியம்தானா என்று நான் சிந்தித்துக் கொண்டிருந்தபோது அறிஞர் பெர்னார்ட் ஷா அவர்கள் கூறிய வாசகம் நினைவுக்கு வந்தது. "It is too bad to be too good" நல்லவனாக இருப்பது நல்லதுதான். ஆனால் மிகவும் நல்லவனாக இருப்பது மிகவும் தவறு. உண்மை தான் அல்லவா? சரி, விஷயத்துக்கு வரலாம்.

Be good என்றால் நல்லவனாக இரு. Do good என்றால் நல்லதையே செய்.

ஒரு வேலையைச் செய் என்று உத்தரவிட 'do' என்ற வார்த்தையை 'use' பண்ணலாம்.

Do the homework

வீட்டுப் பாடங்களைச் செய்.

Do it fast – வேகமாகச் செய்.




**நோ 'ly' ப்ளீஸ்**

Slow என்பதுடன் 'ly' சேர்த்து slowlyன்னு சொல்லலாம்.

Clever என்பதுடன் ly சேர்த்து Cleverlyன்னு சொல்லலாம். ஆனா fast கூட ly சேர்த்து fastlyன்னு சொல்லக்கூடாது.

அந்த டிரெயின் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது என்பதை 'The train was running fast' என்று சொன்னால் போதும்.

'Fast' உடன் ly சேர்த்து fastlyன்னு சொல்லாதீங்க.

சரி, இப்பொழுது ஒரு செயலைச் செய்யுமாறு மற்றவர்களுக்கு உத்தரவிடுவது எப்படி என்பதைப் பார்க்கலாமா?

ஏம்பா, போன் எவ்வளவு நேரமா அடிச்சிக்கிட்டிருக்கு. எடுத்து யாருன்னு பாரு.

'போனை எடுங்க'ன்னு சொல்லும்போது அவசரப்பட்டு 'take the phone' ன்னு சொல்லிடாதீங்க.


'Attend to the phone'ன்னு சொல்லுங்க. இது போல உத்தரவு போட்டா யாரும் கேட்க மாட்டாங்கன்னு நீங்க நெனச்சா pleaseங்கற வார்த்தையைச் சேர்த்து 'please attend to the phone'ன்னு சொல்லுங்க; அல்லது "Please answer the phone...


- 'எல்லாம் தாறுமாறாக் கெடக்கு, எல்லாத்தையும் ஒழுங்கா அடுக்கி வை' – இதை 'Arrange them in order' ன்னு சொல்லுங்க.
- 'ஸார், இதைப் பத்தி எனக்கு ஒன்னும் தெரியாது. தயவு செஞ்சு மானேஜர்கிட்ட கேளுங்க – இதை 'please ask the manager'ன்னு சொல்லலாம்.
- ஏய்... அசிங்கமா மூக்கை உறிஞ்சிக்கிட்டு நிக்காதே. மொதல்ல போய் மூக்கைச் சிந்திட்டு வா. இதை இங்கிலீஷ்ல எப்படிச் சொல்வீங்க? மூக்கைச் சிந்தறதா...? இதை எப்படிச் சொல்றது? பேசாம தமிழ்லயே சொல்லிடலாமேன்னு நெனக்கிறீங்களா?

இங்கிலீஷ்ல பேசணும்னு தீர்மானிச்சுட்டீங்க. கொஞ்சம் try பண்ணிப் பாருங்க. ரொம்ப simple. 'Blow your nose'ன்னு சொல்லுங்க.

'Go and blow your nose' – போய்

# அருகில் வா!



மூக்கைச் சிந்திட்டு வா. சரி மூக்கை சிந்தியாச்சு. அப்புறமா?

❑ அதான் கரண்ட் வந்துடுச்சுல்ல. எதுக்கு wasteஆ மெழுகுவத்தி எரிஞ்சுக்கிட்டிருக்கு. அதை அணைச்சுடு - இதை Blow out the candle'ன்னு சொல்லலாம். இதையே 'put out the candleன்னும் சொல்லலாம். Blow out the candleன்னா மெழுகுவத்தியை ஊதி அணைச்சுடுன்னு அர்த்தம்.

சரி put out the candleன்னு சொல்றீங்களே, putன்னா 'வை'ன்னுதானே அர்த்தம். இதைப் போய் 'அணை'ன்னு சொல்றீங்களே, இது சரிதானான்னு நீங்க கேட்கலாம்.

இந்த putங்கற வார்த்தையை பல அர்த்தங்கள்ல use பண்ணலாம்.

ஒவ்வொண்ணாச் சொல்றேன். கவனமா கேளுங்க. பொதுவா இந்த 'put'ங்கற வார்த்தைக்கு வை, போடு-ங்கற அர்த்தம் உண்டு.

Put it thereன்னா அதை அங்கே வைன்னு அர்த்தம்.

Put some powderன்னா கொஞ்சம் powder போடுன்னு அர்த்தம். ஆனா, இந்த put பக்கத்துல நாம use பண்ற வார்த்தையைப் பொறுத்து இதன் அர்த்தம் மாறும்.

Putன்னா வை. ஆனா put பக்கத்துல upங்கற வார்த்தையைச் சேர்த்தா இதன் அர்த்தம் மொத்தமா மாறிடும்.

Putupன்னா stay அதாவது 'ஒரு எடத்துல தாற்காலிகமா தங்கு'ன்னு அர்த்தம்.

We can put up at a hotel for 2 days. நாம் இரண்டு நாட்கள் ஒரு ஓட்டலில் தங்கலாம்.

இதே போல உங்க ஆபீஸ் மானேஜர் 'Put up the file immediately'ன்னு சத்தம் போடுறார். இதன் அர்த்தம் என்ன?

யோசிச்சு வையுங்க.

அடுத்த வாரம் பார்க்கலாம்.

(தொடரும்)



# கூடி வாழ்ந்தால் 'கோடி' கொள்ளை

**ம**துபானக் கடைகள் ஏலமாகட்டும், புறம்போக்கு நிலங்களை வளைப்பதில் ஆகட்டும், சர்வ கட்சிப் பிரமுகர்களும் இணைந்து செயல்படுகிறார்கள். சமீப காலமாக மிகத் தந்திரமாகச் செயல்பட்டு மற்றவர்களுக்குச் சொந்தமான நிலங்களையும் 'கபளீகரம்' செய்து பாக்கெட்டை நிரப்பிக் கொள்கிறார்கள் இவர்கள். அதுவும், சென்னையை ஒட்டியுள்ள திருவொற்றியூர் பகுதியில் 'சர்வ கட்சி' கொள்ளைக் கூட்டணி "நிலப்பறிப்பில்" மிக மும்முரமாகச் செயல்பட்டு வருகிறது. நமது கவனத்துக்கு வந்த சம்பவம் இதோ:

**தீ**ப்பெட்டி தயாரிப்பு நிறுவனமான விம்கோவுக்குச் சொந்தமாக மூன்று ஏக்கர் நிலம் திருவொற்றியூர் பகுதியில் இருக்கிறது. அந்த நிலத்தை விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தி வந்தது விம்கோ. அவ்வப்போது உள்ளூர் பள்ளிக்கூடங்கள், கிரிக்கெட், ஃபுட்பால் கிளப்புகள் அந்த மைதானத்தை விம்கோ நிறுவனத்தின் அனுமதி பெற்று உபயோகித்துக் கொள்ளும்.

இந்த நிலத்தை விற்று தொழிற்சாலையை நவீனமயமாக்க நிர்வாகம் முடிவு செய்தது.

சென்னையைச் சேர்ந்த பியாரிலால் ஜெயின் மற்றும் வேறு சிலருக்கும் நிலத்தை விற்க ஒப்பந்தம் தயாரானது. நிலத்தை வாங்கி முன்பணம் கொடுத்து ஒப்பந்தம் போட்டவர்கள், நிலத்தில் பிளாட் போட முயன்ற போதுதான் சிக்கல் எழுந்தது. திருவொற்றியூர் பகுதியில் உள்ள சர்வகட்சிப் பிரமுகர்களும், 'மக்களை'த் (கட்சிப் பிரமுகர்களை) திரட்டிக் கொண்டு வந்து, "மக்களுக்காகப் பயன்பட்டுக் கொண்டிருக்கும் இந்த விளையாட்டு மைதானத்தை விம்கோ நிறுவனம் யாருக்கும் விற்கக் கூடாது; அரசுக்கே கொடுக்க வேண்டும்" என்று விஷயத்தை ஊதிப் பெரிதாக்கினார்கள். சட்டம் - ஒழுங்கு பிரச்னையாக இதனைக் கிளப்பி விட்டனர். நிலத்தை விற்றவர்களுக்கும், வாங்கியவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. இப்போது அவர்கள் போலீஸ் ஸ்டேஷன், கலெக்டர் அலுவலகம் என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள்.


"இந்தக் கட்சிப் பிரமுகர்களின் நோக்கம் மக்களுக்காக விளையாட்டு மைதானத்தைப் போராடிப் பெறுவதல்ல! இந்தக் காலி மைதானத்தில் குடிசைகள் போட ஏற்பாடு செய்து, அதை முழுவதுமாக ஆக்ரமித்துக் காசு பண்ணுவதுதான்!" என்கிறார்கள் விம்கோ நிறுவனத்தினர்.

**இ**தே சர்வகட்சிக் கொள்ளை கூட்டணி, மற்றொரு பிரபல நிறுவனமான ஈசன் இன்ஜினியரிங் கம்பெனிக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் நிலத்தை முன்னதாக ஆக்ரமிப்பு செய்ததைக் குறிப்பிடுகிறார்கள் இவர்கள்.

"எங்களுக்குச் சொந்தமான நிலத்தில் ஆக்கிரமிப்பு இருந்தது. அதை அகற்ற நாங்கள் முயன்றபோது, யாரோ ஒரு நபர் அந்த நிலத்தைத் தாம் வாங்கியுள்ளதாக போலி பத்திரம் ஒன்றைக் காண்பித்து எங்கள் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டார். அது மட்டுமல்லாமல் அந்தப் பத்திரத்தை வைத்து வழக்கும் தாக்கல் செய்தார்.

உடனே போலீஸ், 'இது சிவில் மேட்டர்; நாங்கள் தலையிட முடியாது; நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுங்கள்'

என்று கையைக் கழுவி விட்டது. ஆக்ர மிப்பாளர்களுக்கு மிகவும் வசதியாகப் போய் விட்டது. கோர்ட் தீர்ப்பு தள்ளிப் போவதால் ஏற்படும் கால இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு கட்சிப் பிரமுகர்கள் அந்த இடத்தை 'பிளாட்' போட்டுக் காசு பண்ணி விட்டார்கள். இனிமேல் கோர்ட் தீர்ப்பு எங்கள் பக்கம் வந்



தால் கூட, அங்கு செட்டில் ஆகி விட்டவர்களை காலி செய்யச் சொல்வது என்பது மிகப் பெரிய பிரச்னையாக இருக்கும்'' என்கிறார்கள் ஈசன் இன்ஜீனியரிங் நிறுவனத்தினர்.

"இதுபோன்ற பிரச்னையை உடனுக்குடன் பார்த்துத், தீர்ப்பளிக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் வழங்கப்பட வேண்டும்'' என்கிறார்கள் அவர்கள். பிரச்னையில் சிக்கியிருக்கும் இவர்களது நிலத்தின் மதிப்பு ஐந்து கோடி!

இந்த நிறுவனத்தின் நிலத்தைக் கொள்ளையடித்த மமதையில் விம்கோ நிலத்திலும் தங்கள் கைவரிசையைக் காட்ட முயல்கிறார்கள் கட்சிப் பிரமுகர்கள்.

இந்த சர்வகட்சிக் கொள்ளை கூட்டணியைப் பற்றி கட்சி மேலிடங்களுக்குப் புகார்கள் அனுப்பியும் எந்தப் பலனும் இல்லையாம்.

அதுவும் குறிப்பாக ஆளும் தி.மு.க. பிரமுகர்கள், "நீங்க கலைஞரிடம் கூட 'போட்டுக்' கொடுங்கள்; எங்களை ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் தன்னிச்சையாகச் செயல்பட கட்சி எங்களுக்கு சுயாட்சி வழங்கியிருக்கிறது'' என்று அதிகாரத் தொனியுடன் சொல்கிறார்களாம்!

கலைஞருக்கு ஒரு எதிர்க்கட்சி சொந்தக் கட்சியிலேயே உருவாகிக் கொண்டிருக்கிறது!

— கௌசி

காச் மூச்

# பதிலென்ன பாலசேகரன்?

**சி**ல நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்க்கும்போது எனக்குள் ஏற்படுவது கோபமா, வருத்தமா என்று சட்டென்று முடிவு செய்ய முடியாமல் போய் விடுகிறது.

1980களில் வெளியான இயக்குநர் கே. பாலசந்தர் அவர்களின் 'அச்சமில்லை அச்சமில்லை' படத்தில் நான் ஒரு பாட்டு எழுதியிருந்தேன். 'கையில காசு வாயில தோசை' என்று அரசியல் அங்கதத்துடன் அமைந்த அந்தப் பாட்டு மிகவும் பிரபலமானது. எல்லா இடங்களிலும், டீக் கடைகள் உட்பட மக்கள் கூடும் இடங்களில் அந்தப் பாட்டு ஒலிபரப்பப்பட்டு புகழ்பெற்றது. அதை நம்மூர் வானொலி 'ஒலிபரப்ப முடியாது' என்று சொல்லி விட்டது. அதில் அரசியல் வாடை இருப்பதாக முடிவு செய்து அந்தப் பாட்டை ஒலிபரப்பவில்லை.



* கவிஞர் ஈரோடு தமிழன்பன்

ஆனால் இதே பாட்டை டெல்லி அகில இந்திய வானொலி நிலையத்தில் ஒரு தமிழ் நிகழ்ச்சியில் ஒலிபரப்பியதாக அப்போது டெல்லியில் பணியாற்றி வந்த என் நண்பர் பால இரமணி தெரிவித்தார்.

ஒரே பாடல்... சென்னை வானொலி ஒலிபரப்பாது... ஆனால் டெல்லி வானொலி நிலையம் ஒலிபரப்பும். மத்திய அரசாங்க விதி மாநிலத்துக்கு மாநிலம் மாறுகிற விசித்திரத்தை நினைக்கும்போது கோபம் வராமல் என்ன செய்யும்?

கே. பாலசந்தர் அவர்களின் குருகுலத்தில் வளர்ந்து இயக்குநரான பாலசேகரன் தன் படம் ஒன்றுக்கு நான் பாடல் எழுத வேண்டும் என்று தன் உதவியாளர் ஒருவர் மூலம் என்னை அணுகினார்.

பின்னர் நானே பாலசேகரனுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பாடல் காட்சி பற்றிய விவரங்களைத் தெளிவாகக் கேட்டு ஒரு பாடலை எழுதிக் கொடுத்தேன். அது மிகவும் பிடித்துப் போயிற்று அவருக்கு.

"பாடல் பிரமாதம்... பாடல் பதிவின்போது சில மாற்றங்கள் தேவைப் பட்டால் செய்து தருவீர்களா?" என்று கேட்டார்.

'செய்து தருகிறேன்.... சொல்லியனுப்புங்கள்' என்றேன். இன்றுவரை சொல்லியனுப்பவில்லை. அந்த என் பாடல் பயன்படுத்தப்படவும் இல்லை.

பாடல் எழுத வாய்ப்புக் கேட்டு நான் அவரிடம் அலையவில்லை. அவரே வந்து கேட்டார். தந்தேன். நன்றாக இருக்கிறது என்று சொல்லிவிட்டு, 'மாற்றம் தேவையானால் செய்து தருவேன்' என்ற என் உறுதி மொழியையும் பெற்றுக்கொண்டு அது பற்றி எதையுமே சொல்லவில்லையென்றால் அது ஒரு கவிஞனுக்கு இழைக்கும் அநீதி ஆகாதா? இத்தகைய அநீதிகள் என்னை ரொம்பவும் வருத்தப்படச் செய்கின்றன.

அதைக் கோபம் என்று குறிப்பிட்டாலும் தப்பில்லை.

**- ராணிமைந்தன்**

**சுஷ்ருதா பிளாஸ்டிக் மற்றும் காஸ்மெடிக் சர்ஜரி சென்டர்**

MAKING QUALITY CARE AFFORDABLE

# ஹண்டே மருத்துவமனை

பொது அறுவை சிகிச்சை, காஸ்ட்ரோ என்ட்ராலஜி அறுவை சிகிச்சை, மார்பக அறுவை சிகிச்சை, லேப்ராஸ்கோபி அறுவை சிகிச்சை (பித்தப்பை கல் நீக்கம், குடல்வால் நீக்கம்), பிளாஸ்டிக் மற்றும் காஸ்மெடிக் அறுவை சிகிச்சை (லிப்போசக்ஷன் உள்பட).

44, லட்சுமி டாக்கீஸ் சாலை, ஷெனாய் நகர், சென்னை – 600 030.
போன்: 6442517, 6449422, 6447538

# ஹண்டே நர்ஸிங் ஹோம்

97 & 98, இன்னர் ரிங் ரோட், ஜாபர்கான் பேட்,
சென்னை – 600 083.
போன்: 4853290 E-mail hande @ md2.vsnl.net.in


- லிப்போ சக்ஷன் (கொழுப்பை உறிஞ்சி எடுத்தல்)
- கைனே கோமஸ்டியா (ஆண்களுக்கு பெண்களைப் போல் மார்பகம் இருத்தல்)
- ரைனோ பிளாஸ்டி (மூக்கை மாற்றியமைத்தல்)
- முடி மாற்றியமைத்தல் (Hair transplanation)
- பெண்களுக்கு மார்பகங்களை பெரிதுபடுத்துதல்
- மார்பகங்களை குறைத்தல்
- முகத்தை அழகுபடுத்துதல்
- உதடுகளை சரிபடுத்துதல்
- யானைக்கால் வியாதிக்கு அறுவை சிகிச்சை
- கைகள் அறுவை சிகிச்சை
- தீப்புண் அறுவை சிகிச்சை
- புற்று நோய் அறுவை சிகிச்சை
- ரீ கன்ஸ்ட்ரக்டிவ் சர்ஜரி
- மேக்ஸிலோ பேஷியல் சர்ஜரி

# கைனே கோமஸ்டியா

(ஆண்களுக்கு பெண்களைப் போல் மார்பகம் இருத்தல்)



அறுவை சிகிச்சைக்கு முன்



அறுவை சிகிச்சைக்கு பின்
(லிப்போசக்ஷன் மூலம்)

**வளமிலை புடமாகும் மானுடம்**
**சதசியம தரிசிக்க சாதனை நூல்கள்**

| | | |
|---|---|---|
| மந்திர சக்தியும் யந்த்ர பூஜைகளும் | ரூ. | 22.00 |
| மந்திர சித்தி பெற மகத்தான வழிகள் | ரூ. | 22.00 |
| சர்வமும் சித்தியாகும் மந்திரங்கள் | ரூ. | 22.00 |
| நிம்மதியான வாழ்வு பெற மந்திரங்கள் | ரூ. | 23.00 |
| வறுமை கடன் நோய் விலக மந்திரங்கள் | ரூ. | 18.00 |
| மலையாள மந்திரமும் யந்த்ரங்களும் | ரூ. | 22.00 |
| சித்தர்களின் சிறந்த மந்திரங்கள் | ரூ. | 20.00 |
| வளமுடன் வாழ 108 மந்திரங்கள் | ரூ. | 12.00 |
| குபேர சம்பத்து தரும் சக்கரங்கள் | ரூ. | 15.00 |
| வியாபாரம் தொழில் பெருக மந்திரங்கள் | ரூ. | 22.00 |
| வாழ்க்கையில் வெற்றிபெற மந்திரங்கள் | ரூ. | 23.00 |
| நினைத்ததை நிறைவேற்றும் மந்திரங்கள் | ரூ. | 22.00 |
| கேட்டவரம் கிடைக்கும் மந்திரங்கள் | ரூ. | 25.00 |
| மந்திரமும் யந்த்ரமும் தகடுகளும் | ரூ. | 22.00 |
| ஆயுள் விருத்தியாகும் மந்திரங்கள் | ரூ. | 32.00 |
| க்ஷேத்திர தரிசனங்களும் பலன்களும் | ரூ. | 24.00 |
| வழிபாட்டுச் சடங்குகளும் பலன்களும் | ரூ. | 21.00 |
| பண்டிகைகளும் பலன்களும் | ரூ. | 20.00 |

வி.பி.பியில் பெற கடிதம் எழுதுங்கள் :

**யமுனா பிரசுரம்,**
18/1, ராஜாபாதர் தெரு,
தி. நகர்,
சென்னை – 600 017.
தொலைபேசி : 8241 865.



ஜய் ஸ்ரீராம்

ஸ்ரீமத் உபாசகர் ஸ்வாமி **கண்ணன்** பட்டாச்சார்யா அவர்களின் அருளாசியுடன் நீங்கள் எதிர்பார்த்த கீழ்கண்ட இரு புனித யாத்திரைகளை அறிமுகப்படுத்துகிறோம்.

14.9.2000 முதல் 14 நாட்கள் கொண்ட **மஹாளய பிதுர்முக்தி** யாத்திரை சென்னையில் இருந்து 3 டயர் கேரேஜ் மூலம் ***கௌஹாத்தி, அலகாபாத், அயோத்யா, காசி, கயா*** சென்றுவர நபருக்கு ரூ. 6000/-

23.10.2000 முதல் – 23 நாட்கள் கொண்ட **தீபாவளி கங்கா ஸ்நானம்** காசி யாத்திரை ஸ்பெஷல் சென்னையிலிருந்து 3 டயர் கேரேஜ் மூலம் ***காசி, கயா, அலகாபாத், அயோத்யா, ஹரித்வார், டில்லி, குருவாயூர், கன்னியாகுமரி, மதுரை, ராமேஸ்வரம்*** சென்று வர நபருக்கு ரூ.9000/-

குறிப்பு 1. 60 நாட்கள் முன்னதாக டிக்கட் ரிசர்வ் செய்ய வேண்டியிருப்பதால் நபருக்கு ரூ. 2000 செலுத்தி முன் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

2. எங்கள் சார்ஜுகளில் ரயில், பஸ் சார்ஜுகள், ஆகாரம், தங்கும் ரூம் வாடகை மற்றும் ஊர் சுற்றிப் பார்க்கும் செலவுகள் அடங்கும்.

3. தங்களுடைய புனித யாத்திரையை வீடியோவில் பதிவு செய்து தருகிறோம்.

மேலும் விவரங்களுக்கு திருமதி P. தீபா
பிரியா யாத்ரா சர்வீசஸ்,
ஆனந்த் அப்பார்ட்மெண்ட்ஸ் (இரயில்வே ஸ்டேஷன் எதிரில்)
பிளாட் நெ. B 2, மறைமலைநகர் 603 202
போன் நெ: 915-68452 STD - 04114-68452
E-mail : pys52@mail city.com




# வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.


அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
42, காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம் – 612 001.
Website : www-Kumbakonamonline.com/vedapadasala

☎ : (0435)
Off : 425948
Fax : 423777
Patasala : 422866


"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்கக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 457 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 171 மாணவர்களுக்கு 14 வேத, சாஸ்திர அத்யாபகர்கள், புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். ***புதிய பாடசாலை கட்டிட நிர்மாணப்பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நன்கொடை வரவேற்கப்படுகிறது.***

| தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு<br>திட்ட விபரங்கள் | ஒரு முறைக்கான நன்கொடை தொகை (One Time) | நிரந்தர வைப்பு நிதி 'Corpus Fund' |
|---|---|---|
| ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை) | Rs. 500 | Rs. 5000 |
| அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) த்வாதசி ஸமாராதனைக்கு | Rs. 1,500 | Rs.15,000 |
| பௌர்ணமி ஆயுஷ்ய ஹோமம் | Rs. 1,000 | Rs.10,000 |
| ஒரு வேதம் பயிலும் மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/- | Rs. 12,000 P.A | Rs. 1 Lakh |

Cross செய்யப்பட்ட D.D.-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

# கண்ணால் காண்பது மெய்!




திருச்சியில் இயங்கும் 'ஆர்பிட்' தொழிலகம் பெரிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய சிறு உதிரி பாகங்களைத் தயாரித்துத் தரும் நிறுவனம். இங்கு பணியாற்றும் அத்தனை பேரும் பார்வை அற்றவர்கள்.

துவக்க காலத்தில் சாக்பீஸ், மெழுகுவர்த்தி, சோப்புக் கட்டி முதலியன தயார் செய்து வந்துள்ளார்கள். நாட்கள் செல்லச் செல்ல பார்வையற்ற தொழிலாளிகள் 'ஆர்பிட்' நோக்கி வந்து குவியத் தொடங்கினர். அவர்களுக்கெல்லாமும் பயன் தரவென, இது ஒரு சிறு என்ஜீனியரிங் நிறுவனமாகத் தன்னை வளர்த்துக் கொண்டு விட்டது!



"திருச்சி பாய்லர், ராணிப்பேட்டை பி.ஹெச்.இ.எல். ஆகிய நிறுவனங்கள் தொடர்ந்து உதிரி பாகங்கள் செய்து தரும் ஆர்டர்கள் கொடுத்து உதவுகின்றன" என்று கூறுகிறார் இதன் செயலாளர் மார்ட்டின் ராமையா. இத்தொழிற்சாலையின் வழிகாட்டியாகச் செயல்படும் இவரும் பார்வை யிழந்தவர்.

இப்பொழுது 'ஆர்பிட்'டில் கண் பார்வையிழந்த முப்பத்து மூன்று பேர் வேலை செய்து வருகிறார்கள். கனரக இரும்பு எந்திரங்களுக்கு அருகே நின்று இவர்கள் வேலை செய்யும் பொழுது இவர்களைக் கண்காணித்துக் கொள்ளவும், உதவி செய்யவும் என உடல் ஊனமுற்றோர் ஐந்து பேர் பணிபுரிந்து வருகிறார்கள். ஆறு அல்லது ஏழு பேர் கொண்ட ஒரு குழுவுக்கு ஒரு நபர் வீதம் மேற்பார்வையிட்டு வேலைகள் நடந்து முடிகின்றன!

"பார்வையில்லாதவருக்கென்று துவங்கி நடத்தப்பட்டு வரும் இன்ஜீனியரிங் தொழிற்சாலை இந்தியாவில் இது ஒன்றுதான்" என்று சொல்கிறார் இதன் மேலாளர் சிவக்குமார்.

இங்கு வேலை பார்க்கும் பார்வையிழந்தோர் அனைவரும் விழியிழந்தோர்க்கென்று நடத்தப்பட்டு வரும் தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் (கிண்டி, டேராடூனில் உள்ளன) பயின்று வந்தவர்கள்.

ஆர்பிட்டில் இப்போது தொலைத் தொடர்புத் துறைக்கென 'பில்லர் பாக்ஸ்' தயாரிப்பு வேலைகள் முழு மூச்சாக நடைபெற்று வருகிறது.

"இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எங்களுக்கு ஆர்டர்கள் வருவது சற்று மந்தமாகிப் போனது. அப்பொழுதிருந்து தொழிற்சாலைக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடி பெரும் சவாலாகி விட்டது. இந்த ஆண்டு எங்களுக்கு ஆர்டர்கள் நிறைய வந்துள்ளன!" என்கிறார் சிவக்குமார்.

"இந்த வருடம் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனிலிருந்து எங்களுக்கு ஆர்டர்கள் வரவிருக்கின்றன. வருகின்ற வேலைகளை முடித்துத் தர வேண்டும் என்கிற உறுதியும், மனவலுவும் எங்களுக்கு நிறையவே இருக்கின்றன. இருப்பினும் நிதிப் பற்றாக்குறையில் சிக்கித் தவிக்கும் எங்களுக்கு ஏதாவது ஒரு வகையில் அரசின் உதவியும் கிடைத்தால் நன்றாக இருக்கும்!" என்கிறார் மார்ட்டின் ராமையா.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ஜூரிச்சில் அதைப் பார்த்தோம்- இந்திய அரசியலை (வேறு பல நாடுகளின் அரசியலையும்தான்) ஆட்டி வைக்கின்ற ஸ்விஸ் வங்கி!

ஸ்விட்ஸர்லாந்தின் தொழில்-வர்த்தகத் தலைநகரான ஜூரிச்சின் 'பான்ஹாஃபன் ஸ்ட்ராஸ்' வீதி முழுவதும் வங்கிகள்தான்.

பல சிறு மாநிலங்கள் இடம் பெற்ற ஒரு சமஷ்டி அரசாக இருந்த ஸ்விட்ஸர்லாந்து 1848ல்தான் ஒரே அரசாங்கத்தின் கீழ் ஒருங்கிணைந்த நாடாக மாறியது.

'பூவா'வுக்கு என்ன செய்யலாம் என்று பார்த்த அரசாங்கம் சுலபமான வழியாக எல்லா நாட்டுப் பணத்தையும் கேள்வி கேட்காமல் சேமிப்பில் வைத்துக் கொள்ள முடிவு செய்தது.

'அகவுண்ட் ஆரம்பிக்கணுமா, ரேஷன் கார்டைக் கொண்டுவா! அம்பதாயிரம் எஃப்டியா, பாஸ்போர்ட் சைஸ் போட்டோ தர வேண்டும்' என்று உழைத்துச் சம்பாதித்த பணத்தை வாங்கி வைத்துக் கொள்வதற்கே நம் வங்கிகள் பாடாய்ப் படுத்தும் போது, பெயரைக் கூட கேட்காமல் பாங்க் அகவுண்ட் பதிவு செய்து ஒரு 'எண்' மட்டும் தருகிற 'சுலப' கலாசாரம் சுவிட்ஸர்லாந்தில் வளர்ந்தது. கண்ணுக்குத் தெரியாத எக்கச்சக்க வருமானத்தை அரசுக்குப் பெற்றுத் தந்தது. பாரம்பரியமாகவே வங்கித் தொழிலில் வித்தகர்களாக விளங்கிய சுவிஸ் நாட்டு மக்களின் மனப்போக்கும் இதற்குப் பெரிதும் உதவியது.

அந்நியச் செலாவணியைக் கொண்டு வந்து குவித்த மற்றொரு துறை- சுற்றுலா. திரும்பிய பக்கமெல்லாம், வரைந்து வைத்த சித்திரமாக இயற்கை விகசித்திருக்கிறது. அதில் திளைத்துத் திரும்பினால் நகர்ப்புறங்களில் வசீகரிக்கும் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்கள். பணக்கார டூரிஸ்டுகளின் பர்ஸ்களைக் காலி செய்ய வைப்பதற்கு

# ஒரு ஸ்பூன் ஜெர்மனி; அரை

# 7



# ...ஸ்பூன் ஸ்விட்சர்லாந்து!

ஸ்ரீதா ரவி


வேறென்ன வேண்டும்!

தொழில் வர்த்தகத் தலைநகரின் ஜனத் தொகையே 3.6 லட்சம்தான். ஆனால் கடைகள்? திரும்பிய பக்கமெல்லாம் பர்ஃப்யூமரி, பொட்டீக், சாக்லேட் ஸ்டோர், ஒயின் கடை என்று வசீகரித்துக் கொண்டேயிருக்கின்றன. உள்ளூர்க்காரர்களை நம்பி அவை நடத்தப்படவில்லை என்பதை விலைகளே உணர்த்தி விடுகின்றன.



**இ**ந்திய நடிகர்கள் தேனிலவுக்குப் போகுமிடம் சுவிட்ஸர்லாந்த். ஹாலிவுட் நடிகர்கள் ரிடையர்மென்ட்டுக்கு நாடும் இடம் சுவிட்ஸர்லாந்த். சார்லி சாப்லின் தொடங்கி லிஸ் டெய்லர், ஆட்ரி ஹெப்பர்ன்வரை பிரபல நட்சத்திரங்கள் பலர் இந்த நாட்டில் வீடு வைத்திருந்தார்களாம்.

"எத்தனை பெரிய நட்சத்திரமாயிருந்தாலும் சரி... வீதியிலே நடந்து போகும்போது எங்க ஜனங்க முறைச்சு முறைச்சுப் பார்க்க மாட்டாங்க; சுத்தி நின்னு கூட்டம் போடவும் மாட்டாங்க. இந்தச் சுதந்தரத்துக்காகத்தான் டீனா டர்னர் இங்கே வந்து குடியேறினார்..." – சூசன்பர்க் ஸ்ட்ராஸ் என்ற வீதியைக் (ஸ்ட்ராஸ்–வீதி) காண்பித்து விளக்கினார் ஜுரிச் நகர சுற்றுலா அலுவலகத்தைச் சேர்ந்த வழிகாட்டி.



"ஆனால் பாருங்கள், ஒரு வேடிக்கையான பிரச்னையால் காலி பண்ணிக் கொண்டு போய்விட்டார்... அதோ பாருங்கள்..."

அவர் சுட்டிக் காட்டிய திசையில் மரங்கள் அடர்ந்த ஒரு சிறு நிலப்பரப்பு.

"அதுதான் ஜுரிச் நகரத்தையொட்டி இருக்கிற வனப் பகுதி. ஒவ்வொரு வாரமும் சனி ஞாயிறானால் அங்கே போய் நாங்க குடும்பத்தோட கடை விரிச்சுடுவோம்... அங்கேயே சுள்ளி பொறுக்கி, தணல் மூட்டி, ஒரு சின்ன சட்டியில் சாஸஜ் என்கிற மாமிசத்தை வறுத்துச் சாப்பிட்டுக்கிட்டேயிருப்போம்... வீ லவ் சாஸேஜஸ்! ஆனா பாருங்க, பாவம் டீனா டர்னர்! அவருக்கு சாஸேஜ் வறுக்கிற வாசனை துளிக்கூட பிடிக்கவில்லை! அதனால்தான் காலி

பண்ணிக்கிட்டுப் போய்ட்டாங்க...!"

அனேக ஸ்விஸ் நகரங்கள் போல் ஜூரிச்சிலும் அழகான ஏரி இருந்தது. 88 கி.மீ. பரப்பளவு! ஹம்ஸங்கள் நீந்திக் கொண்டிருந்தன. சீன் நதி நகரின் புராதனப் பகுதியில் ஓடுகிறது. நீர்வளமும் பொருள் வளமுமாக நகரம் கொழிக்கிறது.

கம்பீரமான கட்டடங்களில் பல்கலைக் கழகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன– கட்டடக் கலைக்கான பல்கலைக் கழகம், பொறியியல் பல்கலைக் கழகம் ஆகியவை பிரதானம். அவற்றின் சுற்றுச் சுவர்களில் விசித்திரமான சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. காட்ஃப்ரீட் ஸெம்பர் என்ற பிரபல கட்டடக் கலை நிபுணர் வரைந்தவையாம்!

கிரேட் மினிஸ்டர் சர்ச், நகரின் அடையாளச் சின்னமாகவே மாறியிருக்கிறது. உள்ளே அழைத்துப் போகிறார்கள்.

பிரார்த்தனை நேரமல்ல என்றாலும் ஆளற்ற, அரவமற்ற அந்தச் சூழலில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக கோடானு கோடி இதயங்கள் உச்சரித்த பிரார்த்தனைகளின் எதிரொலி சுவர்களிலிருந்து மெள்ளக் கசிந்த வண்ணமிருக்கிறது.

சர்ச்சுக்குப் புகழ் சேர்க்கும் வண்ணக் கண்ணாடி (ஸ்டெய்ன்ட் கிளாஸ்) ஜன்னல்கள் பற்றி விளக்கம் தருகிறார்கள். மார்க் சாகல் என்ற நிபுணர் இவற்றை இரண்டாம் உலகப் போருக்குப் பிறகே வடிவமைத்துப் பதித்திருக்கிறார். இந்த ஐந்து ஜன்னல்களைக் காட்டிலும் புராதனமானவை பக்கச் சுவர்களில் இருந்தாலும் நேர் எதிர் சுவரில் பதிக்கப்பட்ட நவீன பாணி ஜன்னல்கள் தான் முதலில் ஈர்க்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம். ஒவ்வொரு நிறத்துக்கும் ஒரு மறை பொருள்.

கிறிஸ்து பிறந்தபோது மூன்று மன்னர்கள் பெத்லஹேமுக்குப் பரிசுப் பொருள்கள் எடுத்துச் சென்றார்கள் அல்லவா...? அவர்கள் மூவரும் இந்த சர்ச் இன்று நிற்கும் இடத்தில் தங்கி இளைப்பாறிச் சென்றதாகப் புராணம் இருக்கிறது.

பள்ளி நேரமானாலும் சில குழந்தைகள் சர்ச்சுக்குள் ஓரமாக உட்கார்ந்திருக்கிறார்கள். வெளியேறும் நேரம் வெட்கமும் சந்தோஷமுமாக, விழுந்த பற்களைக் காட்டி வெகுளிச் சிரிப்புடன் வழியனுப்புகிறார்கள்.

வெளியே... "ஜூரிச் பட்டுத் துணிகளுக்குப் பெயர் போனது... வாங்கிக் கொள்கிறீர்களா?"

நகர் முழுதும் அலங்கரித்து நீர்ச் சொரியும் பூம்புனல்களில் இலவசமாகத் தண்ணீர் குடிக்க மட்டுமே கட்டுப்படியாகும்!

கெஞ்சிய கால்களுக்குச் சற்று ஓய்வு தர வீதியோர காப்பிக் கடையில் அமர்ந்தபோது சுவிட்ஸர்லாந்து மக்களை கொஞ்சம் அண்மையில் பார்க்க முடிந்தது– இரண்டு குழந்தைகளுடன் மல்லுக்கு நின்றபடி காப்பி அருந்திய இளம்பெண்; ரொட்டித் துண்டுகளைச் சிட்டுக் குருவிகளுக்கு இரைத்தபடி நீண்ட நேரம் உட்கார்ந்திருந்த ஒற்றை இளைஞன்; பட்டப்பகல்– பொதுவிடம் என்ற பிரக்ஞையெல்லாம் இல்லாமல் சல்லாபச் சூழலில் திணறிய காதல் ஜோடி, பறித்த புது மலர்களைப் போல் வந்தமர்ந்து ஓயாமல் பேசிய இரு பெண்கள்.... எல்லோருமே அளவெடுத்து செய்த சிலைகளாக... அழகாய் இருந்தார்கள். 'ஜெர்மனியில் பார்த்த உருட்டுக் கட்டை உடல்வாகுக்கும் இதற்கும்தான் எத்தனை வித்தியாசம்!' என்று வியந்த போதே சுவிட்ஸர்லாந்தில் பியர் வெள்ளம் பெருகி ஓடவில்லை என்பதும் ஞாபகம் வந்தது.

ஜூரிச் எங்கள் பயணத் திட்டத்தின் இறுதி நகரம். அதிகாலை லண்டனுக்கும் அங்கிருந்து பிற்பகல் சென்னைக்கும் விமா

**"உங்க மாமியார் பொழைக்கறது சந்தேகம்தான்."**

**"என்ன டாக்டர், குண்டைத் தூக்கிப் போடறீங்க? நேத்துதானே பொழைக்க மாட்டாங்கன்னு உறுதியா சொன்னீங்க!"**

– பா. விஸ்வநாதன்



னம் ஏறியாக வேண்டும்.

'இரவு உணவு ஓர் இந்திய உணவகத்தில்' என்று அழைத்துப் போனார்கள். வழி தேடி அலைந்ததில் பாதியும் பத்து நாள் ஓயாமல் சுழன்றதில் மீதியுமாக முழுமையாகச் சோர்ந்து போய் ஸ்தலத்தை அடைவதற்குள் உரிய நேரம் தாண்டிவிட்டிருந்தது.

ஹோட்டலின் இந்திய உரிமையாளர் ஹிந்தியில் கத்தித் தீர்த்துவிட்டு உணவு பரிமாறினார். சொல்லில் இருந்த காரம் உணவில் இல்லாதது தெய்வாதீனம். விமானம் ஏறுவதற்கு முன்பே இந்தியாவை அனுபவிக்க ஆரம்பித்தாயிற்று!

நகைக் கடை போல் ஜொலித்த ஜூரிச் விமான நிலையம் அடைந்து, சென்னை வரை பெட்டிகளை 'செக் இன்' செய்து லண்டன் ஹீத்ரோவில் புடைவைகளைப் பின் தொடர்ந்து போய் விமானம் ஏறி, அதிகாலை நான்கு மணிக்கு (லண்டன் நேரப்படி நள்ளிரவு) பல் தேய்க்காமலே காப்பியும் சான்ட்விச்சும் சாப்பிட்டுவிட்டு மீனம்பாக்கம் வந்து இறங்கினால்,

'அயல்நாடு சென்று வந்த அண்ணன் வாழ்க' கோஷம் காதைக் கிழித்தது! துண்டுகளும் மாலைகளுமாக வாங்கிப் போட்டுக் கொண்டிருந்த ஊர் பேர் தெரியாத அந்தத் தலைவரையும் கூட்டத்தையும் கஷ்டப்பட்டுக் கடந்து வீடு நோக்கிச் செல்ல...

கண்ணில் பட்டது சாலையோர ஏழைக் குழந்தை.

உடம்பில் ஒரு பொட்டுத் துணியின்றி அழுதபடியிருந்த மழலைச் செல்வம்.

சுவிட்ஸர்லாந்தில் சுற்றிக்காட்டிய 'கைட்' ஒருவரிடம் கேட்டது ஞாபகம் வந்தது:

"சுற்றுலா மூலம் நிறைய வருமானம் வருகிறது என்கிறீர்களே...? ஆண்டொன்றுக்கு எத்தனை மில்லியன் டாலர் சம்பாதிக்கிறீர்கள்...?"

"ஹா!" என்று கைகளை விசிறி விசிறிப் பேசினார் அந்தப் பெண்:

"யாருக்குத் தெரியும் எத்தனை வருகிறதென்று...? (We don't think about money; we have it) நாங்கள் பணத்தைப் பற்றி சிந்திப் பதில்லை– அதுதான் எங்களிடம் கொள்ளை கொள்ளையாக இருக்கிறதே!"

சிந்திக்க வேண்டியவர்கள் நாம்தான்!

(முற்றும்)

## ரிமோட் கண்ட்ரோல்

பனகல் பார்க்கில் கூட்டம் நடத்தும் அரசியல் கட்சிகள் தங்கள் ஹைடெக் மோகத்தைக் காண்பிப்பது என்பது தவிர்க்க முடியாததாகிவிடும் போலிருக்கிறது. முதலில் கலைஞர் பிறந்த நாள் பொதுக் கூட்டத்தின் போது. மாடு ஆராய்ச்சி மணி




அடித்து அசத்தியது. பா.ம.கவின் நூறாவது சட்டமன்றத் தொகுதி மாநாட்டின்போது டாக்டர் ராமதாஸ் மகன் டாக்டர் அன்புமணி ரிமோட்டை அழுத்த உயரத்தில் பா.ம.க. கொடி, படபடவென பறக்கத் துவங்கியது. வரும் தேர்தலில் தலைவர்களைப் போன்ற ரோபோக்கள், கையை கூப்பிக் கொண்டு வோட்டு வேட்டை ஆட தெருக்களில் வலம் வரக்கூடும்.

அது சரி; கையில் ரிமோட்டை வைத்திருக்கும் அன்புமணி சொல்லாத சேதி ஏதாவது உண்டா?

– கௌசி

படம்: ராஜன்



# கூறாமல் சந்நியாசம்

**ஸ்**வாமி சிரிக்கிறார் என்றாலே வேதமூர்த்திக்கு உள்ளூர ஒரு நடுக்கம் பரவும். சிரிப்பின் ஆழம் அப்படி! எதிர் மனுஷனை ஆராய ஒரு சிரிப்பு, அவரை அங்கீகரிக்க ஒரு சிரிப்பு, மறுக்க ஒரு சிரிப்பு, சந்தோஷத்தில் ஒரு சிரிப்பு என்று சுவாமி வகை பிரித்துச் சிரிப்பதைப் பார்த்துப் பழகி பதி னோரு வருடங்கள் ஆன பின்னரும் கூட அவரை நேருக்கு நேர் சந்திக்க திராணியற்றவராகவே இருந்தார் அவர். காரணம், முதல் சந்திப்பிலேயே சுவாமி அவரை வீழ்த்தியது அந்தச் சிரிப்பால்தான்!

"என்ன வேணும்?" ரொம்ப நேரமாய்க் கங்கையில் கால்களை அளைந்தபடியே அவரை வேடிக்கைப் பார்த்துக் கொண் டிருந்ததை சுவாமி கவனித்து விட்டார்.

"ச... சந்நியாசம்! எல்லாத்தையும் விட்டுட்டு வந்துட்டேன். மாட்டேன்னு சொல்லாம ஏத்துக்கங்க..."

"நீராடிக் கரையேறிய சுவாமியின் கால்களில் படாரென்று விழுந்தார் வேதமூர்த்தி. சுவாமி ஒரு நிமிடம் யோசித்தார். "இப்போ என்னத்துக்கு? இத்தனை அவசரமா...?" என்றவாறு வேதமூர்த்தியைப் பார்த்தார். அவருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. எதை விட்டு எதைச் சொல்ல என்ற திணறல் வேறு! மதித்துக் கேட்டதற்கு ஏதாகிலும் ஒரு பதில் தர வேண் டுமே என யோசித்து, "ஏதோ... ஒரு தேடல்!" என்று இழுத்தார். கூடவே, "நீங்க

ரோஷினி



தான் எனக்கு ஒரு நல்ல வழி காட்டணும்!'' என்றும் சொல்லி வைத்தார்.

சுவாமி மெல்லிய குரலில் ''ஆசையறு மின்கள்... ஆசையறு மின்கள்!'' என்று பாடிக்கொண்டிருந்தார். ஒருவேளை, சுவாமி காதில் விழவில்லையோ என்று எண்ணி அவர் மறுபடியும் சொன்னார்! சுவாமி ஒரு நிமிடம் போல் கூர்ந்து அவ

ரைப் பார்த்துவிட்டு, "தேடல்தானே! தப்பித்தல் இல்லையே! வேதமூர்த்தி...ம்...?" என்று கேட்டு விட்டு, மெல்லச் சிரித்தார்! பாதி உதட்டை ஒரு பக்கமாய் இழுத்துக் கண்ணைச் சுருக்கிச் சிரிக்கும் சுவாமியின் அந்தச் சிரிப்பா, உள்ளே ஊடுருவிப் பாயும் நேர்ப் பார்வையா? எதுவோ சுருக்கென்று தைக்க, "கடவுளே!" என்று பதறிப் போய் சுவாமியின் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்தார் அவர். மடை திறந்தார்.

"மனுஷன்னா வாக்கு சுத்தம் வேணும்ய்யா! ரெண்டு பேச்சு பேசக் கூடாது! நாலு மாசத்துல தர்றேன்னு சொன்னீர்; என்னாச்சு? வருஷம்தான் நாலாச்சு! ரெண்டே கால் லெட்சம், ஒண்ணு அசலைக் கொடுக்கணும், இல்லே வட்டியைக் கொடுக்கணும்; எதுவுமே இல்லேன்னு அஞ்சு விரலையும் விரிச்சு நீட்டினா எப்படிங்கிறேன்? நான் சிநேகிதக்காரன் தான்; ஆனா கர்ண பரம்பரை இல்லையே? குடும்பஸ்தன் தானேய்யா நானும்! ஏதாவது செய்யுங்க; நானே ஏதாவது செய்யறதுக்கு முந்தி!"

முதலியாரின் முதல் எச்சரிக்கை இது. அடுத்தது அவரது பூனைப்படை வந்தது. அடுத்தது என்ன வரும் என்று வேதமூர்த்திக்குத் தெரியும். சம்பந்த முதலியார் ரொம்ப யதார்த்தம் – வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு எதிலும்! "நான்" குறித்து விடுவார்! அரசல் புரசலாய் அறிந்துகொண்ட வேதமூர்த்தி, எட்டு வயது மகள், மனைவியைக் கொண்டு போய் உறவினர் வீட்டில் விட்டு விட்டு – கிடைத்த ரயிலேறி "சுவாமியே சரணம்" என்று சரண் அடைந்து விட்டார்!

சுவாமி கதையைக் கேட்டதும், "அவசரமில்லே; மடத்து வேலைகளைப் பழகிக்கோ" என்றார். பழகினார்; நாலு வருடம் சமையல் வேலை கூடவே சமஸ்கிருதப் பாடம், மடத்து நிர்வாகம், வரவு செலவு இத்யாதி இத்யாதிகள்... கூடவே, "சுவாமி, என்னை எப்போ ஏத்துக்கப் போறீங்க? சந்நியாசம்?" என்று கண்களில் தேங்கி வழியும் கண்ணீருடனான இறைஞ்சல்கள்...

"வேளை வரட்டும்; அவசரப்படாதே! அவனருளாலே அவன் தாள் வணங்கி!"

சுவாமி பக்கத்தில் உட்கார்த்தி வைத்து, தலை வருடி, சந்தனம் குழைத்து, நெற்றியில் பொட்டு வைத்து விடுவார்! கூடவே அந்தச் சிரிப்பு...

தென்னகத்தில் ஒரு கோயில் கும்பாபிஷேகமாம். ஆதீனம் அழைப்பித்ததாகப் பேசிக் கொள்கிறார்கள். சுவாமி வேனில் அமர்ந்தார். வேன் புறப்படும் சமயத்தில், விடை கொடுக்கத் தயாராய் இருந்த வேதமூர்த்தியைப் பார்த்து, 'வாயேன்!' என்று சிரித்தபடியே அழைத்தார். மறுத்துப் பழக்கமில்லை; மனசுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் அவசரமாய் ஏறிக்கொண்டார் அவர்.


"கோயில் எங்கேன்னு கேட்கலையே நீ...?"

இவர் புறம் திரும்பினார்



'கல்கி' படத்தில் நடித்த ஸ்ருதியை நினைவிருக்கிறதா? அவர் திருமணம் செய்து கொண்டு விட்டார். காதலர் + கணவர்: பிரபல கன்னட நடிகர், இயக்குனர் மகேந்தர். திருமணத்துக்குப் பின் இரண்டு பேரும் சேர்ந்து நடிக்கிற படம்: 'கட்டிமேளா' (கெட்டி மேளம் பொருத்தமான பேர்தான்!) இதனையடுத்து, தயாரிப்பாளர்கள் இந்த இரண்டு பேரையும் ஜோடியாகவே புக் பண்ணுகிறார்கள்!

– எம்.



"அந்தக் கோயிலுக்கு எக்கச்சக்கமான கூட்டம் வர்றது போலிருக்கு!"

"எப்படிச் சொல்றே?"

"அர்ச்சனை டிக்கெட்டை பிளாக்ல விக்கிறாங்கன்னா பார்த்துக்கோயேன்!"

– புளியறை கணேசன்

சுவாமி. அப்படியும் அவர் கேட்க வில்லை. "தமிழ்நாட்ல, கும்ப கோணத்துக்குப் பக்கத்துல ஒரு கிராமம்; அங்கதான் விசேஷம்! ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி திருக் கோயில்! முருகன் அங்கே வந் திருந்து, தவம் பண்ணி, சக்தியிடம் அஸ்திரம் பெற்று சூரசம்ஹாரம் பண்ணியதாய் ஐதீகம்! ஒரிஜினல் சுவாமிநாத சுவாமின்னு சொல்லிட லாம்! ரொம்ப சக்தியுள்ள தெய் வம்!" என்று பொதுவாய் விளக்கி விட்டு, "என்ன வேதமூர்த்தி?" என்றார்.

இதை அவர் எதிர்பார்க்க வில்லையென்பதை அவர் முகமே சொல்லிற்று. சுனையென ஊற் றெடுத்து உடலெங்கும் ஓடும் வியர்வை!

திருவேரகம் – அவர் பிறந்து, வாழ்ந்து, விவசாயம் பண்ணி, குடும் பம் நடத்திக் குப்பைக் கொட்டிய ஊர்! பின்னர் எதுவும் சரிப்படா மல் மானம், மரியாதை, நாலு லட் சம் கடன் என்று எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்த ஊர்! அங்கேயே போ என்று ஏன் விதி கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறது மறுபடியும்? சந்நியாசியும் இல்லா மல் சம்சாரியென்றும் ஆகாமல் – வாழ்க்கை இரண்டுக்குமிடையில் நிம்மதியாகத்தானே உள்ளது சுவாமியோடு! ஏன் இப்போது இந்த ஊர்ப் பிரவேசம்?

"எல்லாம் வித்து, மாடு கன்னு, பித்தளை, வெள்ளி எல்லாம் கொடுத்தும் எழுபத்தியஞ்சாயிரம் தான் தேருச்சு. முதலியார் கால்ல விழுந்து விவரம் சொல்லி, பணம் கொடுத்தேன். மகராசன், வீட்டை யும் எடுத்துக்கய்யான்னதுக்கு "வேணாம், இது மாதிரியே மிச்சப் பணத்தையும் ஏற்பாடு செய். அசல் போதும்னு சொன்னாரு! நிலம் விக்கலை – அவருக்கே எழுதிக் கொடுத்துட்டு – இப்ப குத்தகை எடுத்து விவசாயம் பண்ணுது. ஏதோ வருது! வாய்க்கும் கைக்கும் சரியா!"

ஐந்து நிமிடத்தில் சொல்லி முடித்தாலும் – அவள் எப்படியெல்லாம் அதற்காகக் கஷ்டப்பட்டிருப்பாள் என்று அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. இந்த தைரியம் ஏன் தனக்கில்லை? என்ற கேள்வியும் கூடவே, தவிர்க்க முடியாமல்...


"பொட்டச்சி நான்; சிரிப்பா சிரிச்சி, செருப்பாத் தேஞ்சேன்; பொண்ணைப் படிக்க வெச்சு வேலையும் வாங்கி வைச்சு, வெளியூருக்கு அனுப்பியாச்சு. எந்தக் குறையுமில்லாமத்தான் வளர்த்தேன்! ஆனாலும் அதுக்கு நீங்கயில்லாக் குறைதான் மனசு முழுக்க! எப்ப வரும் அப்பான்னு சதா கேட்டுக் குடையும்!" என்று வேறுபுறம் திரும்பிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"என்ன...? கடைசியா உங்கள ஒரு தரம் பார்க் கணும்னு நினைச்சேன்! பார்த்துட்டேன்! போதும்!" என்று மெல்லத் தனக்கே கேட்கும்படி சொல்லியவள், நிமிர்ந்து நிதானமாய் வேதமூர்த்தியைப் பார்த்து, "கடைசி வரைக்கும் காப்பாத்தணும்னு தோணாம, கஷ்டம்ன்னோடனே விட்டுட்டுப் போயிட்டீங்களே! உங்க வரைக்கும் தப்பிச்சா போதுமின்னு போனீங் களா? நீங்களாவது நல்லாயிருக்கீங்களா?"

மூச்சு விடாமல், இடையில் வேதமூர்த்தியை ஒரு வார்த்தை பேச விடாமல், எல்லாம் கொட்டிய லெட் சுமியம்மாள், கடைசியாய் அந்தக் கேள்வியைக் கேட் டதும் ஆடிப் போனார் அவர்! 'அவர் நல்லாயிருக் கிறாரா?' என்ற கேள்வி அவரையே சுழற்றியடித்தது. கண்களில் நீர் வழிய, வார்த்தையேதும் சொல்லாமல், கையெடுத்து அந்த அம்மாளைக் கும்பிட்டு விட்டு விடுவிடென்று வெளியே நடந்தார்.

சுவாமி அவரைச் சிரித்தபடியே வரவேற்றார்! "இந்தா, பிரசாதம்!" என்று சந்தனம் குழைத்து பொட்டு வைத்துவிட்டு, "ரொம்ப நாளா வேண்டிட்டு இருந்தியே சந்நியாசம், எப்ப வாங்கிக்கறே?" என் றார்!

நம்ப முடியாமலும், புரிந்தும் புரியாமலும் அவர் சுவாமியை ஏறிட்டார். அவர் சிரித்துக் கொண்டிருந்தார் – வழக்கம் போலவே!



"தலைகீழா நின்னு பார்த்துட்டேன். முடியலை!"
"என்ன முடியலை?"
"சிரசாசனம் செய்யத்தான்!"
– டேவிட் ராஜசீலன்



## மனசுக்குள் மண்வாசம்

– இந்தியாவின்
'ஆன்மா'வுக்கொரு
சுற்றுலா





தடயவியல் வல்லுநர்
சந்திரசேகரன் எழுதும்

## கிரிமினல்கள் ஜாக்கிரதை!

– பரபரப்பான
அனுபவத் தொடர்

**கல்கி** அடுத்த இதழ் ஆண்டு மலர் **இரண்டு புத்தகங்கள்!**

---


# ஸ்ரீ ராம பக்த ஹனுமான்



கல்யாணபுரம்

## ஆராவமுதன்

எழுதும்



–தெய்வீகத்
தொடர்
ஆரம்பம்!

# பா.ராகவன் எழுதும்

# அலை உறங்கும் கடல்



ராமேஸ்வரப்
பின்னணியில் நெகிழ்ச்சியூட்டும்
புதிய தொடர்கதை

# லாஜிக் லாவண்யா

– மாதுரி & அரஸ்
கூட்டணியின் புதிய
கார்ட்டூன் கலாட்டா



## அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி

முடிவுகள் +
முதல் பரிசுக் கதை



# வகையான கலவையில்



பிச்சகிரி என்று ஒரு சங்கீத வித்வான், 'உங்க நாதஸ்வரக்காரர் வாசிப்பெல்லாம் ஒரு வாசிப்பா?' என்று தவில் வித்வானிடம் மட்டம் தட்டிப் பேச, சட்டென்று கோபம் வந்து விடுகிறது தவில்காரருக்கு. "அவர் வாசிக்கிறபோது, முன்னாடி உட்கார்ந்து கச்சேரி கேளு! உன்னையும் மீறி, இசையில் லயித்து சபாஷ் போட்டுடுவே!" என்று சவால் விடுகிறார்.

நாதஸ்வர வித்வான் ஒரு வீட்டில் வாசிக்கிற போது, முன் வரிசையில் நாற்காலி போட்டு அமர்ந்து, சவாலில் ஜெயிக்கும் நோக்கத்துடன் மரக்கட்டை போல முகத்தை வைத்துக்கொண்டு இசையைக் கேட்கிறார். இசை பிரவாகம் எடுக்கிறது. ஒரு கட்டத்தில், செயற்கையாய் தனது உணர்ச்சியைக் கட்டுப்படுத்தப் போராடி, இறுதியில் மூர்ச்சையடைந்து சாய்கிறார்.

இந்தக் காட்சி இடம் பெறுவது 'நாதஸ்வர ஓசையிலே' டீ.வி தொடரில். திருவாவடுதுறை என். ராஜரத்தினம் பிள்ளையின் வாழ்க்கை வரலாறு. தூர்தர்ஷனில் வருகிற தொடர் இது.

"இந்தத் தொடரை எடுக்கத் திட்டமிட்ட போது அதைப் பாராட்டி வரவேற்றவர்களைவிட, 'எதற்கு வீண் முயற்சி?' என்று அதைரிய மூட்டியவர்கள்தான் ஏராளம். டீ.வி தொடர் என்றதும், டாகுமெண்டரி போல இருக்கும்; யார் இதை எடுக்கப் பணம் போடுவார்கள்? மெகா தொடர் பார்க்கிற மக்கள் இதையெல்லாம் பார்க்க மாட்டார்கள்' என்று கூறியவர்கள் பட்டியல் நீளமானது!" என்கிறார் இதன் திரைக்கதை ஆசிரியர் சந்திரஜெயன்.

"மங்கள இசை மன்னர்கள் என்று நாதஸ்வர வித்வான்களைப் பற்றி ஒரு புத்தகம் பல வருடங்களுக்கு முன்பு வெளியானது. துமிலன்கூட, டி.என்.ஆர் பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். இரண்டும் எனக்கு ரொம்ப உதவியாக இருந்தன. தவிர, தஞ்சை மண்ணில், அவருடன் கூட வாசித்த வித்வான்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களிடம் பேசி நிறைய தகவல்கள் சேகரித்தேன். பலர், மனம் நெகிழ்ந்து, கண் கலங்க பல சம்பவங்களை நினைவு கூர்ந்தார்கள். டீவி தொடர் என்பதால், அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களிலிருந்து சுவாரசியமான வற்றைத் தேர்ந்தெடுத்து, தொகுத்திருக்கிறோம்" என்கிறார் சந்திரஜெயன்.

* கணேசன்



"தொடரில் இடம் பெற்றிருக்கும் அனைத்துமே உண்மைச் சம்பவங்கள் தானா?"

"இல்லை. டாகுமெண்டரி என்ற முத்திரை குத்தப்படக் கூடாது என்பதற்காக, கொஞ்சம் கற்பனையும் கலந்திருக்கிறோம். கற்பனைகூட, இசையின் வலிமையை எடுத்துச் சொல்வதற்காகத்தான்! உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன். இசைக்கு மத வேறுபாடு கிடையாது என்பதைக் காட்ட, கரீம்பாய் என்ற முஸ்லிம், டி.என்.ஆரை ஒருநாள், தன் பேரனின் பெயர் சூட்டு விழாவுக்கு, வாசிக்க அழைத்துப் போகிறார். மனம் லயித்து அங்கே வாசிக்கிற டி.என்.ஆர் முடிவில் நாதஸ்வரத்திலேயே இஸ்லாமியரின் அல்லாஹு அக்பர் வாசித்து, அனைவரையும் நெகிழ வைக்கிறார். மத நல்லிணக்கம்தான் இந்தக் கற்பனையின் நோக்கம்."

தொடரின் பெரும்பகுதி எடுக்கப்பட்ட நிலையில்,





வீடியோ பிரதியொன்று முதல்வர் கருணாநிதியின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தொடரைப் பார்த்த முதல்வர், சில காட்சிகள் டி.என்.ஆர் வாழ்க்கையில் நடந்தவைதான் என்றாலும், நூற்றாண்டு கண்ட அந்த இசை மேதையின் புகழுக்கு சிறப்பு சேர்க்காது என்பதால் நீக்கி விடும்படி ஆலோசனை கூறினாராம். அதன்படி, அந்தக் காட்சிகள் நீக்கப்பட்டு விட்டன.

நாதஸ்வர ஓசையிலே தொடரில் டி.என்.ஆரின் ஒரிஜினல் வாசிப்பையே பெரும்பாலும் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றாலும் ஆங்காங்கே காருக்குறிச்சியின் நாதஸ்வரமும் உள்ளது!

# வரலாறு + கற்பனை!

தொடரின் மிக முக்கியமான அம்சமே டி.என்.ஆர்.ஆக நடித்திருக்கும் நடிகர் ராஜேஷ்தான். பிரேமுக்கு பிரேம் தூள் கிளப்பியிருக்கிறார்.


“எனக்கு பட்டுக்கோட்டைதான் சொந்த ஊர். ஆகவே சின்ன வயசிலேயே ராஜரத்தினம் பிள்ளை பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். மாமேதையான அவருடைய திரைக் கதா பாத்திரத்தில் நான் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது பெரும் பாக்கியம்! என்னிடம் கேட்டவுடன், மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டேன்” என்கிறார் ராஜேஷ்.

“இதற்காக நீங்கள் நாதஸ்வரம் வாசிக்கக் கற்றுக் கொண்டீர்களா?”

“ஒரு வாரம் விரல்களுக்குப் பயிற்சி எடுத்துக் கொண்டேன். மற்றபடி எனக்கு நாதஸ்வரம் வாசிக்கத் தெரியாது. தில்லானா மோகனாம்பாள் படத்தை இரண்டு, மூன்று தடவை போட்டுப் பார்த்து, நெளிவு, சுளிவுகளைக் கவனித்துக் கொண்டேன்.

“நாதஸ்வர ஓசையிலே தொடர், தூர்தர்ஷனால் 1995 ஆண்டே தேர்வு செய்யப்பட்டது. 1998ல் பிள்ளையின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட போதே ஒளிபரப்புவதற்கு தூர்தர்ஷன் நேரம் ஒதுக்கியிருந்தால், விளம்பரதாரர்களின் ஆதரவு திரட்டுவது சுலபமாக இருந்திருக்கும். சாடிலைட் சானல்களின் ஆக்ரமிப்பு பூதாகாரமாகி விட்ட இன்றைய சூழ்நிலையில், விளம்பரதாரர்கள் கிடைப்பது நல்ல இசை போலவே அரிதாக உள்ளது. பார்த்தவர்கள் பாராட்டுகிறார்கள் என்றாலும், இன்னும் நிறைய பேர் பார்க்க வேண்டும் என்பதே எங்கள் ஆசை!” என்கிறார் தயாரிப்பாளர் குத்தாலம் கணேசன்.

— **கௌதம் ராம்**



# கண்ணாடி மதில்கள்

❑ நீயும் நானும்
உயிர் மெய் எழுத்துக்கள்.

❑ ஓடைமீன்
ஆற்றுக்கும்
ஆற்றுமீன்
கடலுக்கும்
குளத்துமீன்
மண்ணோடு மக்கி
மடிவது போல்
முடிவேன் நான்
உன்னோடு.

❑ என் ஜென்மநட்சத்திரம்
உன் மேலுதட்டு மச்சம்.

❑ உன் உதடுகளுக்கும்
என் உதடுகளுக்கும்
நடுவே
ஒரு கண்ணாடி மதில்.

❑ மனக்குகை முழுவதும்
உன் மாய ஓவியம்
மறக்கவேண்டிச்
சுரண்டச்
சுரண்ட
நகக் கண்களில் கசியும்
நம் காதல்.

❑ உன் கிரகணம் விழுங்கிய
சூரியன்நான்.
உன்னைப் பிறையாகச் சூடிய
சிவனும் நான்.

❑ பனிப் படலங்களாய்
உறைந்து கிடந்தேன்.
உன் ஞாபகச் சூரியனின் உக்கிரத்தில்
உருகி ஓடி வருகிறேன்.
உன் சங்கமத்திற்காக
உன் தகிப்பில்
உருகி உருகியே பெருகுது
என் கவிப் பிரவாகம்.
இதில்
ஒரு கை அள்ளிப் பார்த்தாலும்
பார்ப்பவர் முகமல்ல
உன் முகமே தெரியும்.

— இளையபாரதி


Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

அருமையான உங்கள் வீடுகளுக்கு

அழகும் உறுதியும் நிறைந்த

# மாயூரம் டிம்பர்

## கதவுகள்



- ★ தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தர மரம்
- ★ சரப்பதம் குறைக்கப்பட்டது.
- ★ ரசாயன கலவை பாதுகாப்பு
- ★ நேர்த்தியான இயந்திர வடிவமைப்பு

**MADE TO ORDER BY:**

# MAYURAM TIMBER

**& General Trading Corpn.**

Showroom: 13, Rameswaram Road, T. Nagar, Chennai - 600 017.
Phone: 4345207

H.O.: 83, G.S.T. Road, Tambaram, Chennai - 600 045, Tel: 2368297

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka


# ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி




## நவரத்தின மோதிரம் அணிந்தால் மிகவும் நல்லது



P.R.ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்து பயன்பெறுங்கள்.
ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ.400/-



ராசிக்கல் மோதிரங்கள், தங்கம், வெள்ளி, வைரம் வாங்க சிறந்த இடம்.

# பி.ஆர். நகை மாளிகை

102. உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை – 600 017.
போன்: 4344442 / 4327764